திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
10/ஆ/74
9 JAN 1974
GAZETTEER UNIT, MADRAS-8



தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு



திருவாரூரில் நடைபெற்ற 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. அவர்களின் திருவுருவச்சிலை திறப்பு விழாவில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர், அமைச்சர் மாண்புமிகு மன்னை. ப. நாராயணசாமி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C., மொழிநூற் பேரறிஞர் திரு. ஞா. தேவநேயப்பாவாணர், புலவர் பெருஞ்சித்திரனார், புலவர் த. சரவணத்தமிழன் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

பொருளடக்கம்

தை மாத சிறப்பிதழ்

1. திருமுறைகளின் பெருமை
2. தற்சிறுமை
3. அப்பரும், இராமலிங்க அடிகளும்
4. மருகலான் அடி
5. ஆனைக்கா அண்ணலும், அகிலம்மையும்
6. திருமூலர் காட்டும் அறம்
7. திருமங்கையாழ்வாரின் சிறப்பியற் பண்பு
8. திருப்பாவைச் சிறப்பு
9. தந்தை பெரியாருக்குப் புகழ்மாலை
10. நிறைந்துயர்சீர்த் திரு. வி. க.
11. இறையருள் பெறும்நெறி
12. காமனைக் காய்ந்த கண்ணுதல்
13. திருமுறைக் கருத்தரங்கம்
14. திருவாய் மொழிப்பிள்ளை
15. சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்கல்
16. மூவண்ணப்படம் அருள்மிகு அகிலாண்ட நாயகி அம்மை—திருவானைக்கா.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.



மாலை 16 | பிரமாதீச — தை — சனவரி, சிறப்பிதழ் 1974 | மணி 4

திருமுறைகளின் பெருமை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

தமிழ்நாடு எத்துணையோ பவ வகைகளில் தனிப்பெருஞ் சிறப்புடையது. ஆயினும், இந்நாளில் அதன் பழம் பெருமைகள் பலவும் அத்துணை விளக்கம் பெற்று இலங்கக்காண்கின்றிலம். எனினும், தமிழ்நாடு இன்னும் ஒரு சிறிதளவாதல், "இங்குளி வாங்கும் கலம்" (பெருங்காயச் சிமிழ்) போல, மங்காப் புகழொளி வீசித் திகழ்ந்து கொண்டேவருகின்றது.

அதற்குரிய சிறந்ததொரு பெருங் காரணமாகத் திகழ்வன "செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்" அமைந்த அருந்தமிழ்க் கவிதைகளேயாகும். "இங்கிலாந்து தேசம் வேறுபிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே இத்துணைச் சிறந்த புகழ் வாய்ந்ததாக விளங்குகின்றது" ("By nothing is England so glorious as by her poetry"—Matthew Arnold) என மேத்யூ ஆர்னல்ட் என்னும் ஆங்கில அறிஞர் ஒருவர் மொழிந்தமை, நம் அருமைத் தமிழ்நாட்டிற்கே மிகவும் இயைந்ததாக உள்ளது.

தமிழ் மக்களின் நயத்தக்க தனிநாகரிகம், தமிழ்க் கவிதைகளின் வாயிலாகத்தான், உலக அரங்கில் இன்று ஓரளவேனும் மதிக்கப்பெற்று விளங்கிவருகின்றது. தமிழ்நாட்டிற்கு இற்றை ஞான்றுள்ள பெருமைகள் எல்லாம், பெரும்பாலும் அதன் அழகிய இனிய அரிய கவிதைகளினால் எஞ்சி நின்றனவேயாகும்.

திருமுறைகளின் சிறப்பியல்புகள்:

தமிழ்க் கவிதைகளோ பலப்பல திறத்தன. அவைகளுக்குள்ளே, சைவத் திருமுறைகள் தனிச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தொளிர்வனவாகும். மொழி, சமயம், தத்துவம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, மன்பதை, வாழ்வியல், நுண்கலைகள் என்னும் பலப்பல துறைகளிலும், சைவத் திருமுறைகள் தமிழ் மக்களின் தனிநாகரிக மேம்பாட்டின் நலங்களைத் திறம்பட விளக்கித் தெரிவிக்கும் சிறந்த பெருங் கருவிகளாகத் திகழ்கின்றது எனலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நிகழ்ந்த, இராசராச சோழன் ஐப்பசிச் சதயத் திருநாட் பெருவிழா மலருக்காக எழுதப்பெற்ற கட்டுரை.

—ஆசிரியர்

அருளியல் நிறைமொழிகள் :

கலையறிவுணர்வால் மட்டுமே பாடப்பெற்ற பிற சில உலகியற் கவிதைகளைக் காட்டிலும், இறையருளுணர்வாற் பாடப்பெற்ற திருமுறைகளின் நிறைமொழிப் பாடல்கள், எல்லாவகையாலும் ஏற்றம் மிக்குடையன என்பதில் ஐயமில்லை. "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு" எனவும், "பல நல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்லர் ஆகுதல் மாணார்க்கரிது" எனவும் "நுண்ணிய நூல் பல கல்வினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்" எனவும் ஆசிரியர் திருவள்ளுவர் பலவிடத்தும் பகர்ந்தபடி, எத்துணைதான் சிறந்த கலைநூற் புலவராயினும், அவரெல்லாம் முற்றிலும் பிழையற்ற பெற்றியினராதல் இயலாது. முக்குணவயத் தான்முறை மறந்தறைதல் கலைநூற் புலமையர் எல்லார்க்கும் இயல்பேயாகும்.

158588

ஆனால் 'தவத்தான் மனம் தூயராய்'—'பொறிவாயில் ஐந்து அவித்து'—'ஏகனாகி இறைபணி நின்று' அருள் பெற்றுயர்ந்த 'நிறைமொழி மாந்தர், தம் அருள்மொழிகள், என்றும் 'பொய்யாமொழியாய்' நின்று நிலவி வையத் துயிர்களையெல்லாம் வாழவைத்தருளும் மாட்சிமையுடையன.

திருமுறை நூல்களின் ஆசிரியர்கள் நம்மைப் போன்று மனித நிலையில் இருந்து, அவற்றைப் பாடினர் அல்லர். "எனதுரை தனதுரையாக" எனத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுதற்கேற்ப, இவ்வுலகியல் வாழ்விலேயே சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெற்றுச் சீவன் முத்தர்களாக விளங்கி, அந்நிலையில் அவர்களால் திருமுறை நூல்கள் அருளிச் செய்யப் பெற்றன. இவ்வுண்மை,

"பாலை நெய்தல் பாடியதும்
　　பாம்பொழியப் பாடியதும்
காலனை அன்றேவிக்
　　கராங்கொண்ட—பாலன்
மரணம் தவிர்த்ததுவும்
　　மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்"

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுளால் உணரப்படும். திருமுறைகளின் இணையற்ற பெருமைகளுக்கு இதுவும் ஒருபெருங் காரணமாகும்.

இதுபற்றியே சமய உணர்வும் தெளிவுமுடைய தக்கோர்கள் அனைவருக்கும் திருமுறைகளின் பெருமை, நிலத்திலும் பெரியதாய் - வானினும் உயர்ந்ததாய்-நீரினும் ஆரளவிலதாய்த் தோன்றும் என்பது திண்ணம். பிற்காலத்தே தோன்றியருளிய ஆயிரம் ஆயிரம் அறிஞர்களும் ஆன்றோர்களும் சான்றோர்களும் ஆகிய அனைவரும், திருமுறைகளை ஓதி ஓதியே சிறப்புற்றுயர்ந்துய்ந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

தமிழ்ப்பெருஞ் சான்றோர்கள் :

அணிமைக் காலத்தே பேரருட் பெருஞ் செல்வராகப் பிறங்கியிருந்த அருட்டிரு இராமலிங்க அடிகளார், தேவார திருவாசகத் திருமுறைகளை நாடோறும் தவறாது ஓதியே உயர் நிலை எய்தினர் என்னும் உண்மையினை, அவர் தம் திருமொழிகளாலேயே நாம் செவ்விதின் உணரப் பெறுகின்றோம்.

தேன்படிக்கும் அமுதாம்நின்
　　திருப்பாட்டைத் தினம் தோறும்
நான்படிக்கும் போது, என்னை
　　நான் அறியேன் ! நா ஒன்றோ ?
ஊன்படிக்கும் ! உளம்படிக்கும் !
　　உயிர்படிக்கும் ! உயிர்க்குயிரும்
தான்படிக்கும் ! அநுபவங்காண்
　　தனிக்கருணைப் பெருந்தகையே ! (1)

சேல்வருங் கண்ணி இடத்தோய் ! நின்
　　சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
　　புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரு மாயினும், இன்புரு
　　வாகிக் கனிமனம், அப்
பால்வருமோ ? அதன்பாற் பெண்களை
　　விட்டுப் பார்க்கினுமே (2)

இவ்வோறே வேதாந்த சித்தாந்த சமரசஞானச் சான்றோர் ஆகிய தாயுமான அடிகள் திருமுறைகளைப் பலகாற் பயின்று பாராயணம் செய்து, அவைகள் 'மொழிக்கு மொழி தித்திப்பாக' இருப்பதனை வியந்து பாராட்டி மொழிந்தருள்கின்றார்.

தேவரெலாம் தொழச்சிவந்த
　　செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி
　　தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
　　திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொல்
　　முற்று மோதான்?

N74-16-4 (82)

வாக்கிற் சிறந்த அருணகிரிநாதர், திருமுறை ஆசிரியர்களுள்ளே திருஞான சம்பந்தர்பால் மிகவும் ஈடுபாடும் பக்தியும் வாய்ந்தவராய், அவரை முருகனின் அவதாரம் எனக் கொண்டு பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியிருப்பதுடன், திருஞான சம்பந்தர் போலச் சிறந்த முறைகளிற் பாடும் திறமையினைத் தமக்கு அருள்புரிதல் வேண்டும் என முருகனைப் பரவி த்தொழுது வேண்டுகின்ருர்.

புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல,
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே!

இவ்வாறே சிவஞான முனிவர், குமரகுருபரர்' சிவப்பிரகாசர் முதலிய செந்தமிழ்ச் சைவச் சான்ருேர்கள் அனைவரும், திருமுறைகளின்பாற் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு விளங்கி யிருந்தனர்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைப் போற்றித் தொகுத்து உதவியருளினர். சேக்கிழார் சுவாமிகள் தம்முடையவாழ்நாள் முழுவதும் திருமுறைகளை நுனித்து ஆராய்ந்து திளைத்துக் களித்தார்; திருமுறைகள் என்னும் தெய்விக அமிழ்தத்தினைச் செவ்விதில் நமக்குத் திரட்டிக் கொடுத்தவர் அவரே. பட்டினத்தடிகள் "வித்தகப் பாடல்" எனத் திருமுறைகளை வியந்து போற்றிக் குறிப்பிடுகின்ருர்.

"நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப்பான்"

எனச் சிவபெருமான் திருமுறைகளின்பாற் கொண்டுள்ள சிறந்த ஈடுபாட்டினைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் நன்கெடுத்து மொழிகின்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலத்திற்கு முன்பே "திருமுறை எழுதுவோர் வாசிப்போர்" பெருகியிருந்தனர் என்பதும், அத்தகையவர்களைத் தக்கவாறு பயிற்றி விடுத்தல் சிறந்த பெருந்தொண்டாகக் கருதப்பெற்றுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது என்பதும், கணநாத நாயனர் வரலாற்ருல் அறியப்படுகின்றன.

மெய்கண்டார்:

'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும்" தன்மை வாய்ந்த நிறைமொழிகள் எனத் திருமுறைகளைத் தொன்னெடுங்கால முதலே தமிழ்ப் பெருமக்கள் உறுதியாகத் தெளிந்து கொண்டு, பக்தியுடன் ஓதிப் பயின்று வந்துள்ளனர். திருமுறைகளை ஓதி வழிபடுதலின் வாயிலாக, மக்கள் தாம்தாம் விழைந்த பயன்களை விழைந்தவாறே மிகவும் நிரம்பப்பெற்று, மகிழ்ந்து வந்திருக்கின்றனர். ஆசிரியர் மெய்கண்டார் பெருமானின் வரலாறே இவ்வுண்மைக்குப் போதிய சான்ருகும். நெடுநாள் மகப்பேறு இன்றி வருந்திய அச்சுதகளப்பாளர், அக்குறை தீரப் பொருட்டுத் திருமுறைகளிற் கயிறு சார்த்திப் பார்த்த பொழுது,

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினே டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே.

என்னும் திருஞான சம்பந்தர் பாடல்கிடைக்க, அதன்படியே அவர் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குள நீரில் மூழ்கி இறைவனை வழிபட்டு வர, அதன் பயனுகவே, சைவ சித்தாந்தத் தனிப்பெரு ஞாயிறு ஆகிய ஆசிரியர் மெய்கண்டார், அச்சுதகளப்பாளர்க்கு மைந்தராகத் தோன்றியருளினர் என்பது வரலாறு. திருமுறைகளின் பெருமையை உணர்ந்து கொள்ளுதற்கு இன்னேரனைய உண்மை வரலாறுகள் உறுபெருஞ் சான்றுகளாகும்.

திருமுறைச் சொற்ருெடர்கள் :

செந்தமிழ்ச் சான்ருேர்கள், திருமுறைகளின் பால் எல்லையில்லாத பத்திமை பூண்டு ஒழுகி வந்திருக்கின்றனர். அதனுல் திருமுறைகளில் வரும் சொற்கள், சொற்ருெடர்கள் தாமும், மிகவும் மதித்துப் போற்றப் பெற்றுள்ளன. தமிழ் நூல் உரையாசிரியர்களுள்ளே மிகவும் தலை சிறந்த ஒருவர் நச்சினுர்க்கினியர். அவர் தம் பெயர், ' நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச்சரவனுரே" என்னும் தேவாரப் பாடலை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை இயற்றியவர் அடியார்க்கு நல்லார் என்பவர். "கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே" என வரும் தேவாரத்தை

ஒட்டியே அவர்க்கும் அப்பெயர் வழங்கிற்று. கம்பரை ஆதரித்த திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பரின் இளவல் பெயர் இணையார மார்பன் என்பது. அதுதானும் "இணையார மார்பன் என் எழில் நலம் உண்டு இகழ் வானோ?" எனவரும் தேவாரப்பாடலை ஒட்டியே அமைக்கப் பெற்றது. நீறணி பவளக் குன்றம், எடுத்தபாதம், மழலைப்பொற் சிலம்பு என்பன போன்ற திருவிசைப்பாப் பாடல் தொடர்களும் பிறவும், கல்வெட்டுகளில் எடுத்தாளப் பெற்றுள்ளன.

"நிரம்ப அழகிய தேசிகர் என்பவர் சேது புராணம் முதலியன பாடிய சிறந்த புலவர். சிவஞானசித்தியார்க்கு உரை வகுத்த அறுவர்களுள் அவரும் ஒருவர். அவருக்கு அப்பெயர் "நித்த மணாளர் நிரம்ப அழகியர் சித்தத் திருப்பரால் அன்னே என்னும்" என்னும் திருவாசகத் தொடரால் அமைந்தது. சைவ சித்தாந்த நூலாசிரியர்களுள் ஒருவராய், "உண்மை விளக்கம்" என்னும் நூலினை இயற்றியுதவியருளியவர், மனவாசகங் கடந்தார் என்பவர். அவருக்கும் அப்பெயர் "எனை நான் என்பதறியேன் பகல் இரவு ஆவதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை மத்தோன்மத்தன் ஆக்கினான்" என்னும் திருவாசகப் பாடலை ஒட்டியே வழங்கப்பெற்றது. இவைகளெல்லாம், நம் முன்னோர்கள் திருமுறைகளில் எத்துணைப் பக்திமை மிக்கு விளங்கியிருந்தனர் என்பதனை, நமக்கு நன்கினிது உணர்த்தும்.

மண்ணகத்தில் விண்ணகம்:

இங்ஙனமே திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கோயில்களும் தலங்களுமே சிறப்பும் முதன்மையும் தெய்விகமும் மிக்கனவாகத் தமிழ் மக்களாலும் தமிழ் மன்னர்களாலும் பாராட்டப்பெற்று மிகவும் புகழ் பெற்றுத் திகழ்கின்றன. திருமுறை ஆசிரியர்கள் தோன்றி நடந்து உலவி வாழ்ந்ததன் பயனாகவே, உலகில் வேறு எங்கணும் காண்டற்கரிய நிலையில், எண்ணில்லாத பல பெருங்கோயில்கள் கலை நலஞ் சிறந்த நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, நம் நாடானது "மண்ணகத்தில் விண்ணகம்" (Paradise on Earth) என்று வியக்கும்படி மாட்சிமையுற்று வயங்குகின்றது. இம்மட்டோ! தாம் தோன்றிய காலம் முதல் இதுகாறும் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக, எண்ணிறந்த பல கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தித் தூய்மைசெய்து, அவர்தம் வாழ்க்கையினை வளமுறுத்திப் புனிதமாக்கி உயர்வித்து, உய்வித்து வந்துள்ளவை திருமுறை நூல்களே எனின், அத் திருமுறைகளின் பெருமையினை அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ?

மறுமலர்ச்சி நூல்கள் :

இனி, திருமுறைகளின் பெருமையினை இஞ்ஞான்றை முறையிலும் நாம் ஒரு சிறிது ஆராய்ந்து காண்டல் இயலும். இக்கால மக்கள் சிலர் "மறுமலர்ச்சி நூல்கள்" (Renaissance Literature) என்று ஒரு சில நூல்களைப் பெரிதும் புகழ்ந்து போற்றக் காண்கின்றோம். உண்மையாக ஆராய்ந்தால், சைவத் திருமுறைகள் மறுமலர்ச்சி நூல்கள் எனப் போற்றப்படுவதற்கு மிகவும் தகுதியும் உரிமையும் உடையன எனலாம்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் திருமுறை ஆசிரியர்கள் இந்நிலவுலகில் தோன்றி வாழ்ந்தபொழுது, தமிழ் மூவேந்தர்களாகிய தென்னர் சேரர் சோழர்களின் ஆட்சி நிலை குலைந்தது. தமிழர் அல்லாத பல்லவர் களப்பிரர் முதலிய வேற்றரசர்களின் ஆட்சி தமிழகத்தில் தலை எடுத்து நின்றது. அது பொழுது வடநாட்டில் அர்ஷன் என்னும் பேரரசன் (கி.பி. 606-647) ஆண்டுவந்தான். சாளுக்கிய நாட்டில் இரண்டாம் புலிகேசி (கி.பி. 610-642) என்னும் மன்னன் செங்கோல் செலுத்தினான். காஞ்சிபுரத்தில் மகேந்திரவர்ம பல்லவனும் (கி.பி. 600-630), அவனது மகனாகிய நரசிம்மவர்ம பல்லவனும் (கி.பி. 630-668) அரசோச்சினர். மதுரையில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நெல்வேலிவென்ற நின்றசீர் நெடுமாறன் (கி. பி. 640-670) அரசு கட்டில் வீற்றிருந்தான். சிறுத்தொண்டர் பம்பாய்க்கு அருகேயுள்ள வாதாபி என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் (சி.பி. 642) இரண்டாம் புலிகேசியை வென்று, அந்நகரை அழித்து அங்கே வெற்றித் தூணை நாட்டினார். அதுபோது வேற்று நாட்டு மக்கள் பலர் தமிழகத்தில் பெருந்திரளாகப் புகுந்து கலந்து, தங்களது பொருந்தாத கொள்கைகள் தீய பழக்க வழக்கச் செயல்கள் முதலியவற்றைத் தமிழ் மக்களிடையே திணித்துப் பெரிதும் பரப்பிவந்தார்கள்.

இங்ஙனம் சங்க காலத்திற்குப் பின்னர்த் தமிழ்நாட்டில் நிலவிய இருண்ட காலச் சூழ் நிலைகளால் மங்கி மழுங்கிக் கிடந்த தமிழ் மொழியும் இலக்கியமும் கவிதையும் கலைகளும் தமிழர் வாழ்வும் ஆகியன எல்லாம், திருமுறைகளால் தான் மீண்டும் பொங்கிப் பொலிவுற்றுச் செழித்துச் சிறந்தன. இவைகளெல்லாம் புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சியும், புதுப்புது வகையான அமைப்புகளும் சிறப்புகளும் பெற்று வளர்தற்குத் திருமுறை ஆசிரியர்களே காரணர்கள் ஆவர். சங்ககால நூல்களின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும், திருமுறைகளின் நடையும் போக்கும் கருத்தும் அமைப்பும், வடிவால் வேறுபட்டுத் தோன்றுதல் ஒன்றே, காலநிலையின் விளைவாக எழுந்து சாலத் தழைத்துப் பெருகிய திருமுறைகளை மறுமலர்ச்சி நூல்கள் என வற்புறுத்துதற்குப் போதிய சான்று பகரும். திருமுறைகளின் செந்தமிழ்த் தெய்விக நலங்களுக்கு ஓர் எல்லையே இல்லை.

புதுமை இலக்கியங்கள் :

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பலவகை மாறுதல்களை, அந்நாட்டு மொழியில் வழங்கும் இலக்கியங்களின் நடை மாறுதல்களே நன்கினிது விளங்கக் காட்டும் என்பர் அறிஞர். திருமுறை யாசிரியர்கள் மக்களியக்கத் தலைவர்கள்! பற்பல ஆயிரம் தொண்டர்கள் சூழ நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர்கள்! திருமுறைப் பாடல்கள், நாட்டின் பல பகுதிகளிலும் மூலை முடுக்கர்களிலும் சென்று பாடப்பெற்று, மக்களின் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டு பரவிய மக்கள் இலக்கியங்கள்! திருமுறைகளின் சொல் புதிது, நடைபுதிது, சுவை புதிது! சங்ககால நூல்களோடு ஒப்பிட்டு நோக்கின், திருமுறை நூல்கள் பலவகைகளிற் புதுமை மிக்குத் திகழும் புத்திலங்கியங்களே யாகும் என்று செவ்விதில் தெளிந்து கொள்ளலாம். சங்ககாலச் செந்தமிழ், திருமுறைகளின் காலத்தில் 'தெய்வச் செந்தமிழ்' எனப் புதுமைப் பொலிவு நலம் எய்தியது எனலாம். சங்ககால இலக்கியங்களிற் காணமுடியாத இசை நலஞ்சான்ற அரிய இனிய அழகிய செந்தமிழ்ச் செய்யுள் வகைகளை, நாம் முதன் முதலாகத் திருமுறைகளிலேயே காணப்பெறுகின்றோம்.

1. திருவிராகம்
2. வழிமொழித் திருவிராகம்
3. திருஇருக்குக்குறள்
4. மொழி மாற்று
5. மாலைமாற்று
6. திருத்தாளச் சதி
7. யாழ்மூரி
8. ஏகபாதம்
9. திருவெழுகூற்றிருக்கை
10. சக்கரமாற்று
11. சந்த இயமகம்
12. கூடசதுக்கம்
13. திருநேரிசை
14. திருக்குறுந்தொகை
15. திருத்தாண்டகம்.

என்பனபோலும் பலதிற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப்பாடல்கள், முதல் முதலாகத் திருமுறை நூல்களில்தான் காணப்படுகின்றன. எனவே, திருமுறைகளை நாம் புதுமை இலக்கியங்கள் அல்லது மறுமலர்ச்சி இலக்கியங்கள் எனச் சிறப்பித்துக் கூறுதல் பெரிதும் பொருந்துவதேயாகும்!

திருக்கோயில்களும், திருமுறைகளும்:

கலைகள் பலவற்றிற்கும் இருப்பிடமாக விளங்கும் எண்ணிறந்த பல கோயில்களைத் தமிழ்நாட்டில் நாம் இன்று காண்கின்றோம். இத்துணைப் பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்கள் தோன்றுதற்குக் காரணம், திருமுறைகளே எனக்கூறுதல் மிகையன்று. திருக்கோயில்கள் மக்கட் சமுதாயத்திற்கு விளைவித்து வரும் பலதிற நலங்களுக்கும் அளவேயில்லை.

நம் தமிழ் நாட்டில் பழங்காலத்தில் திருக்கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும், கலைஞர்களின் கலைக்கழகங்களாகவும், அறங்கூறும் அவையங்களாகவும், மருத்துவமனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கு ஊணுடை நல்கி ஓம்பும் புகலிடங்களாகவும், மக்கட்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்து வாங்கி உதவி புரியும் நிதி நிலையங்களாகவும், மன்பதை நலங்காக்கும் மன்றங்களாகவும், போர்க்காலங்களில் படை வீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப்

பெரிதும் பயன்பட்டு வந்தன.* இன்றும் அவற்ருல் விளைந்துவரும் பயன்களுக்கு எல்லையில்லை. இத்தகைய கோயில்களும் சமய நிலையங்களு மெல்லாம் தோன்றுதற்கு வாயிலாக அமைந்த திருமுறைகளின் பெருமை, எம் ஒருநாவாற் கூறல் ஒல்லுமோ?

தலங்களும் வரலாறுகளும்:

திருமுறைகளின் வாயிலாகத் தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான ஊர்களைப் பற்றியும். அவ்வூர்களுக்குச் செல்லும் வழிகளைப்பற்றியும், அவ்வவ்வூர்களிற் காணப்பெறும் பலவகைச் சிறப்பியல்களைப் பற்றியும், நாம் அறிந்து கொள்ளலாம்.

"உள்ளம் ஆர்கொ ருகாதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்"

எனச் சேக்கிழார்பெருமான் பாடுவதுபோல, திருமுறையாசிரியர்கள் சென்ற சிறப்பையோ, அல்லது அவர்களின் திருப்பாடல்களில் எவ்வகையாலேனும் குறிப்பிடப்பட்ட சிறப்பையோ பெற்றுள்ள, எந்த ஊரும், எந்தத் தலமும், எந்தக் கோயிலும், நம்மை 1300 ஆண்டுகட்கு முற்பட்ட காலநிலைக்கு அழைத்துத் கொண்டு சென்று, நம் உள்ளத்தையெல்லாம் உருக்கு கின்றது என்பதில் ஐயம் உண்டோ ?

மேலும் 'நளன்கெழுவி நாளும் வழிபாடு செய்தது நள்ளாறு' என்றும்; 'தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாம் இருவர் புள்ளானூர்க்கு அரையன் இடம்' புள்ளிருக்கு வேளூர் என்றும்; 'முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம் பின்னொருநாள் அவ்விண்ணவர் ஏத்தப் பெயர் வெய்தித் தன் அருளாற் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு' கண்ணூர் கோயில் என்றும்; 'நீலமாமணி நிறத்து அரக்கனை இருபது கரத் தொடுஒல்க வாலினாற் கட்டிய வாலியார் வழி பட மன்னுகோயில்' குரங்காடுதுறை என்றும்; 'வையகம் மகிழ்தர வைகல் மேற்றிசைச் செய்ய, கண் வளவன் முன் செய்தகோயில்' வைகல் மாடக்கோயில் என்றும்; இராமன் இலக்குவன் சாம்பவான் சுக்கிரீவன் அநுமான் ஆகியோர் தொழுதது திருவுசாத்தானம் என்றும்; பல்வேறு தலங்களின் வரலாறுபற்றிய செய்திகளையும் கூட, நாம் திருமுறைகளால் தான் அறிந்து மகிழ்கின்றோம்.

"Above all, temples became centres of religious and social life...As land holder, employer and consumer of goods and services, as bank, school and museum, as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval South Indian temple has few parallels in the annals of mankind".

— Prof. K. A. NEELAKANTA SASTRI, M.A, (The Cholas)

இசைக்கலையின் அரசிருக்கை:

திருமுறை நூல்கள் பலவேறு கலைகளுக்கு நிலைக்களம் எனத் திகழ்வன. சிறப்பாக இசைக் கலையின் அரசிருக்கையாகத் திகழும் சிறப்பு திருமுறைகளுக்கு உண்டு. இசைக்கலையின் சிறப்பை ஷேக்ஸ்பியர் பின்வருமாறு பாடுகின்ருர்:

இனியநல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்,
துனிதரு நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
முதற்பல தீங்கே செய்வான்.
நனிமிகக் கொடியன், அந்தோ!
அவனைநாம் நம்பொ ணாதே! *

—ந. ரா. மு.

இத்தகைய சிறந்த இசைக்கலைத் துறையில் திருமுறைகள் எத்துணைச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன என்பதனை, எண்ணி எண்ணி யுணருந்தொறும் திருமுறைகளின் பெருமை தெளிவுறப் புலனாகும். சுவாமி விபுலானந்தர் அவர்கள் இயற்றியளித்த யாழ்நூல், இவ்வுண் மையைச் செவ்விதின் உணர்த்தும். இம்மட்டோ! தமிழகத்தின் ஐந்திணைக்கும் உரிய கருப் பொருள் வகைகளையெல்லாம் பற்றியும், திரு முறை நூல்களிற் பற்பல குறிப்புக்களை அறிந்து நாம் பெரிதும் மகிழலாம்.

"The man that hath no music in himself. Nor is not moved with Concord of sweet sounds. Is fit for treasons, strategems and spoils. Let no such man be trnstd."

—SHAKESPEARE

அகச்சான்றுகள் :

திருமுறைகள், அவற்றைப் பாடியருளிய அருளாசிரியர்களின் வரலாற்றை உணர்த்தும் அகச் சான்றுகளைத் தம் அகத்தே கொண்டு இலங்குகின்றன. அவ்வகச் சான்றுகளால் (Internal evidences) நாம் அப்பெருமக்களின் வாழ்க்கை பற்றிய பல்வேறு விவரங்களையும் அறிந்துகொண்டு மிகவும் பயன் அடைகின்றோம். லாங்ஃபெல்லோ (H. W. Longfellow) என்னும் ஆங்கிலக் கவிஞர், "சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் நாம் தெய்விகம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளலாம் என நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்துவிட்டுச் செல்லும் அவர்களின் அடிச்சுவடுகள், பிறவி என்னும் கடலில், வாழ்க்கை என்னும் மரக்கலத்தில் ஏறி, வழி தவறித் தடுமாறி நிற்கும் சகோதரர்களுக்குத் தைரியம் அளித்து நலம் புரிகின்றன" என்கின்றார்.*

சீலம் மிக்க பெருமக்கள்
    சிறந்த நல்ல வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
    இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;
கால மணலில் பதிந்தவர்காற்
    சுவடு, வாழ்வாம் கலம் கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
    தைரிய மேகொண் டுயச் செய்யும்!
—ந. ரா. மு.

இதற்கு ஏற்ப, திருஞானசம்பந்தர் ஞானப் பால் உண்ட செய்தி, திருநாவுக்கரசர் சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்ற தன்மை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தடுத்தாட்கொள்ளப் பெற்ற சிறப்பு, மாணிக்கவாசகர்க்காக இறைவன் நரிபரியாக்கிய மாட்சிமை முதலிய பல்வேறு செய்திகளையும், திருமுறைகளின் வாயிலாகவே அறிந்து, நாம் வியந்து மகிழ்ந்து இன்புறுகின்றனம் அல்லமோ?

சித்தாந்த சாத்திரங்கள் :

இன்னனைய எத்துணையோ பல பெருமைகளுள், சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை தோன்றுதற்கு அடிப்படையாக அமைந்த தனிப்பெருஞ் சிறப்பும், திருமுறைகளின் பெருமைகளுள் ஒன்றாகும். திருமுறைகளின் சிறந்த பிழிவே, சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். சமயங்கள் வெறும் அறிவாராய்ச்சிக் காரர்களால் உண்டாக்கப்படுவதில்லை. இறைவனிடமும் தம்மிடமும் மாறாத நம்பிக்கை வாய்ந்த அருள் ஞானப்பெரு வீரர்களாலேயே சமய நெறிகள் வகுக்கப்படுகின்றன. அங்ஙனம் வகுக்கப்பெறும் சமய நெறிகளின் உண்மைகளையே பின்வரும் அறிஞர்களும் மெய்யுணர்வாளர்களும் தத்தம் நூல்களாலும் உரைகளாலும் விளக்கத் தலைப்படுகின்றனர்!*

இவ்வுண்மைக்கேற்ப, நமது சைவ சித்தாந்த சாத்திர நூல்கள், கி. பி. 12—13—14—ஆம் நூற்றுண்டுகளில் செம்மையுறத் தோன்றுதற்கு, மூல முதற் கருவாகவும், தலையூற்றாகவும், அடிப்படை நிலைக்களமாகவும் விளங்கித் திகழ்ந்தவை திருமுறைகளே எனின், அவற்றின் அருமை பெருமைகளுக்கும் ஓர் அளவு உண்டோ?

பன்னிரு திருமுறைகள் :

(1.2.3.) திருஞான சம்பந்தர் பாடல்கள் தூய சிறந்த நடை நலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத்திறனும், எழில்கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக்குரிய பெருமித உணர்ச்சியும் வீறும் பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

(4.5.6.) திருநாவுக்கரசர் பாடல்கள் அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, மக்கள் வாழ்க்

" Lives of great men all remind us
    We can make our lives snblime;
And, departing leave behind us
    Foot prints, on the sands of time
Foot prints, that perhaps another
    Sailing o'er life's solemn main
A forlorn and ship wreck'd brother
    Seeing, shall take heart again. "
—H. W. LONGFELLOW

* " Forms of religion are founded, not by philosophers and theologions, with their interpretations and argumentations, but by heroic men of faith—faith in god and faith in themselves......the former come later on to justify and sanction what already exists, with their elaborate exegetics, written solely for the learned and thoughtful—not to say the sceptical".
—'*Manonmaneeyam*'
—Prof. P. SUNDARAM PILLAI, M.A.,

கைக்கு உறுதி பயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்ப நுட்பமுறச் சுவைபெருக உருக்கமாக அறிவுறுத்துகின்றன.

(7) சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த பாடல்களோ, கலையழகும் இசையினிமையும், நகைச்சுவை நலங்களும், பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய்மைகளை, நம்மனோர் மனங்கொளத் தேற்றுகின்றன.

(8) மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வில் ஆரா இயற்கை அவாவும் வேட்கையும் மிகுந்து, எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்பியல்புகள் அமைந்து, கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் சிறந்து, ஒப்புயர்வில்லாத பக்திப் பெருநூலாக ஒளிர்கின்றது. இறையருளைத் தேடியலைந்து, முயன்றுபெற்று, உய்யும் ஓர் உயிரின் பலதிற உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவுற விளக்கிக் காட்டும் திறனில், திருவாசகம் போலச் சிறந்த நூல், வேறொன்றில்லை. தன்னை ஓதுபவர்களின் சிந்தையிலுள்ள கலக்கத்தைத் தெளிவித்துச் சிவமாக்கி உய்விக்க வல்ல சிறப்பினது திருவாசகம்.

திருச்சிற்றம்பலக்கோவையார், சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய காதலுணர்ச்சியோடு, கடவுளுணர்ச்சியையும் கலந்தியைத்துப் பிணைத்துப் பாடி, கலைநலமெலாம் கனிந்து, மெய்யுணர்வுக் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங் கருவூலம் ஆகக் 'காமம் சான்ற ஞானப் பனுவல்' எனக் குமரகுருபர சுவாமிகள் பாராட்டும் நிலையில், சிறந்தோங்கித் திகழ்கின்றது.

(9) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் நூல்களின் பாடல்களும், இனிமையும் சிறப்பும் மிக்கவை. கண்டராதித்த சோழர் (கி.பி. 949—957) பாடிய பாடல்களும், முதலாம் இராசராசசோழன் (கி.பி. 985—1014) கட்டிய இராசராசேச்சுரம் பற்றிய பாடல்களும், இராசேந்திர சோழன் (கி.பி. 1012—1044) கட்டிய கங்கைகொண்ட சோழேச்சுரம் பற்றிய பாடல்களும், பிறவும் இவற்றில் அமைந்திருக்கின்றன.

(10) திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நுண்பொருள் மறைநூல், ஆராய்ச்சி அனுபூதி என்னும் இருவகை நெறிகளுள், அனுபூதி நெறியால் நம்மனோர் இறைவனை அடைந்து உய்யும்பொருட்டுப் பலதிற யோகப் பயிற்சி முறைகளையும், ஐந்தெழுத்து முதலிய அரிய பல மந்திரங்களையும், அவற்றை உருவேற்றுதற்குரிய பலவகை இயந்திர அமைப்புக்களையும், சிறந்துயர்ந்த தத்துவ ஞானப் பொருள்களையும், அழகிய இனிய நீதிக் கருத்துக்களையும், ஓதற்கெளியவாய் உணர்தற்கரியவாய் உள்ள பாடல்களால் திறம்பட விளக்கிச் செல்கின்றது. இதனை 'ஞானம் முதல் நான்கும் மலர் நற்றிரு மந்திர மாலை' எனச் சேக்கிழார் அடிகள் சிறப்பித்துக் கூறியருள்கின்றார்கள்.

(11) திருவாலவாய் உடையார் திருமுகப் பாசுரம், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள் முதலிய 27 அருளாளர்களின் பாடல்கள் ஆகிய 40 நூல்களைக் கொண்ட சிறப்புடையது பதினொன்றும் திருமுறை.

(12) சேக்கிழார் அடிகள் அருளிய பெரிய புராணமோ, தமிழகத்தின் சமய—சமுதாய—கலாசார—வரலாற்றுப் பெருங்களஞ்சியம் எனத் தலைசிறந்து விளங்குவது. தமிழ்நாட்டின் தேசிய காவியம் (National Epic) என்று பெரிய புராணத்தைக் கூறுவது மிகமிகப் பொருந்தும்

இத்தகைய சிறந்த திருமுறை இலக்கியங்களின் பயனாகவே, தமிழ் மொழியானது உலக இலக்கியங்களில் தனிச் சிறப்பிடம் பெற்று, ஒப்புயர்வற்றுச் சுடர்விட்டு ஒளிர்கின்றது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.

முடிவுரை :

இத்தகைய சிறந்த பல பெருமைகளையுடைய தெய்விக நலம் சிறந்த திருமுறைகளை அன்பும் ஆர்வமும் கொண்டு, முறையாக ஓதி இறைவனை வழிபட்டு, நாம் அனைவரும் இம்மை மறுமை நலங்களையெல்லாம் இனிது அடைய முயலுவோமாக!

—ஆசிரியர்

தற்சிறுமை

திரு. டாக்டர் வ. சுப. மாணிக்கம், M.A., Ph.D.,

தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பெருமை பேசுவோரைப் பார்க்கின்றோம். தற்பெருமை பேசுவோரையும் பார்க்கின்றோம். தற்சிறுமை தாமே பேசிக் கொள்வாரையும் பாடிக் கொள்வாரையும் தெய்வப் பாசுரங்களில் அன்றி வேறு எங்கே பார்க்க முடிகின்றது? அக இலக்கியம் காதலர்களுக்குள் தற்பெருமை பேச இடங்கொடுத்துக் காதலுணர்வை வளர்க்கும். புறவிலக்கியம் ஒன்னார்முன் நெடுமொழி கூற இடங் கொடுத்து வீரவுணர்வை வளர்க்கும் அருளிலக்கியமோ இறைவன் முன் தற்சிறுமை பேசவைத்து அன்புணர்வை வளர்க்கும்.

காதல் மரபு :

> "ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட் பினுள்
> நண்ணாரும் உட்குமென் பீடு"

களவுப் புணர்ச்சியில் தலைவியின் நுதலொளி கண்டு காமவருத்தம் உற்ற தலைவனது கூற்று இக்குறள். என் வலி எத்தகையது? போர்க் களத்து நேரில் என்னை எதிர்த்துத் தோல்வி கண்டவரிடம் கேட்டவர்கள் நடுங்குவார்கள். கண்டாரும் கண்டார்வாய்க் கேட்டாரும் பாராட்டும் என் மறப்பெருமை இவள் சிறுநுத லுக்குப் பள்ளிக்களத்துப் புறங்காட்டி விட்டதே என்று கூறுகின்றான். 'நண்ணாரும் உட்கும் என்பீடு' என்பது தற்புகழ்ச்சி ஆகாதா? இவள் முன் அப்பெருமை போயிற்று எனக் 'கழிந்த தற்கு இரங்கலின் தற்புகழ்தல் அன்றாயிற்று' என்பர் பரிமேலழகர். தற்புகழ்தல் இல்லை எனின் தற்சிறுமை என்று கூறலாமா? என்பது ஓர் எதிர்வினா. புணர்ச்சியின்பம் நோக்கி மனைவி முன்பு சொல்லிக் கொள்ளுதலின் தற் சிறுமையும் ஆகாது.

> தலைப்படு சால்பினுக்கும் தளரேன் சித்தம் பித்தனென்று
> மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவன் எத்துணையும்
> கலைச்சிறு திங்கள் மிலைத்த சிற்றம்பல வன்கயிலை
> மலைச்சிறு மான்விழி யாலழிவுற்று மயங்கினனே

திருக்கோவைத் தலைவன் பாங்கனுக்குத் தன் வலியழிவுகூறும் துறை இது. 'நான் தளர்ந்த தாகவோ பிறழ வுணர்ந்ததாகவோ என்னை யாரும் சொல்லியதில்லை. தளர்ந்தாரைத் தேற்றும் அவ்வளவு சால்புடையவனாக இருந் தேன். அது ஒரு காலம். இப்போது ஒரு சிறு மான் கடைவிழிக்கு அறவே தோற்றேன்' என் கின்றான் தலைவன். இது தற்பெருமை யாகாதா? என்ற வினாவை எழுப்பிக் கொண்டு பேராசிரியர் 'ஈண்டுத் தன்னையுயர்த்தல் என்ற குற்றம் தங்காது, சால்பு முதலியனவற்றை இப் பொழுது உடையேன் என்னாமையின்' என்று காரணம் கூறுவர். தன்னையுயர்த்தல் என்ற குற்றம் இல்லை எனின், 'சிறுமான் விழியால் அழிவுற்று மயங்கினனே' என்பதனால் தன்னைத் தாழ்த்தல் என்ற குற்றம் தங்காதா? அன்புடைய ஒரு பெண்ணின் மான் பார்வைக்கு ஆடவன் மயங்குதல், மயங்க வேண்டுதல் இயற்கை. அந்த இயற்கைக்கு வயப்படாமைதான் குற்ற மாகும். 'ஊடலில் தோற்றவர் வென்றார்' (குறள் 1327) என்பதனால் இல்லறப்போரின் தனித்துவம் பெறப்படும். இவை தற்பெருமை யும் ஆகா; தற்சிறுமையும் ஆகா. இவை வழக் கொடு சிவணிய இலக்கிய மரபுகள் ஆகும்.

வீரமரபு :

"தோன்று தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதியன்றே"
"மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு
பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே "

முதல் நூற்பா தற்புகழ்தல் ஆகாது என மொழிந்தாலும், இரண்டாவது நூற்பா அஃது ஆமிடங்களைச் சுட்டிக் காட்டுகின்றது. நூற்பா கூறுவது போல இப்புகழ்ச்சி புலவர்க்குமட்டும் உடைமையன்று. வஞ்சினம் என்பது புறத்திணையில் ஒரு பகழ்த்துறை. இத்துறையில் மறவர்கள் தம் பெருமையைத் தாமே எடுத்து, அறைகுவர், பூதப்பாண்டியன், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி என்ற மூவர் தம்வஞ்சினப் பாக்களில் இல்லறப் பெருமை, செங்கோற்பெருமை, நட்புப் பெருமை, குடிப்பெருமை என்றிவற்றைத் தம் வாயால் தாமே பறை சாற்றிக் கொள்வதைப் படிக்கின்றோம்.

'மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப" (புறம்—71)

'படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு
வேந்தரை' (புறம்—72)

என்றபடி, வேற்று வேந்தர் தம் பெருமையைப் பறை சாற்றிக் கொள்வதைக் கேட்கப் பொருமையையும் பார்க்கின்றோம். பகைவரை ஏசித் தம்மை ஏத்திக் கொள்வதெல்லாம் வீரப் பொது மரபு என்பதனால் இவற்றை நாம் குற்றமாகக் கொள்வதில்லை. 'துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்' பாராட்டும் தொல்காப்பியம்.

தற்பெருமையும் பெருமிதமும் :

இலக்கியத்தில் இன்னும் சில மரபுகள் உண்டு. சிலர் தம் பெருமையைத் தாம் சொல்ல மாட்டார்கள். புலவனும் அவர்களை அங்ஙனம் சொல்லவைக்கமாட்டான். அதற்காக அப்பெருமக்கள் தம் சிறப்பினைப் புலப்படுத்தாது இருக்க முடியுமா? அதனை இடம் வாய்த்துப் புலப்படுத்துவதற்கென்று வேறு சில பாத்திரங்களைப் புலவன் விடுவான்.

யாரென விளம்புகேன் நான், எங்குலத்
தலைவற் கும்மை
வீரநீர் பணித்திர் என்றான், மெய்ம்மையின்
வேலி போல்வான்
வார்கழல் இளைய வீரன் மரபுளி வாய்மை
யாதும்
சோர்விலன் நிலைமை யெல்லாம் தெரிவுறச்
சொல்ல லுற்றான்

இராம இலக்குவ அனுமன் முச்சந்திப்பில் இராமன் தான் யார் என்பதைத் தானே மொழியவில்லை. பக்கத்திலிருந்த தம்பி இலக்குவன் அண்ணனின் குடிப்பிறப்பு வேள்விக்காப்பு அரசுத்துறப்பு மனைவியிழப்பு எல்லாம் வரன்முறையாக உரைக்கின்றான்.

"கற்புக் கடம்பூண்ட இத் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்யாம்கண் டிலமால்'

என்று கண்ணகியின் கற்புப் பெருமையைக் கவுந்தியடிகள் மாதரிக்குச் சொல்வதும், 'இம்மைச் செய்தன யானறி நல்வினை' என்று மாடலன் கோவலனது இளமைத் தொண்டுகளைச் சொல்வதும் எல்லாம் பிறர்வாய்ப் பெருமையாகும்.

தற் பெருமையை வெளிப்படையாகச் சொல்ல நாணினாலும் தனக்கு ஒரு பெருமையுண்டுஎன்ற எண்ணம் உள்ளத்தளவில் எல்லார்க்கும் கிடக்கின்றது. இவ்வுட்பெருமை தற்பெருமை யாகாது, பெருமிதம் எனப்படும். பெருமிதம் என்பது கரைகடவா நீரொலி போன்றது. தற்பெருமை என்பது உள்ள நீரையும் வற்றச் செய்து கரையைப் புரைபடுத்தும் கதிர்ச்சூடு போன்றது. உள்ளோடும் பெருமிதம் வாழ்வுக்கு இன்றியமையாதது, என்றும் நம்பிக்கையூட்டுவது.

அருள்மரபு :

இதுகாறும் காதலிலும் வீரத்திலும் தற்பெருமை பேசும் இலக்கிய மரபுகளைப் பார்த்தோம். இதற்கு மாறாகத் தற்சிறுமை பேசும் மரபினை அருள் நூல்களில் பரக்கக் காணலாம்.

ஞானசம்பந்தர் முதலான அருளாளர்கள் எவ்வளவோ மருட்கை நிகழ்ச்சிகளைப் புரிந்தவர்கள், ஆற்றலிலும் அறிவிலும் புலமையிலும் நிகரற்றவர்கள். நாட்டையும் அரசையும் சமுதாயத்தையும் மாற்றி அமைத்தவர்கள், உரமும் ஊற்றும் வழி வழி ஊட்டவல்ல பாடல்களை ஆயிரக்கணக்காக அருளியவர்கள். இவ்வளவு பெரியவர்கள் நாயினும் சிறியவர்களாகத் தம்மைப் பழித்தும் இழித்தும் மடப்படுத்தியும் தாமே பாடிக்கொள்வானேன்?

'மாயத்தை அறிய மாட்டேன் மையல்
கொள் மனத்த னாகிப்
பேயொத்துக் கூகையானேன் பிஞ்ஞகா
பிறப் பொன்றில்லி' (அப்பர்)

'நாயேன் பல நாளும் நினைப்பின்றி
மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன்' (சுந்தரர்)

'வஞ்சனையும் பொய்யுமுள்ளே
வைத்தழுக்கா றுயுளறும்
நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான்
பராபரமே' (தாயுமானர்)

'மதிகெட் டறவாடி மயங்கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்'
(அருணகிரிநாதர்)

இங்ஙனம் அருட்புலவர்கள் தம்மைத் தற்சிறுமைப்படுத்திக் கொள்ளும் இடங்கள் பலப்பல. எனினும் மிகுதியாகத் தம்மைச் சிறுமை பேசியவர் மணிவாசகரும் பின்னர் இராமலிங்கரும் ஆவர். தேவாரங்களிலும் தற்சிறுமை இடங்கள் உள, திருவாசக அளவு அவற்றில் இல்லை. அதற்குக் காரணம் தேவாரம் சைவ இயக்கப் பாடல்; சமண பௌத்த மதச் செல்வாக்குகளைத் தகர்த்துச் சைவத்தை நிலைநாட்ட வந்த பறைவுப் பாடல்; தலந்தோறும் சென்று மக்களைத் திரட்டிச் சிவனது பெருமையையும் திருவருளையும் இசையொடு குழைத்துப் பாடிப் பரப்பிய சமுதாயப் பாடல்.

'மணையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான்
விரும்புவா
அணைய நிலை தலைநின்றே ஆடியசே
வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து
நீறுக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்
போற்றும் தவம்புரிந்தார்'

என்று சேக்கிழார் ஞானசம்பந்தரின் பிறப்பை இவ்வுலகில் ஓர் இயக்கம் நடத்த வந்த பிறப்பாகவே, பரசமயத் தருக்கொழியச் சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்க வந்த பிறப்பாகவே, அயல் வழக்கின் துறைவெல்லவந்த தமிழ்ப் பிறப்பாகவே, சிவம் பெருக்க வந்த பிள்ளையாராகவே எடுத்துக் காட்டுதலைக் காண்கின்றோம். நாட்டில் எந்த இயக்கம் பரப்பும் பெரியவர்களும் மக்கள் முன் தம்மை அடிக்கடி சிறியவர்களாகத் தூற்றிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படித் தூற்றிக் கொள்ளின் அது மக்கட்கு இனிக்காது. புரியவும் புரியாது. ஆதலாலன்றோ,

'சந்தமே பாட வல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொற்பாடி யாடக்கெடும் பாவமே'
(சம்பந்தர்)

'பொய்யாத் தமிழூரன் உரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறி தானே'
(சுந்தரர்)

என்று திருக்கடைக்காப்புச் செய்யுட்களில் சம்பந்தரும் சுந்தரரும் தம்பெயர் வரவும் பெருமை தோன்றவும் பாடியுள்ளனர். இப்போக்கு தற்பெருமையன்று, மக்கள் உள்ளத்துப் பதியுமாறு பாடிய பதிகமரபு என்று கொண்டு வருகின்றோம்.

திருவாசக மரபு :

திருவாசகம் என்பது தனிநெறிப்பாடல், உயிர்ப்பாடல். அது உயிரியக்கப்பாடலன்று, உயிரொடுக்கப்பாடல். 'இன்பே அருளி எனையுருக்கி உயிருண்கின்ற எம்மானே' எனவும் 'ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்' எனவும் வருதல்காண்க. திருவாசகத்தின் பல பத்துக்களுள் உயிருண்ணிப்பத்து என ஒன்று உண்டு என்பதும் நினையத்தகும். 'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்' என்றபடி, திருவாசகச் செய்யுட்கள் தன்னைப் பிறன் போற்கூறும் படர்க்கை நடையில் அமையாது நாடக நடை எனப்படும் தன்மை நடையில் பெயர் சுட்டிக்கூறாது அமைந்துள்ளன. உயிரையே ஒடுக்க நினைத்தவர்க்குப் பெயரொடுக்கம் எம்மாத்திரம்? ஆதலின் மணிவாசகர் தம்மை யாரினும் யாதினும் சிறுபொருளாகப் பாடிக் கொண்டார். 'உலகத்தார் தூசியைக் காலில்

கீழ் மிதிக்கின்றனர். உண்மைநாடி அத்தூசியும் தன்னைத் தலைமேல் மிதிக்கும் அளவுக்குப் பணிந்து கிடக்க வேண்டும்' என்பர் பெருமான் காந்தியடிகள். அருளாளர்களில் மணிவாசகர் போல் தம்மை இழிவாசகம் பேசிக் கொண்டவர் யாருளர்?

'சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே'

மூர்க்கன், கள்வன், கடியன் , கலதி, பேயேன், ஆள்வாரிலிமாடு, கண்கெட்ட ஊரேறு, சழக்கனேன், ஊற்றையேன், புலையனேன் என்று கண்டவாறு தம்மைத் திட்டிக்கொள்கின்றார். மணிவாசகர் உலகில் இறப்ப இழிவாகக் கருதும் பொருள் நாய். மிகமிக இழிந்த தன்னை அந்நாயொடும் ஒப்பிட்டுக் கொள்ள விரும்பவில்லை. சிலவகையில் நாயினம் உயர்ந்தது. எல்லா வகையிலும் தான் இழிந்தவன். ஆதலின் தனக்கு எவ்வகை நாய் ஒப்பாகும் என்று காட்ட வேண்டி, நாய்க்குப் பலவேறு அடைகொடுத்து ஒப்பாக்கிக் கொள்கின்றார். நாய் பெற்ற இடம் திருவாசகத்தில் யார் பெற்றார் ?

1. 'யாதும் ஒன்றல்லாப் பொல்லா நாயான நீசனேனை'
2. 'ஊர்நாயிற் கடையானேன்'
3. 'பொல்லா நாயான புன்மையேனை'
4. 'நாணமில்லா நாயினேன்'
5. 'ஏண் நாணில்லா நாயினேன்'
6. 'கீறிலாத நெஞ்சுடைய நாயினேன்'
7. 'கடலினுள் நாய் நக்கியாங்கு'
8. 'கல்லாமனத்துக்கடைப்பட்ட நாயேனை'
9. 'ஆதமிலி நாயேனை'
10. 'புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன்'
11. 'ஒன்றும் போதா நாயேனை'
12. 'நாயிற் கடையாம் நாயேனை'
13. 'புழுத்தலை நாய்போல இச்சை யாயின'
14. 'தானார் அடியணைவான் ஒருநாய்க்குத் தவிசிட்டு'
15. 'நாயினும் கடையாய வெங்கட்டனேனையும்'

நாய் ஒழியப் பிறபொருள் தனக்கு உவமையாகாது எனவும், அந்நாயையும் தன் இழிவுக்கேற்ற அடைகொடுத்து உவமையாகப் படைத்துக் கொண்டாலல்லது இயற்கைநாய் உவமையாகாது எனவும், திருவாசகர் கருத்தாதல் பெறப்படும். நாயொன்றையே உவமையாக ஏன் தேர்ந்தெடுக்கவேண்டும்? அடிநாயேன், நாயடியேன், நாயினேன் என்றெல்லாம் தம்மையே ஏன் நாயாக ஆக்கிக் கொள்ள வேண்டும்? உலகம் அறிந்த நாயின் பண்பு செய்ந்நன்றியுடைமை. அந்நாய்ப்பண்பு தம்பால் இல்லையே என்பது மணிவாசகரின் கவற்சி.

'நான்தனக் கன்பின்மை நானுந்தானும்
அறிவோம்
தானென்னை யாட்கொண்டது எல்லாரும்
தாமறிவார்'

'ஈறிலாத நீ யெளியை யாகி வந்து
ஒளிசெய் மானுடமாக நோக்கியும்
கீறிலாத நெஞ்சுடைய நாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே,

இவ்வாறு உலகம் அறியவந்து தன்னை எளிமையாக ஆட்கொண்ட திறத்தைத் தான் மதிக்கவில்லையே. நாய்க்குத் தவிசிட்டாற்போல' தனக்குத் தகுதியில்லாத பெரும்பதத்தை அருளிய பெம்மானைத் தான் நன்றியொடு நினைக்கவில்லையே என்று மணிவாசகர் துடிக்கும் திருவாசகக்கதறலை நாம் பல செய்யுட்களிற் பார்க்கின்றோம். நன்றியுடைய நாயாக இருக்க வேண்டிய நான், நன்றிகெட்ட நாயாக இருக்கின்றேனே. எப்போது நல்ல நாயுணர்வு தனக்கு வருமோ என்று மணிவாசகர் இரங்குகின்றார். செய்ந்நன்றியுணர்வு எல்லாக் குணங்களிலும் தலையாய குணம் எனின் அந்நன்றிக்கேடு, எல்லாக் குற்றங்களிலும் தலையாய குற்றம் என்பது பெறப்படும். காமம் மிக்க சச்சந்தன் கட்டியங்காரனிடம் அரசாட்சியைக் கொடுத்தான்; நாய்போல் நன்றியுடையவனாக இருப்பான் என்று நம்பினான். கட்டியங்காரனே நம்பிக்கைக்கேடு செய்து சச்சந்தனைக் கொன்று அரசைக் கைப்பற்றினான். இவ்வாறு நம்பிக்கைக் கேடியாகிய கட்டியங்காரனை,

'ஓதி னார்தமை வேறுகொண் டோதினான்
கோது செய்குணக் கோதினுட் கோதனான்'
(சிந்தா. 240)

என்று திருத்தக்கதேவர் பழித்துக்கூறுவர் ஆதலின் மணிவாசகர் தம்மைச் சிறுமையாகப்

பாடிப் பழித்ததற்கு ஒரே ஒரு காரணம் இறைவனுக்கு நன்றி காட்டாமை என்று அவர் நினைப்பது. இதனால் அவருக்கு எழுந்த ஒரு முரட்டுத்துணிவைப் பாருங்கள். நன்றியில்லாத நாயென்று தன்னைத் தெரிந்தும் ஆளலாமா? அங்ஙனம் ஆண்டவன் அறிவுடையவன் இல்லையாம், பேதையாம், என்ன துணிவு!

'தாதாய் மூவேழ் உலகுக்குந் தாயே
நாயேன்தனை
யாண்ட பேதாய்'

என்று இறைவனையே பழிப்பது பார்த்து மணிவாசகரின் துணிவுக்குமுன் நாம் பின் வாங்குகின்றோம்.

ஞாலம் உள்ளளவும் மக்களுயிர் உள்ளளவும் நிலைக்கத்தக்க அன்புநூல் அருளிய மாணிக்கவாசகரே தம்மை நாயென்றும் பேயென்றும் மாடென்றும் இழிவுபடுத்திக் கொள்வதைப் படிக்கும்போது, நாம் நம்முடைய சிறுமையை நினைத்துப் பார்க்க வேண்டும். இதுவே மணிவாசகருக்கு நாம் காட்டக்கூடிய செய்ந்நன்றி வளமாக இருந்து பின் வறுமை வாய்ப்பட்டவர்களைக் காணுங்கால் நெஞ்சு உருகுகின்றது அல்லவா? அருள் வளம் உடைய திருவாசக அடிகள் தம்மை நல்லது ஒன்றும் இல்லாப் பொல்லா வறியவராகச் சொல்லிக் கொள்ளும் போதும் அவ்வுருக்கவுணர்வு தோன்றுகின்றது. அதனால்தான் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற பழமொழி எழுந்ததுபோலும். அடிகளார் தம்மை இவ்வளவு என்று இல்லாமல் இறப்பப் பழித்துக் கொண்டாலும்,

'பேசும் பொருளுக் கிலக்கிதமாம்
பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை'

என்று நாம் அறியோமா? 'தன்பெருமை தான் அறியாத தன்மையன்காண்' என்று அடிகள் ஆண்டவனுக்குக் கூறியதைத் திருவாசக அடியோங்களாகிய நாம், நம் மணிவாசக ஆண்டவனுக்குத் திருப்பிக் கூறினால் பொருந்தாதா?

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கனககிரி அருள்திரு வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற ஆலயத் தூய்மைக்கான சுழற்கோப்பைப் பரிசளிப்பு விழாவில், சேலம் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் திரு ஆர் குப்புசாமி அவர்களின் தலைமையில், துணையாணையர் திரு. எம். சூரியராஜ், பி. ஏ. பி. எல். அவர்கள், அறங்காவலரிடம் சுழற்கோப்பைப் பரிசை வழங்குதல். 28—10—73.

அப்பரும், இராமலிங்க அடிகளும்

தவத்திரு ஊரன் அடிகள், வடலூர்

அப்பர் முன்னவர். இராமலிங்க அடிகள் பின்னவர். முன்னவராகிய அப்பரைப் பின்னவராகிய இராமலிங்க அடிகள் எங்ஙனம் போற்றுகின்றனர். இருவரது கருத்தொற்றுமை யாது என்பதனைச் சற்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இராமலிங்க அடிகள், சமய குரவர் நால்வரிடத்தும் பேரீடுபாடு கொண்டவர். நால்வரைப்பற்றி, ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை, ஆளுடைய அரசுகள் அருண்மாலை, ஆளுடைய நம்பிகள் அருண்மாலை, ஆளுடைய அடிகள் அருண்மாலை என நான்கு பாமாலைகளை அருளியிருக்கிறார். இந்நான்கும் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான் மணிமாலையை ஒக்கும்.

ஆளுடைய அரசுகள் அருண்மாலையில், 'உழவாரப்படை கைக்கொண்ட புண்ணியனே', 'ஆகம நெறியை வளர்க்க வந்த வள்ளலே', 'அப்பூதி அடிகட்கின்பம் தந்த பெருந்தகையே', 'சைவ மணியே': 'சைவக்கனியே', 'எங்கள் குலதெய்வமே' 'சைவக்கொழுந்தே' என்றெல்லாம் வள்ளற் பெருமான் அப்பர் பெருமானைப் புகழ்ந்து துதித்துப் போற்றுவர்.

திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் அப்பர் பெருமான் 'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்' என அருளுகின்றார்.

'எண்ணுகேன் என்சொல்லி
எண்ணுகேனோ ?
எம்பெருமான் திருவடியே
எண்ணி னல்லால்,
கண்ணிலேன் மற்றோர்
களைகண் இல்லேன் ;
கழலடியே கைதொழுது
காணின் அல்லால் ;
ஒண்ணுளே ஒன்பது
வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ
துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே
போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே'

இப்பாடலின் கருத்தையும், 'ஒண்ணுளே ஒன்பதுவாசல் வைத்தாய்' என்னும் தொடரையும் எண்ணி உருகும் வள்ளற்பெருமான் 'ஒண்ணுளே ஒன்பது வாய் வைத்தாய் என்ற உத்தமனே' எனப் போற்றி மகிழ்கின்றார்.

'கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்தஅருட் பயனே
உண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன்என் றனையாள வேண்டுங்
கண்டாய்
ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற
உத்தமனே சித்தமகிழ்ந் துதவு வோனே'
—திருவருட்பா, நான்காம்திருமுறை.

ஒன்பது வாசலும் ஒக்க அடைக்கும் காலம் நமக்கொன்றுண்டு என்பதை நாம் கருதுவதில்லை. அப்பரும், வள்ளலாரும் அதனைக் கருதினர். இவ்விருவர்க்கும் ஒன்பது வாசலும் ஒக்க அடைத்ததில்லை. ஒன்பதுவாய்ப் பாண்டமாகிய உடம்பே ஒளியுடம்பாகப்பெற்று இறைவனோ டிரண்டறக் கலந்தனர்.

கல்லொடு கட்டிக் கடலிற் பாய்ச்சப்பெற்ற அப்பர் பெருமான் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாக மிதக்கப் பெற்றுக் கரையேறினார்.

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்
கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே'

என்பது நமச்சிவாயத் திருப்பதிகத்தின் முதற் பாடல். சொற்றுணை வேதியன் எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தில் மனத்தைப் பறிகொடுத்த வள்ளற்பெருமான்,

"சொற்றுணை வேதியன் என்னும்
பதிகச் சுருதியைநின்
பொற்றுணை வார்கழற் கேற்றியப்
பொன்னடிப் போதினையே
நற்றுணை யாக்கரை ஏறிய
புண்ணிய நாவரசைக்
கற்றுணை யாதிந்தக் கற்றுணை
யாம்என் கடைநெஞ்சமே"
—திரு அருட்பா, முதல்திருமுறை.

எனப் பாடுகின்றார். சமணர்கள் திருநாவுக்கரசரைக் கருங்கல்லில் கட்டி உவர்நீர்க்கடலில் வீழ்த்தினார்கள். நானும் கருங்கல்லிற் கட்டிக் கடலிடை வீழ்த்தப்பட்டு உழல்கின்றேன். என்னைக் கட்டியது மனமாகிய கருங்கல்லில். என்னை வீழ்த்தியது பாவமாகிய கடலில். மாயைச் சமணரால் மனக் கருங்கல்லிற் கட்டப்பட்டுப் பாவக்கடலில் வீழ்த்தப்பட்டு உழல்கின்ற நானும் திருநாவுக்கரசரைப்போல் ஐந்தெழுத்தை ஓதுகின்றேன். என்னையும் கரை ஏற்று அரசே! என இறைவனை வேண்டுகின்றார் இராமலிங்கர்.

"சீர்தரு நாவுக் கரையரைப்
போலிச் சிறியனும்ஓர்
கார்தரு மாயைச் சமணான்
மனக்கருங் கல்லிற்கட்டிப்
பார்தரு பாவக் கடலிடை
வீழ்த்திடப் பட்டுழன்றே
ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின்
றேன்கரை ஏற்றரசே"
—திருவருண் முறையீடு, 135.

இறைவன் திருநல்லூரில் திருநாவுக்கரசருக்குத் திருவடி தீக்கை செய்தருளிய திறத்தையும், 'நனைந்தனைய திருவடியென்தலை மேல் வைத்தார்' என அதனை அப்பர்பெருமான் கூறியருளுவதனையும் வள்ளற் பெருமான் நினைந்து நினைந்து மனங்குளிர்வர்.

"துடிவைத்த செங்கை அரசேநல்லூரில்
நின்தூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்தம்
சென்னியது குளிர்ந்தெப்
படிவைத்த தோஇன்ப மியான்எணுந்
தோறும்இப் பாவிக்குமால்
குடிவைத்த புன்தலை ஒன்றோ
மனமும் குளிர்கின்றதே"
—திருவருண்முறையீடு, 151.

அப்பர் பெருமானின் அருள்வாக்குகளிலும், அவரது அருள் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களிலும், வள்ளற்பெருமான் ஈடுபட்டவர் என்பதனைத் திருவருட்பாவில் பலவிடங்களிற் காண்கின்றோம்.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' எனக் கிடந்தார் அப்பராகிய திருநாவுக்கரசர், 'தன் கடன் அடியேனையும்(அடியாரைத்) தாங்குதல்' என்று தாங்கினான் அப்பனாகிய இறைவன். இவ்வாறே வடலூர் மண்ணில் சங்கம் கண்டு, சாலை அமைத்து, சபை நிறுவிச் சன்மார்க்கம் வளர்த்துப் பணிசெய்து கிடந்தார் வள்ளலார். தாங்கித் தாணுக்கிக் கொண்டான் அருட்பெருஞ் சோதியாம் அப்பன்.

'நமனையஞ்சோம்' என்றார் அப்பர். 'நமனுக்கு இனி இங்கு வேலை இல்லை' என்றார் வள்ளலார். 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம்' என்றார் அப்பர். சிறு தெய்வ வழிபாட்டை ஒழித்தார் வள்ளலார். கொள்கையால், தொண்டினால், பெற்ற பேற்றால், இன்ன பலவகையால் அப்பரும், வள்ளலார் இராமலிங்க அடிகளும் ஒப்புடையராவர்.

திருமணஞ்சேரியில் எழுந்தருளியுள்ள அருள்வள்ளல் நாயகரை வாழ்த்தும் அப்பர் பெருமான் 'மணஞ்சேரியெம் வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே' என வாழ்த்துகின்றார். நாமும் அம்மொழியே கொண்டு 'வடலூர் எம் வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே' என வாழ்த்தி அப்பர் பெருமான் அடிமலர் பணிந்து அமைகின்றோம்.

அப்பர் பெருமான் அடிமலர் போற்றி.
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே.

★ ★

மருகலான் அடி

மாட்சிமிகு எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L,

நீதிபதி, உயர் நீதி மன்றம், சென்னை

மனித உள்ளத்திலுள்ள முண்டு முடிச்சுகளை யெல்லாம் துருவித்துருவி ஆராய்ந்தார் டாக்டர் யுங் என்ற பேரறிஞர். 1961-இல் மறைந்தவர் அவர். மறைவதற்கு முன்னால், மனித வாழ்க்கையில் தான் கண்ட தீர்ந்த முடிபுகளைப் பற்றி அவர் சொன்னார் : "இப்பொழுது எனக்குத் தெளிவாக ஒரு உண்மை துலங்கி விட்டது. அது என்னவென்றால், மனித சமுதாயத்துக்கு நேரிடப்போகும் அபாயம். மனிதனுக்குப் புறத்திலிருந்து வருவதல்ல. மனிதனுடைய அகத்திலிருந்து வருவதுதான், மனித மனத்திலுள்ள திருகுமுறுகலும், கோணலுமே மனித வாழ்வுக்கு உலை வைக்க முனைகின்றன. இந்தப் பூமியில் குறிப்பிட்ட சிலர் நிதானத்தை இழந்தார்களேயானால், ஒரு ஐட்ரஜன் வெடித்து உலகத்தையே பாழாக்கி விடும்" என்றார். "இந்தக் கோணலை யெல்லாம் நிமிர்ப்பதற்கு ஓரே ஒரு வழியிருக்கிறது. இந்தியர்களில் சிலர் பயின்று வரும் யோகப் பயிற்சிதான் இந்தக் கோணலையெல்லாம் நிமிர்க்கும் வல்லமை படைத்தது" என்றும் டாக்டர் யுங் சொல்லியிருக்கிறார்.

யோகம் என்றால் ஒன்றித்து நிற்பது என்று பொருள். மன ஒருமையில்லாதவர்கள் செயலில் ஈடுபடாமலிருக்கும் வரையில், மற்றர்களுக்கு நல்லது. ஆனால் அவர்கள் செயற்படத் தொடங்கிவிட்டாலோ, அதனால் விளைவது கலப்பற்ற தீமைதான்! கோணலான சிந்தையிலிருந்து கோணலான செயல்தானே பிறக்கும்?

ஆகவே, செயலில் ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தை நாம் நீட்டி நிமிர்த்து, பக்குவப் படுத்திக்கொள்ளவேண்டும். பருப்பொருளாகிய உடலிலே அழுக்கிருந்தால், பருப்பொருளாகிய நீரால் கழுவி அதை எடுத்துவிடலாம். நுண் பொருளாகிய மனசிலிருக்கும் அழுக்கைப் பருப் பொருளால் கழுவ முடியாது. மனசை மனசால் தான் கழுவலாம். "செல்லுமளவும் செலுத்து மின் சிந்தையை" என்று சொல்லுகிறார் திருமூலர். தியானத்திலிருந்து பழகினால், ஆணவச்சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம். நம்மை மறந்து நமக்கு அப்பாலிருக்கும் ஒரு பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினால், மன ஒருமை ஏற்படும். எல்லோரையுமு எல்லாவற்றையும் ஒன்றுகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். இதைத்தான் தவம் என்று சொல்லுகிறார்கள். இந்தத் தவத்தால் நம் பேதைமை தீரும்; திருகலாகிய நம் சிந்தை திருந்தும்; வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம்.

திருமருகல் என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள இறைவனைத் தியானம் செய்தால் இவ்வளவும் கிடைக்கும் என்று அப்பர் அடிகள் உறுதி கூறுகிறார். அல்லாவை நினைத்தாலும், ஜெகோவாவை நினைத்தாலும், புத்தரை, விஷ்ணுவை நினைத்தாலும் இப்பலன்களைப் பெறலாம்.

"பெருகலாம் தவம்;
பேதைமை தீர்கலாம்;
திருகலாகிய சிந்தை
திருத்தலாம்;
பருகலாம் பரம்
ஆயதோர் ஆனந்தம்;
மருகலான் அடி
வாழ்த்தி வணங்கவே"

என்பது அப்பர் தேவாரம். இவ்வாறு பக்குவப் பட்ட மனிதன் சமுதாயப் பணியில் ஈடுபடுவானேயானால், அச்சமும் வெறுப்பும் நீங்கும், அகமும் புறமும் இணையும், அன்பும் இன்பமும் பெருகும். ★

ஆனைக்கா அண்ணலும், அகிலம்மையும்

திரு. சி. நமசிவாயம்பிள்ளை அவர்கள், திருவானைக்கா.

முன்னுரை:

இவ் உலகத்திலேயே தேவாலயங்கள் நிறைந்த நாடு நம் தமிழகம். அதிலும் காவிரி பாயும் சோழமண்டலம், தன்னிகரற்ற கோயில்கள் பலவற்றைத் தன்பால் கொண்ட சிறப்புடையது. பொன்னியாறு பாயும் நன்னிலம் புவிக்குச் செந்நெல்லை மட்டுமல்ல, புனிதமான சமய உணர்வினையும், தத்துவ ஞானத்தையும் கூடப் புகட்டிய பெருமை சான்றது. அத்தகைய புண்ணியத்தலங்களுள் பெருஞ்சிறப்புடையதான திருவானைக்கா, மிகத் தொன்மையானது என்பது, வெறும் உபசார வழக்கன்று.

கடைச்சங்க காலச் சோழனான கோச்செங்கணான், உறையூரைத் தலைநகராகக் கொண்டு, தென்னகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் அரசாண்ட காலத்திலிருந்தே தன்பெருமை குன்றாது விளங்குவது திருவானைக்கா. இத்தலத்தின் தெய்வம் ஆகிய சம்புகேசுவரர், செங்கணானின் வழிபடு தெய்வமாகப் பூசிக்கப் பெற்றார். முன் பிறப்பில் கோச்செங்கணான் சிலந்தியாக இருந்தபோதும்கூட, மெய்யன்போடு வழிபட்ட திறத்தைப் புராணங்கள் பலப்பட பேசிப் புகழும். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவச் சான்றோராகிய அப்பரடிகள் பிரசித்திபெற்ற தம்முடைய திருவிருத்தத்தில், "சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து உலந்தவண் இறந்த போதே கோச்செங்கணானுமாகக் கலந்த நீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே" என்று பாடிப் பரவுகின்றார்.

நால்வர்:

ஆயிரக்கணக்கான ஆலயங்கள் அமைந்திருப்பினும், அவற்றுள் திருமுறை என்று பேசப்படும் தமிழ் மறையால் சிறப்பிக்கப்பட்ட தலங்களையே புண்ணியத் தலங்கள் என்று பெரிதும் கொண்டாடுவது நம் நாட்டு மரபு. சைவ சமயாசாரியர்கள் என்று சிறப்பிக்கப்படுவோர் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மணிவாசகர் என்னும் நால்வர் ஆவர். இந்நால்வரும் ஒரே காலத்தவரல்லர். ஞானசம்பந்தரும் நாவுக்கரசருமே சமகாலத்தவர். அவர்களிலும் இருவருமே சென்று துதித்த தலங்கள் சிலவே. நமது ஆனைக்கா, நால்வர் நற்றமிழ் மாலைகளையும் பெற்றுக் கொண்ட பெருமைக்குரியது. திருவாசகம் குறிப்பிடும் பெருமைபெற்ற மிகச்சில தலங்களுள் ஆனைக்காவும் ஒன்றாகும். "முன்னானை மூவருக்கும் முற்றுமாய் முற்றுக்கும் பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின் மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத் தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை என்னானை என் அப்பன் என்பார்கட்கு, இன்னமுதை அன்னானை அம்மானைப் பாடுதும்காண் அம்மானாய்" என்று பாடுகிறது மணிவாசகரது திருவாசகத்திலுள்ள திருவம்மானை.

சம்பந்தர்:

சைவ சமய குரவருள் தலையாயவரான ஞானசம்பந்தரோ, தமது இரண்டாம் திருமுறையில் "செங்கண் பெயர் கொண்டவன் செம்பியர் கோன் அம்கட் கருணை பெரியதாயவனே வெங்கண் விடையாய் வெண்ணாவல் உள்ளாய் அங்கத் தயர்வாயினள் ஆயிழையே" என அகத்துறைப் பாடலால், இத்திருக்கோயிலில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்த சங்ககாலச் சோழ மன்னனாகிய கோச்செங்கணானையும், தல விருட்சமாகிய வெண்ணாவல் மரத்தையும் குறிப்பிடுகிறார். இப்பாடலிற் சம்பந்தர், திருக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறையை ஒட்டிப் பழங்காலந் தொட்டு விளங்கும் வெண்ணாவல் மரத்தின் சிறப்பை மறக்காமல் குறிப்பிடுவது காணலாம்.

சம்புமுனிவர் என்பவரின் தலையில் முளைத்து, எம்பெருமானுக்கு என்றென்றும் இயற்கையாக அமைந்த திருக்கோயிலாக விளங்குவது, அவ் வெண்ணாவல் மரம் எனப் பேசப்படுகிறது. இன்னும் அம்மரம் மிகப்பழமையைத் தனது உருவப் பொலிவில் காட்டிக் கொண்டு, நன் னிலைமையில் இருப்பதைக் காண்கிறோம். பல நூறு செய்யுளாக விரித்துரைக்கும் தலபுராணக் கதை ஞானசம்பந்தர் திருமுறையில் குறிப்பாகப் பேசப்படுகிறது. மேலும் அவரே தாம் மீண்டும் பாடிடும் மூன்றும் திருமுறைப் பதிகத்தில் ''ஆனைக்காவல் அண்ணலை அபயமாக வாழ்ப வர் ஏனைக் காவல் வேண்டுவார்க்கு ஏதம் ஏதும் இல்லையே'' என்று திருவானைக்கா தெய் வத்தை வணங்குவார்க்கு எவ்வித பயமும், பகையும் இல்லை என்று கூறுகிறார்.

அப்பர் :

சம்பந்தரின் சமகாலத்தவரான, திருநாவுக் கரசர் தமது ஐந்தாம் திருமுறையில் ''வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும் வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற நைஞ்சு நைஞ்சு நின்று உள்குளிர் வார்க்கெல்லாம் அஞ்சலென் றிடும் ஆனைக்கா அண்ணலே'' என உலகி னர்க்கு உறுதிகூறி எல்லோரையும் ஆனைக்கா அண்ணலை வணங்க அழைக்கின்றார். மேலும் தமது ஆறும் திருமுறைத் திருத்தாண்டகத்தில் ''எத்தாயர்? எத்தந்தை? எச்சுற்றத்தார்? எம்மாடு சும்மாடாம்? ஏவர் நல்லார்? செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை. சிறு விறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர் சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித் திருவானைக்காவுடைய செல்வா! என் அத்தா! உன் பொற்பாதம் அடையப் பெற்றால் அல்லகண்டம் கொண்டு அடியேன் என் செய்கேனே'' என்று கம்பீரமாகப் பாடு கிறார். இதில் ஒரு நயம் இருப்பது சிறப்பாகும். எதிர்காலத்தில் சிவபெருமானே தான் ஒரு சித்த புருஷனாக இவ்வூருக்கு வந்து தன் கோயில் பொன்னி என்னும் காவிரியாற்றின் வெள்ளத் தாற்சேதமுருமல் காக்க மிகப் பிரம்மாண்டமான கருங்கல் மதில் ஒன்றை எவ்விதமான அரசர், செல்வந்தர் உதவியும் இல்லாமலேயே கட்டி முடித்த சிறந்த வரலாற்றை முன்னறிவிப்பதாக உள்ளது. ''சித்தாய வேடத்தாய்'' என்ற அப் பரடிகளின் தேவாரத் தொடர், கையில் பணங் காசு ஏதும் இல்லாமலேயே, மதில் கட்டிய தொழிலாளர்களுக்கு மாலையில் தாம் கொடுக் கும் திருநீறு அவரவர் வேலைக்கேற்ற கூலிப் பணமாக மாறும்படிச் செய்து அப்பெரிய திருமதிலைக்கட்டி முடித்த வரலாற்றைப் பேசும்

சுந்தரர் :

மேலும் ஏழாம் திருமுறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''தாரமாகிய பொன்னித்தண்டுறை ஆடி விழுத்து நீரில் நின்றபடி போற்றி நின் மலா! கொள் என ஆங்கே ஆரங்கொண்ட எம் ஆனைக்காவுடை ஆதியை நாளும் ஈரமுள்ளவர் எம்மையும் ஆளுடையாரே'' என்று உறையூர்ச் சோழமன்னன் காணுமல் போன தன் விலை உயர்ந்த முத்துமாலை, திருமஞ்சனத்தோடு சிவலிங்கத்தின் மீது விழுந்து அதை அணி செய்யக்கண்டு, அருமையான பொருள்கள் அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பணிக்க வேண்டிய தன் கடமையை உணர்ந்து, அம் மாலையை ஆனைக்கா அண்ணலுக்கே அணி செய்யத் தந்ததொரு செய்தி விளங்கப் பாடுகிறார்.

சமயாசாரியர்களாகிய நால்வர் மட்டுமல்ல. ஐயடிகள் காடவர்கோன் என்ற அடியாராக வாழ்ந்த அரசரும், தம்முடைய பாடலில் ஆனைக்காவின் சிறப்பைப் பாடிப் பரவுகிறார் பின் 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த கவி ராட்சச கச்சியப்ப முனிவர் என்ற திருவானைக் காப் புராண ஆசிரியர், சக்கரவர்த்தித் திரு மகனை இராமபிரான் ஆனைக்கா அண்ணலின் சிறப்புணர்ந்து வணங்கி வழிபட்டதை அழகுறப் பாடுகிறார். இராமபிரான் அகழ்ந்த பெருங்குளமான இராமதீர்த்தமும், அவன் வழிபட்ட நீல விண்டிசர் என்னும் சிவலிங்க மும் இன்னும் இங்கு உள்ளன.

அகிலம்மை:

திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள சம்புகேசுவரரின் சிறப்புக்கள் இவ்வளவாக அவர்தம் அருள்வடிவமாகவீற்றிருக்கும் அம்மை அகிலாண்டநாயகியைப் பற்றிய பெருமையைச் சற்றே கவனிப்போம். தேவி அகிலம்மை மற்ற சிவத்தலங்களில் உள்ளதுபோல் சிவ பெருமானின் இடப்பாகத்திலுள்ள தேவியாக மட்டுமின்றி, இவ்வூரில் சிவபிரானைப் பூசிக்கும் சிவபக்தையாகவும், அவனைத் தனது ஞான

குருவாகக் கொண்டு உபதேசம் பெற்ற நல்ல மாணவியாகவும் இருக்கிறாள். இன்னும் நண்பகல் பூசையில், அம்மை ஆலயத்திலிருந்து, பூசகர் அம்மையின் உருவம்போல் பெண்மைக் கோலத்தோடு சுவாமி கோயிலுக்கு வந்து அம்மையாகவே தம்மைப் பாவித்துக்கொண்டு சிவபூசை செய்யும் சிறப்பு காணத்தக்கது. என்றென்றும் சிவகுருவிடம் ஞான உபதேசம் பெறும் மாணவியாக இருப்பதால், இங்கு மற்ற தேவாலயங்களில் உள்ளதுபோல் திருக்கல்யாண விழா நடைபெறுவது கிடையாது. மேலும் இற்றைக்குச் சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து அத்வைத மதத்தைப் பரப்பியவர் என்று சிறப்பிக்கப்படும் ஆதிசங்கர பகவத்பாதர், தம் திருக்கரத்தால் அம்மையின் இரு காதுகளுக்கும் அணிபெறச்செய்த சக்ர தாடங்கம் காண்போர் கண்ணைக் கவரும் பெருமை உடையது. அட்சரமாலிகை என்னும் அகரவரிசைப் பதிகம், சங்கரர் இவ்வம்மையைக் குறித்துப் பாடிய வடமொழித் தோத்திரமாகும்.

புலவர்கள் :

பதினைன்காம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறந்த நகைச்சுவைக் கவிஞரான காளமேகம் கற்ற கல்வியே, அகிலாண்டநாயகியின் திருவருள் என்பது வரலாறு. திருவானைக்கா உலா என்றதொரு நூலும், பல தனிப்பாடல்களுமாகப், பாரெல்லாம் அகிலம்மையின் புகழ் பரவுமாறு கவி காளமேகம் பாடிய பாடல்கள் கற்றவர்கள் நெஞ்சத்தை எல்லாம் கொள்ளை கொள்ளத்தக்க இத்தலத்தின் சிறப்பைக் கூறிக் கொண்டு இன்னும் தமிழ் இலக்கியத்தில் நின்று நிலவுகிறது. இன்னும் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிருந்த சதாசிவ தீட்சிதர் என்ற அந்தணப் பெரியார், அகிலாண்டநாயகியை வழிபட்டுப் பல சித்துகள் செய்ததாகச் சரித்திரம் பேசுகிறது. அவர் நிறுவிய ஏகாட்சியம்மன் கோயில் கீழ்ப்புறம் சுந்தரபாண்டியன் கோயிலுக்கு அருகில் உள்ளது. அந்தணரான அப்பெரியார் இக்கோயிலுக்கு நாயக்க மன்னர்களின் ஆதரவில் செய்துவைத்த திருப்பணிகள் பலவாகும்.

மேலும் முருகன் பெருமையை உலகறியத் தம் திருப்புகழ்ப் பாடல்களால் பரப்பிவந்த சந்தப் புலவர் அருணகிரிநாதர், இக்கோயில் முருகனை இரண்டு பாடல்களால் சிறப்பிக்கிறார். கோயிலுக்குள் சிலை வடிவுள்ள தெய்வத்தை மட்டுமல்லாமல் தென்புறம் வாயிலருகே உள்ள சம்பு தீர்த்தக்கரையில் புடைப்புச் சிற்பமாகப் போர்க் கோலத்துடன் வில்லேந்திய வேலனாக விளங்கும் முருகனையும்கூட, அப்பெரியார் தம் திருப்புகழில் குறித்துள்ள பெருமை நாம் உணர்ந்து வியக்கத்தக்கது. இளைய பிள்ளையார் புலவர்கள் பாடலால் பெருமையுறுவது போல, மூத்த பிள்ளையாரான விநாயகர் சிற்பத்திறமையால் சிறப்புற்று இக்கோயிலில் இருப்பதும் ஒரு பெருமை. தென்னகத்தில் வேறு எங்குமே இல்லாத அற்புதச் சிற்பம் சுவாமிகோயில் இரண்டாம் சுற்றிலிருக்கும் வல்லபை கணபதியின் உருவம். அம்பாள் கோயிலில் உள்ள மிகப்பெரிய திருவுருவமான சந்நிதிப் பிள்ளையாரையும், தென்மேற்கு மூலையிலுள்ள ஐம்முகக் கணபதியையும் காண்பார் பரவசமடைவது திண்ணம். மேலும் நமது காலத்துக்குச் சற்று முன் வாழ்ந்த கல்விக் கடலான மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், அகிலாண்ட நாயகிக்குச் சாற்றி மகிழ்ந்த அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகிமாலை என்னும் இரண்டு நூல்களும் இன்னும் தமிழ் நாடெங்கும் கவிதைமணம் பரப்பிக் கொண்டிருப்பது தமிழ்ப் புலமை உள்ளோர் அறிவர். பலபல வடமொழித் துதி நூல்களையும், தமிழ்த் துதி நூல்களையும் பெற்றுள்ள இத்தலம், காலம் சிதைக்கினும் சிதையாமல் என்றும் புகழுடன் விளங்குகிறது.

முடிவுரை :

திருவரங்கத் தலத்தைக் குறித்த "கோயிலொழுகு" என்னும் வரலாற்று நூலில் திருவானைக்காவைப் பற்றிய பல குறிப்புகள் அறியக் கிடக்கின்றன. இதையெல்லாம் விரிக்கின் பெருகும். இன்னும் இக்காலத்துக் கவிஞர் கலைவாணன் அவர்களால் பாடப்பெற்ற காவை முருகன்பிள்ளைத்தமிழ், இவ்வூர்ப்பெருமையைப் புதுக்கிக் கொண்டிருப்பது காணலாம். இவை எல்லாம் ஒரு புறமிருக்க ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில், ஏன்? சாதாரண வெள்ளிக் கிழமைகளிலும் அகிலம்மையைத் தரிசிக்கக் கூடும் பெருந் திரளான கூட்டமே, வணக்கத் தலங்களில், திருவானைக்கா ஒப்பற்றது என்பதை விளக்கும். வாருங்கள். நீங்களும் எங்கள் திருஆனைக்காவுக்கு ஒருமுறை வந்து ஆனைக்கா அண்ணலையும், அம்மையையும் தரிசித்துப் புண்ணியம் பெறுங்கள். இம்மை மறுமை நலங்களை அடையுங்கள். ★

திருமூலர் காட்டும் அறம்

'திருக்குறள்வேள்'
திரு. சு. வரதராசபிள்ளை அவர்கள், திருச்சி.

முன்னுரை :

திருமந்திரம் என்ற ஞானநூலை அருளிச் செய்தவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான திருமூல தேவராவார். இவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் தற்கால ஆராய்ச்சியாளர்கள் இவர் மூன்றும் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டுக்குள் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறார்கள். இவர் திருவாவடுதுறையில் சிவபோதியின் நிழலில் தங்கிச் சிவன் நாமங்கள் ஓதியிருந்தார். இவர் அருளிச் செய்த நூல் திருமந்திர மாலையாகும். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. இதனைச் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாகப் பெரியோர் தொகுத்துள்ளனர்.

இந்நூலில் அறம் அறையப் பெறுகிறது; கிரியை கூறப்பெறுகிறது; இறைவனது பெருமை பேசப் பெறுகிறது; இதில் யோகம் பற்றிய விளக்கம் உள்ளது; இங்குச் சமய விளக்கத்தைக் காணலாம்; சைவத்துக்கே சிறப்பான அம்சமான குருவின் பெருமை இதனுள் எடுத்து இயம்பப்படுகிறது; சமயப் பொருள்களின் விளக்கம் இங்கு உள்ளது; இறுதியாக ஞானத்தைப்பற்றியும், ஞானம் பெற்றோரின் இயல்பு பற்றியும் கூறி ஆசிரியர் முடிக்கும் முறை மிகவும் வியப்புடையதாகும்.

இந்நூலுள் இன்னொரு சிறப்பு என்னவென்றால் சாதாரணப் பொருள் பற்றிக் கூறுவது போல அரிய தத்துவத்தைஎடுத்து எளிமையாக விளக்குவார் ஆசிரியர். சமயநூல்களிலே கூறப்பெறும் சிவலிங்கம், சிவபூசை, தத்துவமசி மகாவாக்கியம், அஞ்செழுத்துண்மை முதலிய தலைப்புக்களில் இவர் கூறும் பொருள்கள் தனித் தன்மையும் மேன்மையும் வாய்ந்தவை. எனினும் இவரது நோக்கம், இவர் பெற்ற இன்பம் பிறரும் பெற்று வாழவேண்டும் என்பதாகும். "நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்பது இவரது கருணைமொழி,

(1) யாக்கை நிலையாமை :

ஞானநூல் கூறவந்த பேரருளாளராகிய திருமூலர் எடுத்த எடுப்பிலேயே மனிதன் அறவாழ்வுவாழவேண்டிய இன்றியமையாமை பற்றி இயம்புகிறார். மேலும் அறம் கூறுவதற்குமுன் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமையைக் கூறி, அறம் ஒன்றே நிலையானது என்று வற்புறுத்துகிறார். திருவள்ளுவர் போன்று செய்யத்தகாதன இன்ன, செய்யத்தக்கன இன்ன என வகுத்துக்கொண்டு அறம்பற்றிக் கூறுவது மிக்க பயனுடையதாக அமைகின்றது. முதலில் யாக்கை நிலையாமையைக் கூறி மனித சமுதாயத்துக்கு இரங்குகிறார். அழகாகப் போற்றி வளர்க்கும் இவ்வுடம்பு மண்ணாலாகிய பாத்திரம் போன்றது. ஆனால் அம்மண்ணாலாகிய பாத்திரம் மழைநீர் பெய்யின் கரைந்து மண்ணாவது போல வினைக்குக் கொள்கலமாகிய இவ்வுடம்பு முடிவில் மண்ணாய்ப் போகின்றது.

"Dust thou art; to dust thou returnest" என்ற ஆங்கிலக் கவிஞனின் பாடல் வரியோடு ஒப்பிட்டு உணர்க. வினைக்கு இடமான உடம்பு நாளா வட்டத்தில் தேய்ந்து நீங்கினால் உடனிருந்து மகிழ்ந்த பெண்டிரும், மக்களும் உடன் வரமாட்டார்; அப்பொழுது அவருடன் வருவன அவர் செய்த அறத்தின் பயனும் ஞானமுமேயாகும். "பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால் உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார், கொண்ட விரதமும் ஞானமும் அல்லது மண்டி அவருடன் வழிநடவாதே" என்பது அவர் வாக்கு : (144.)

நம் வாழ்க்கையின் இறுதியில் என்ன நடக்கும் தெரியுமா? ஊரில் உள்ள எல்லோரும் கூடி ஒப்பாரி வைத்து இராகத்தோடு பாடிப் பேரை மாற்றிப் பிணம் என்று புதிய பெயரிட்டுச் சுடுகாட்டில் இட்டுச் சுட்டபின் நீரில் சென்று மூழ்கி இறந்தவரது நினைவுமின்றி வீடு திரும்புவார். இவ்வாறு அவர் கூறுவது எத்துணைப் பொருத்தமாக உள்ளது? (145). இறப்பு எதிர்பாராத வகையில் எத்துணை அவசரமாக வருகிறது என்பதைப்பற்றி அவர் கூறுவது இன்று காட்சியில் காணக்கிடக்கின்ற ஒன்ருரும். "அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார், மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார், இடப்பக்கமே இறை நொந்தது என்ருர் கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே" (148). பகல் முழுவதும் நன்ருக இருந்து, மனைவியோடு கூடி மகிழ்ந்து உண்டிருந்தவர் நெஞ்சு வலிக்கிறது என்று கூறி, மருத்துவர் வருமுன்னர் இறந்து கிடக்கிருர். இதனைப் போன்ற செய்தி நாள்தோறும் பத்திரிகை வாயிலாக நாம் படிக்கிறது தானே! "நெருநல் உளஞெருவன் இன்றில்லை என்னும், பெருமை யுடைத்திவ் வுலகு" என்ற திருவள்ளுவ நாயனுர் வாக்கை ஒப்பிட்டுக் காண்க.

உடம்பிலுள்ள மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐந்து இந்திரியங்களும் உடம்பில் சீவன் உள்ளவரைதான் அவை தொழில் புரியும். சீவன் பிறந்த பின்னை அவை தொழில் செய்யா. மேலும் உசுவாச நிசுவாசமாகிய காற்றுகளும் உடம்பைவிட்டுப் பிரிந்துவிடும். அவ்வாறு பிரிந்தபின் அவரது சடலத்தைக் காக்கை கொத்தித் தின்ருல் என்ன? கண்டவர் பழித்தால் என்ன? போற்றினுல் தான் என்ன? உடம்பிலிருந்து ஆட்டிக் கொண்டிருந்த சீவன் உடம்பை விட்டு வெளியே புறப்பட்டு விட்டது, பின் உடம்புக்கு ஏதும் உணர்ச்சி இல்லையே! "காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென் பர்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென் தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங் கூத்தன் புறப்பட்டுப் போன இக் கூட்டையே". (176). இத்துணையும் கூறியது நிலையில்லாத உடம்பில் வாழும்போது நிலையான அறத்தை மேற்கொண்டு செய்துவிடவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவேயாம்.

(2) செல்வம் நிலையாமை :

தன்னேடு தொடர்புடைய உடம்பே நிலையில்லாதபோது தொடர்பில்லாத செல்வமா நிலைத்திருக்கப்போகின்றது? செல்வம் என்பது என்றுமே ஒருவனிடம் நிலைத்திராது. அது வந்து கொண்டும் போய்க்கொண்டுந்தான் இருக்கும். திருவள்ளுவர் கூறுவதுபோல அது வரும் போது ஒவ்வொன்ருய் வரும்; ஆனல் போகும் போது விரைவில் ஒரு சேர நீங்கிவிடும். "கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம், போக்கும் அது விளிந்தற்று". நிலையில்லாத செல்வம் உள்ளபோதே நிலையான அறத்தைச் செய்து ஞானமாகிய செல்வத்தைப் பெற்றுவிடவேண்டும். அவ்வாறு பெருவிடில் ஈட்டிய செல்வத்தைப் பிறர் கொண்டு செல்வர். தேன் ஈக்கள் பல மலர்களிலிருந்தும் நெடுநாள் சேகரித்து வைத்திருந்த தேனை எவ்வாறு ஒரு நாள் தீயார் எடுத்துக் கொண்டு செல்வார்களோ அவ்வாறு ஈயார் ஈட்டிய செல்வத்தை வலியார் எடுத்துக் கொள்வர். தீயார் தேனைக் கொள்ளும்போது ஈயார் மடியவும் செய்வர். "ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும் கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும். ஒட்டித் துரந்திட்டதுவலி யார்கொளக் காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே". செல்வம் உள்ளபொழுது அதன் பால் பற்றுக் கொள்ளாது வறியார்க்கு ஈந்து இன்பம் பெறவேண்டும் என்பது திருமூலர் திருவுள்ளம். "செல்வத்துப் பயனே ஈதல்" என்கிருர் சங்கச் சான்ருேரும்.

(3) இளமை நிலையாமை:

செல்வம் இருப்பினும் அதன் பயனை அடைந்து விட முடியுமா? அதன் பயனை அநுபவிப்பதற்கு இளமையும் வேண்டும். ஆனல் இளமையும் செல்வத்தைப்போல நிலையற்றதாகும். காலையில் கிழக்கே உதிக்கின்ற சூரியன் பகலில் உச்சிக்கு வந்து மாலையில் மறைவதைக் காண்கிருேம்; இளமை நலம் பொருந்திய கன்று பெரியதாய் மூத்து மடிவதையும் காண்கிருேம். அவ்வாறுள்ளபோது மனிதன் மட்டும் எவ்வாறு தோன்றியபடியே இளமையோடு இருக்க முடியும்? அறிவில்லாதவர் இவ்வுண்மையை உணரவில்லையே என இரங்குகிருர் திருமூலர்; 'கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே விழக் கண்டும் தேருர் விழியிலா மாந்தர் குழக்கன்று மூத்தெரு தாய்சில நாளில் விழக்கண்டும் தேருர் வியனுல கோரே". இளமை கழிந்து போகும் முன் அருமையான செயலைச் செய்து விட வேண்டும். முதுமையில் செய்ய எண்ணினுலும் அருஞ்செயலைச் செய்வதற்குரிய ஆற்றல்

இல்லாது போய்விடும். "அன்றறிவாம் என்னு தறம் செய்க மற்றது பொன்றுங் கால் பொன்ருத் துணை", என்ருர் நாயனுரும்.

ஆடவரை இளமையில் அழகிய மாதர் விரும் பிப் பயனைப் பெறுவர்; ஆனுல் இளமை நலத்தை நுகர்ந்தபின்னர்க் கரும்பின் சாற்றைப் பெற்றுச் சக்கையை ஒதுக்குவது போல வெறுத்து ஒதுக்கிவிடுவர் என்று உவமையோடு ஆசிரியர் கூறும் விளக்கம் நகைச்சுவையாக உள்ளது. "விரும்புவர் முன்னென்னை மெல்லி யல் மாதர் கரும்பு தகர்த்துக் கடைக்கொண்டு நீர்போல் அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக் கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத் தேனே". கசப்பினை நல்கும் காஞ்சிரங்காயைச் சொல்லும்போது வெறுப்பின் எல்லையைக் காட்டு கிருர் ஆசிரியர். பின் மனிதன் பாலனுக, இளைஞனுக, விருத்தனுக இருந்து மறைவதைக் காட்டி அவர் இளமை நிலையாமையை விளக்கு கிருர். "பாலனுய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதை மார்தம் மேலனுய்க் கழிந்தநாளும் மெலிவொடு மூப்பு வந்துகோலனுய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன் சேலு லாம் பழனவேலித் திருக்கொண் டீச்சரத் துளானே" என்ற திருநாவுக்கரசர் வாக்கை ஒப்பு நோக்குக. சூரியன் நாளாகிய வாளைக் கொண்டு மனித ஆயுளை அறுக்கிருன் என்று உணர்ந்து இளமை கழியாமுன்னம் இறை வனது திருவடியை ஏத்தி அறவாழ்வு வாழ வேண்டும் என்பது அவரது அறிவுரை.

(4) கொல்லாமை:

நிலையாமையைக் கூறி அறிவுறுத்திய ஆசிரி யர் அறம் கூறத் தொடங்குகின்ருர். அறத்தை எதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத் தானும் கூறுவது மரபு. திருவள்ளுவ நாயனுரும் இவ்விருவகையாகப் பகுத்து அறத்தைக் கூறு கிருர். திருமூலரும் அவ்வாறே எதிர்மறை முகத்தான் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணுமை ஆகி யவை கூறி, உடன்பாட்டு முகத்தால் தானச் சிறப்பு, அன்புடைமை, அரசர் கடமை ஆகிய வற்றை விளக்குகிருர். கொல்லாமை என்பது, ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை எல்லாப் பிறப்பினங்களிலும் ஒன்றையும் கொல்லாமை.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற இராமலிங்க அடிகள் வாக்கு நினைவுக்கு வருகிறது. உடம்பினுள் உயிரைப் புகுத்தத் திறமையில்லாதவர் உடம்பினுள் உள்ள உயிரைப் பிரிப்பது என்ன நியாயம்! அவ்வாறு பிரிப்பின் அவரது வாழ்நாள் முடிவில் இயமன்றன் தூதுவர் இவரைப் பிடித்துக் கட்டித் தீவாய் நரகில் தள்ளுவர் என்று எச்ச ரிக்கிருர். "கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை வல்லடிக் காரர் வலிக்கயிற் ருற்கட் டிச் செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே". (198)

(5) பிறன்மனை நயவாமை:

கொலை புரிதலைப் போலவே பிறன் மனைவியை விரும்புதலும் தீய செயலாம். இரண்டு அருமை யான உவமைகளால் பிறன்மனை நயத்தலின் சிறுமையைக் கூறுகிருர். அன்புடைய தன் மனைவி வீட்டில் இருக்கும்போது பிறன் மனை வியை விரும்புதல், வீட்டுக்கொல்லையில் காய்த்துத் தொங்கும் பலாவின் கனியை உண்ணுது காட்டுப்புறத்தில் கிடக்கும் ஈச்சம் பழத்தை விரும்பி இடர் உற்றது போலாகும். அது மட்டுமன்று, பொருத்தமான மாம்பழம் வீட்டில் இருக்க அதனை உண்ணுது வைத்து விட்டுப் பொருத்தமில்லாத புளியம்பழத்தை விரும்பித் துன்பப்பட்டது போலுமாம் என்று, நயமாகப் பிறன்மனை நயத்தலால் வரும் கேட் டினை விளம்புகிருர்.

எட்டிப் பழம் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சி யாகவுள்ளது; ஆனுல் அதனை உண்ண முடியுமோ? அதன் சுவையை எண்ணி அதன் மேல் உண்டாகும் ஆசையை விடவேண்டும்; அதுபோலத்தான் கவர்ச்சியான தோற்றத்தைக் காட்டும் மகளிர் மேல்செல்லும் ஆசையை அதன் விளைவு கருதிவிடவேண்டும். அவ்வாறு விடாதவர் பாசியால் மூடப்பட்ட குளத்தில் ஆழந் தெரியாது காலைவிட்டுக் கெடுவதைப் போலக்கெடுவர். அவ்வாறு கெடாது அவர்க ளைத் தடுத்து நிறுத்தி நல்வழிப்படுத்துவது சான்ருேர் கடனுகும். "கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில் ஆழ நடுவார் அளப்புறு வார்களைத் தாழத் துடக்கித் தடுக்ககில் லாவி டில் பூழை நுழைந்தவர் போகின்ற வாறே".

—தொடரும்

திருமங்கையாழ்வாரின் சிறப்பியற் பண்பு

திரு. தி. கோ. இராமாநுசதாச நாயுடு அவர்கள், தலைவர், நம்பிள்ளை சபை, சென்னை.

திருமாலடியார்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவருள் திருமங்கையாழ்வாரும் ஒருவர். இவர் சோழநாட்டில், திருஆலி திருநகரியில். திருக்குறையலூரில் அவதரித்தவர். இவருக்கு ஆலிநாடன், மங்கைவேந்தன், மங்கையர் கோன், கலியன், கலிகன்றி, வாள்வீசும் பர காலன் முதலிய பலதிருப்பெயர்கள் உண்டு. இவ்வாழ்வார் அருளிச்செய்தநூல்கள் முறையே பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமொழி, பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்னும் ஆறு பிரபந்தங்கள் ஆகும். நான்கு வடமொழி வேதங்களுக்கும் ஆறு அங்கங்கள் இருப்பது போல, நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு தமிழ் வேதங்களுக்கும் உரிய ஆறு அங்கங்களாகத் திருமங்கையாழ்வாரின் ஆறு பிரபந்தங்களும் விளங்குகின்றன.

திருமங்கையாழ்வார் திருவரங்கம் பெரிய கோயிலில் மிகப்பெரிய பல திருப்பணிகள் செய்தருளினர். இவர் ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரம் என்னும் நான்குவகையான கவிகள் பாடுவதிலும் ஆற்றல் மிக்கவராக விளங்கினர். இவருக்குரிய சிறப்பியற் பண்புகள் எத்தனையோ பலவுண்டு. அவைகளுள் எல்லாம் தலை சிறந்தது, இவர் அடியார்கள் திறத்தில் கொண்டிருந்த அளவற்ற அன்பும் பக்தியும் ஊற்றமுமாகும். அதனை, எம்பெருமானுக்கும் இவருக்கும் நடந்ததாக அமைந்துள்ள பின் வரும் உரையாடற் பகுதியினால் உணரலாம்.

"நறையூர் நின்ற நம்பிதன் நல்லமாமலர்ச் சேவடி சென்னியில் சூடியும் தொழுதும் எழுந்தாடியும்" (பெரிய. திரு. 7—3—10) என்று இவ்வாழ்வார் பாசுரத்தைக்கேட்டு, இவர் கால் வாசியறிவாராய் இருந்தாரென்று, பெருமான் "ஆகில் ஆழ்வீர் ! திருச்சேறையிலே வாரீர்! உம்முடைய விருப்பத்தைத் தலைக்கட்டித் தருகின்றேம் என்ன,

இவ்வாழ்வாரும் திருச்சேறையிலே எழுந்தருள, பெருமாள் இவ்வாழ்வாருடைய அசைந்த வளையத்திலே புழுகை வழிய வார்த்தாப்போலே 'மாமதலைப் பிரான்' (பெரிய. திரு. 7—4—1) தம்முடைய திருவடிகளைக் கொண்டு வந்து வைக்கப்புக,

ஆழ்வார் அத்தைப் புறங்கையாலேதட்டி, உன் 'பொது நின்ற பொன்னங்கழலோ' (மூன்றும் திருவ. 88) என்தலை மேலிருப்பது ! உன் "தாள் தொழுவார் காண்மின் என் தலை மேலாரே" (பெரிய திரு. 7.4.1) என்ன,

பெருமான் : அத்தைக்கேட்டு நாணம் அடைந்வனுய் "உமக்கு நாம் உள்ளுறைபவனுய் இருந்தோமே" என்ன,

ஆழ்வார் : "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றுரே" (பெரிய திரு. 7. 3. 2.) என்ன,

பெருமான் : "ஆகிலும் அர்ச்சாவதாரமாய்ச் சுலபமாயிருந்தோமே" என்ன,

ஆழ்வார் : "கடன் மல்லைத் தலசயனத் துறைவாரைக் கொண்டாடும்
நெஞ்சுடையார் அவர் எங்கள் குல தெய்வமே" (பெரியதிரு. 2. 6. 4) என்ன,

பெருமான் : "ஆகிலும் அவர்கள் எங்குள்ளார் ?" என்ன,

ஆழ்வார் : "போதோடு புனல்தூவும் புண்ணியரே விண்ணவரில் பொலிகின்றுரே" (பெரிய. திரு. 7. 4. 3) என்று அவர்கள் இயல்பைச் சொல்ல,

பெருமான் : "கண்களாரளவும் நின்று" (பெரிய. திரு. 7. 10. 9) என்கிறபடியே "கண்ணுக்கிரையிடுகைக்கும் நாம் வேணுமே !" என்ன,

ஆழ்வார் : " வண்சேறை யெம்பெருமான் அடியார் தம்மைக் கண்டேனுக்கு இது காணீர் என்னெஞ்சும் கண்ணிணையும் களிக்கு மாறே " (பெரிய. திரு. 7.4.6) என்ன,

பெருமான் : " ஆகிலும் எல்லா மணமும் எல்லாச் சுவையும் " என்கிறபடியே உமக்கு எல்லாம் கலந்த சேவைக்கு நாம்வேணுமே " என்ன,

ஆழ்வார் : " தண் சேறையெம் பெருமான் தாளை நாளும் சிந்திப்பார்க்கு என்னுள்ளம் தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே " (பெரிய. திரு. 7.4.5) என்ன,

பெருமான் : ஆகிலும் உமக்கு உபாயஉபேயத் துக்கு நாம்வேணுமே " என்ன,

ஆழ்வார் : உபாயத்துக்கு முற்பாடராகையா லும், உபேயத்துக்கு எல்லை நிலமாகையா லும் ; இங்கிருக்கும் நாளைக்கு உசாத்துணை யாகையாலும், " பேராளன் பேரோதும் பெரி யோரை ஒருகாலும் பிரிகிலேனே " (பெரிய. திரு. 7.4.4) என்ன,

பெருமான் : ஆகில் அடியிலே நமக்குத் தாச ரென்று புகுந்தீரே என்ன,

ஆழ்வார் : " மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க் கடிமை" (பெரிய திரு 8.10.3) என்ன,

பெருமான் : இவ்வாழ்வார் நின்ற நிலையில் தமக்குப்பிறந்த விருப்ப மேலீட்டிலே பின்னை யும் அவ்வாழ்வார் திருவுள்ளத்தைச் சோதிக் கைக்காக - " அடியிலே நம்மைக் கவிபாட வென்றிழிந்து நம்மடியார் திறத்திலே மிகவும் மண்டிற்றென் " ? என்ன,

ஆழ்வார் : " அரசின் அடலேறு " என்னு மாப்போலே ஒருவனைக் கவிபாடும் அவன் ஊரும் பேரும் குடியும் தாரும் வைத்துக் கவி பாடுமாப்போலே சொன்னேனித்தனை - அடி யார் செயலே உயர்ந்தது " என்ன,

பெருமான் : " ஆகில் ஆழ்வீர் ! நம்மை மறுத் துச் (பிரித்துச்) சொன்னீரே ", என்ன,

ஆழ்வார் : " பர்த்தாவினுடைய தேகத்தை விரும்பும் பதிவிரதைக்குக் குற்றமுண்டாகி லன்றே தேவரீருடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை விரும்பின எனக்கும் குற்ற முண்டாவது " என்றார்.

(குறிப்பு : அடியார்கள் எம்பெருமானுக்குத் திருமேனி போல்வார்.)

இவ்வாறு இவ்வாழ்வார் தமக்கு அடியார்கள் விஷயத்தில் உண்டான ஊற்றத்தைச் சொல் லக் கேட்டு, மாமதலைப்பிரான் (பெரிய. திரு. (7.4.1) திருவுள்ளங் களித்து உகந்து இவ் வாழ்வாருக்குத் தோற்றோம் என்று இவர் திறத் திலே மட்டெடுக்கும் படியாயிற்று ஈசுவரன் திருவுள்ளம்.

1. உயிரின் இயல்புக்கு எல்லைநிலம் அடி யார்க்கு அடிமை.

2. இறையியல்புக்கு எல்லைநிலம் திருவுரு வங்கள்.

3. தடையின் இயல்புக்கு எல்லைநிலம் அகப்பற்று புறப்பற்றுகள்.

4. நெறியின் இயல்புக்கு எல்லைநிறம் இறையருள்.

5. நெறியின் பயனுக்கு எல்லைநிலம் இறை வன் திருமுகத்துவகை.

என்பது நம்பிள்ளை அருள்மொழி. வீடுபேறு விரும்பும் அடியவர்களாகிய நாம் அறிய வேண் டிய ஐம்பொருள்களின் எல்லைநிலம் இன்ன தென்பதை அறிந்து, அதிலே ஊன்றி நிற்க வேணும் ; அதற்கு அருள்திரு நம்பிள்ளை வார்த்தையை நாம் நித்தல் நினையக்கடவது.

திருப்பாவைச் சிறப்பு

முன்னுரை :

சைவம், வைணவம் என்னும் இருபெருஞ் சமயங்களும், தமிழ் நாட்டிற்கு இரண்டு கண்களைப் போன்றவை. திருவெம்பாவை, திருப்பாவை என்னும் இரண்டும், அச்சமயங்கள் ஆகிய கண்ணிற் கருமணியுள் ஆடும் பாவைகளைப் போன்ற சிறப்புடையவை. "என்இரு கண்ணே கண்ணிற் கருமணியே மணிஆடு பாவாய்" என்றுற்போல வரும் பெரியோர் திருமொழிகள், ஈண்டுக் கருதியுணரற் பாலன.

பாவை நோன்பு :

மார்கழி மாதத்தில் வைகறையில் துயில் எழுந்து நீர்நிலைக்குச் சென்று நீராடி, மணலால் காத்யாயநீ தேவியின் திருவுருவம் (பாவை) சமைத்துச், சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் ஆகியவற்ருலும், மற்றும் பல சிறந்த நைவேத்தியங்களாலும் வழிபட்டு, உலக நலங் கருதி மழை பொழிதற் பொருட்டும், தம் நலம் கருதித் தமக்கு ஏற்ற இனிய கணவர் வாய்த்தற் பொருட்டும், இளம் மகளிர் ஆகிய பாவையர், தேவியை வேண்டிக் கொள்வர்.

"நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்"
"நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்"
"பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்"

எனவரும் சிறந்த திருப்பாவைத் தொடர்களில், 'பாவை' என்பது தேவியின் திருவுருவத்தைக் குறித்து நிற்றல் காணலாம். எனவே, இதனைப் 'பாவை நோன்பு' என வழங்குவர். 'பாவை' என்பது 'கொல்லிப்பாவை' என்புழிப்போல, ஈண்டுப் பெண் தெய்வத்தின் பிரதிமையாகிய திருவுருவத்தைக் குறிக்கும். பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்பு (வழிபாடு), 'பாவை நோன்பு' எனப் பெயர் பெற்றது.

பாவைப் பாட்டு :

பாவை நோன்பு பற்றிய பாடல்கள் ஆதல் பற்றியே, திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர்கள் ஏற்பட்டன. பெயருக்கு ஏற்ப இந் நூல்களின் ஒவ்வொரு பாடலும் "எம்பாவாய்" என்னும் தொடரினை ஈற்றிற் கொண்டு முடிகின்றது. ஆதலின் இன்னோரன்ன பாடல்களைப் 'பாவைப் பாட்டு' என்று முன்னோர்கள் வழங்கியுள்ளனர். சைவ வைணவ சமய மக்களால் மட்டுமேயன்றி, சமண பௌத்த சமயங்களைச் சேர்ந்த மக்களாலும் 'பாவைப்பாட்டு' நூல்கள் இயற்றப்பெற்றுப் போற்றப்பட்டமை, யாப்பருங் கலவிருத்தி யுரையாற் புலனாகின்றது. பிற் காலத்தில் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை' என்னும் நூலின்கண் "சொரூபானந்தர் திருவெம்பாவைகள்" வேதாந்த பரமாகக் காணப்படுகின்றன. மேலும் கடல் கடந்த பிற கிழக்காசிய நாடுகளிலும்கூட, இந்நூல்கள் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப்பட்டு வரும் செய்திகள், அறியப்படுகின்றன.

திருப்பாவையின் சிறப்பு :

(1) பாவைப்பாட்டு நூல்களுள் திருப்பாவையின் சிறப்பு மிகவும் பெரிது. எம்பெருமானரை "ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச் செய்ய வேணும்" என்ன, அவர் "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்று அருளிச் செய்தார் எனத் திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறுகின்றது.

(2) பெரியாழ்வார் வயிற்றிற் பிறக்கையாலும், தானே யான தன்மையினாலும், ஞான பக்திகள் கணந்தோறும் பெருகப்பெற்றுப் பிறங்கிய ஆண்டாளின் திருப்பாவைக்கிக் கருத்து: "மார்கழி நீராடுதல் என்ற ஒரு தலைக்கீட்டாலே எம்பெருமான் பக்கலிலே சென்று உனக்கு அடிமையாய் இருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப்படாதபடி பண்ணி இதுக்கு ஸ்வரூபமாக கைங்கரியங்களையும் கொடுத்து, அவை தாமும் ஆன்மா இருக்கும் அளவும் உளவாகும்படி பண்ணியருளவேணும்" என்று அபேட்சித்தல் ஆகும்.

ஆண்டாள் சிறப்பு :

திருப்பாவை அருளிச் செய்த ஆண்டாளின் அளப்பரும் சிறப்புக்களை உரையாசிரியர்கள் பலவகையிற் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

(1) "திருத்துழாய் பரிமளத்தோடு கூட முளைக்குமாபோலே, ஆண்டாளும் பால்ய யௌவநாவத்தைகள் தோறும் பரபக்தி பர ஞான பரமபக்திகளை அதிகமாக உடையவள் ஆகையாலே, இறையருட் செய்திகளில் எல்லையற்ற ஈடுபாடு, அல்லாத ஆழ்வாரைக் காட்டில் இவளுக்கு மிகவும் அதிசயித்திருக்கும்.

(2) "பத்து ஆழ்வார்களுடையசார பூதை யாகத்திகழ்பவள் ஆண்டாள். பதின்மருடைய ஞானமும் சீதனக்காணியாக இவள் பக்கலிலே யிறே குடி கொண்டது. பத்துப் பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே".

(3) "ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர் வறமதிநலம் அருளவேண்டிற்று, எம்பெருமானை எழுப்பித் தன் குறையை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்கையால், இவள்தான் எம் பெருமானுக்கு மயர்வற மதிநலம் அருளினுள்".

(4) "இளைய பெருமாள் படி ஆழ்வார்களது, பரதாழ்வான்படி பெரியாழ்வாருடையது. சத்ருக் நாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார்க ளும் இளையபெருமாளும் பகவத் அநுபவத்தை ஆசைப்பட்டார்கள். பரதாழ்வானும் பெரியாழ் வாரும் இறைநிறைவை ஆசைப்பட்டார்கள். சத்ருக்நாழ்வானும் ஆண்டாள் நாச்சியாரும், அடியார்க்கு அடிமையிலே நின்ருர்கள்".

(5) "தேகாத்மாபிமாநிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் முனிவர்களுக்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போரும் : முனிவர்களுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும். பெரியாழ்வாருக்கும் ஆண்டா ளுக்கும் மலைக்கும் அணுவுக்கும் உள்ள வேறு பாட உண்டு."

(6) "அவர்களில் இவளுக்கு வாசி என் ? என்னில் ; உலகியல் வாழ்விலே அழுந்தி மயங்கி யுறங்குகிறவர்களை எழுப்பி, எம்பெரு மான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள். ஆனல் இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே, அவர்களைக் காட்டிலும் இவள் மேலானவள் ஆவாள்."

"அஉரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தான் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை
விதிக்கிற்றியே"

என்கிறபடியே, (7) பிறந்ததள் தொடக்கமே பிடித்து ஆண்டாள் பகவத் குணங்களிலே ஈடு பட்டுப் போந்தாள். (8) மேலும் புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை பள்ளமடை யாகையாலே, ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரபக்தியுடையவள் ஆண்டாள்"

"அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்க்—பிஞ்சாய்ப்
பழுததாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து" (9)

(10) மேலும், "இவள்தான் பிராம்மணியாய் இருந்து வைத்தும், யாகத்திலே விரதத்தை மேற்கொண்டவர்கள் தேவதத்தாதி நாமங் களைத் தவிர்த்து, யாகம் முடியும் அளவும் "எசமானன்" என்றும், 'அத்வர்யு' என்றும், 'ஹோதா' எனறும் இவை போன்ற பெயர் களைப் பெறுவதுபோல, இங்கே வில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், இங்குள்ள பெண்களே இடைப்பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே நந்த கோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிற வன் கண்ண பிரானு கவும், அநுசந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப் பாடியில் நினைவின் முதிர்ச்சியாலே குடிபோய், அநு காரம முற்றி அவைதாமேயாய், இடை நடை யும், இடைமுடியும், இடைப்பேச்சும், முடை நாற்றமுமாய் மாறி நின்று, ஆண்டாள் இந் நூலை அருளிச் செய்கின்ருள்.

இவ்வரும்பெரும் நூலுக்குப் பண்டைப் பேரறிஞர்கள் அருளிச் செய்த விரிவுரைகள் பல விரிந்து பரந்துள்ளன. அவை மொழிக்கு

தித்திப்பாக'' அமைந்துள்ளன. அவைகளுள் பெரியவாச்சான்பிள்ளை அவர்கள் அருளிச்செய்த மூவாயிரப்படி வியாக்கியானமும், அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் அருளிச்செய்த ஆருயிரப்படி வியாக்கியானமும், சுத்தசத்துவம் தொட்டாசாரியார் அருளிச்செய்த சுவாபதேச வியாக்கியானமும், வானமாமலை ஜீயர் சுவாமிகள் இயற்றிய சுவாபதேச வியாக்கியானமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவ்வரிய பெரிய உரைநூல்களின் நுண்பொருள்நலங்கள், யாவரும் அறிந்துணர்ந்து மகிழத் தகுந்தனவும், நினைவிற் பதித்துக்கொண்டு என்றும் சுவைத்து இன்புறத்தக்கனவுமாக உள்ளன. இத்தகைய திருப்பாவைப் பாடல்களையும், அவற்றின் வியாக்கியானங்களின் அரும்பெரும் விளக்கங்களையும், நாம் அன்புடன் கற்று ஓதி மகிழ்தலின் மிக்க இன்டம், நம்மனோர்க்கு மற்றெதுவும் இல்லை எனலாம். —ஆசிரியர்.

பாதகங்கள் தீர்க்கும்; பரமனடி காட்டும்;
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்—
கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை,
வையம் சுமப்பதும் வம்பு.

காஞ்சிபுரம் 'இசைப்பேரரசர்' திரு. நாயனுபிள்ளை அவர்களின் மாணவரும், மாமல்லபுரம் நெம்மேலி திரு. ஆளவந்தார் நாயகர் அறக்கட்டளைத் திவ்வியப் பிரபந்தப் பண்ணிசைப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் ஆகிய திரு. எம். என். வேங்கடவரதபிள்ளை அவர்களால், சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றததில் ''வைணவப் பாசுர அரங்கு'' என்னும் சிறப்புக் கலைநிகழ்ச்சி நடத்தப்பெற்றது1 சிறந்த அறிஞர்களும், உயர் அலுவலர்களும் ஆகிய பெருமக்கள் பலர் வந்திருந்து கேட்டு மகிழ்ந்து, பாராட்டிப் போற்றினர் (13—11—73).

தந்தை பெரியாருக்குப் புகழ்மாலை

[தமிழகத்தின் தனிப்பெருந் தலைவரும், பகுத்தறிவுப் பகலவன்—சீர்திருத்தச் செம்மல்—புரட்சிப்புயல்—சுயமரியாதைச் சுடரொளி—வெண்தாடி வேந்தர்—வைக்கம் வீரர்—தமிழர் தலைவர் என்றெல்லாம் பலவகைகளிற் பெரிதும் அன்புடன் புகழ்ந்து போற்றப் பெற்றவரும், ஆகிய தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், தமது 95-ஆம் அகவையில் இயற்கை எய்தி, வாராச் சேட்புலம் படர்ந்த ஆராத் துயர நிகழ்ச்சியினை ஒட்டி, இப் புகழ்மாலை இங்குத் தொகுத்து வெளியீடப் பெறுகின்றது.

—ஆசிரியர்]

பெரியார் இராமசாமி முனைப்பாற்றல் மிக்கவராக வாழ்நாள் முழுதும் ஒரு போராட்ட வீரராகத் திகழ்ந்தவர். 1920-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் சுதந்தரத்துக்காக நடைபெற்ற தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டார். பிற்காலத்தில் அவர் தம் கருத்துக்கேற்பச் சமுதாய சீர்திருத்தங்களில் ஈடுபட்டார். அவரது மறைவுச் செய்தி அறிந்து நான் துயரமடைந்துள்ளேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை அவரது உற்றார் உறவினருக்குத் தெரிவியுங்கள்.

—குடியரசுத் தலைவர் வி. வி. கிரி

பெரியாரது மறைவு பற்றி அறிந்து துயருற்றேன். சர்ச்சைக்குரியனவற்றில் ஈடுபாடு கொண்டு அதில் களிப்பெய்திய முனைப்பாற்றல் மிக்க மனிதர் அவர். ஏற்றுக்கொள்ளப்பட்ட பல கருத்துக்களை எதிர்த்து அறைகூவி நின்றவர் அவர். அவருடன் சேர்ந்து பணியாற்றிய அவர் இயக்க ஊழியர்களுக்கும், அவரைப் பின்பற்றியவர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன்.

—பிரதமர் இந்திரா

சமூக சீர்திருத்தத்தில் தீவிர ஆர்வம் காட்டிய திரு. ஈ. வே. ராமசாமி அவர்களது திடீர் மறைவு கேட்டு நான் பெரிதும் வருந்துகிறேன்.

—தமிழக ஆளுநர் கே. கே. ஷா.

தந்தை பெரியார் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். 95 ஆண்டுகள் வரை வாழ்ந்த அந்தப் பகுத்தறிவுச் சிங்கம் கடைசி மூச்சு வரையில் சமுதாயப் பணியை நடத்திய சரித்திரத்தை யாரும் மறுக்க முடியாது. இன்று தமிழ்நாடு தன்மான உணர்வோடு தலைதூக்கி நிற்பதற்குக் காரணமாக இருந்த மாபெரும் தலைவர். அவரால் சமுதாய அந்தஸ்து பெற்ற லட்சோபலட்சம் பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது. எங்களையெல்லாம் ஆளாக்கிய எங்கள் வழிகாட்டி. இந்தப் பிரிவு பற்றி என்ன சொல்வதென்றே புரியாமல் திண்டாடுகின்றேன். இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்தப் புரட்சிக்காரரை இழந்து விட்டோம். அவர் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்.

—முதல்வர் டாக்டர் கலைஞர்

யாருக்கும் அஞ்சாமல்-எதற்கும் அஞ்சாமல் தமிழகம் எங்கணும் வீர நடைபோட்டு வந்த பகுத்தறிவுச் சிங்கம் இன்று சாய்ந்து விட்டது என்ற செய்தி பெரும் அதிர்ச்சியையும் பெரும் துக்கத்தையும் அளிக்கின்றது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் நாட்டு விடுதலைப் போராட்டத்திலும், சமூக சீர்திருத்தக் கிளர்ச்சிகளிலும், மொழியுரிமைப் போராட்டத்திலும் பங்குகொண்டு புரிந்த சாதனைகள் பலவாகும். பொதுத் தொண்டு புரிபவர்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக அவர் திகழ்ந்து வந்தார். பொதுவாகத் தமிழ்ப் பெருங்

குடி மக்களுக்கும், குறிப்பாகத் தமிழக அரசுக்கும், அவர் பெருந்துணையாக இருந்து அருந்தொண்டு ஆற்றிவந்தார். அவரது இழப்பு தி.மு. கழகத்திற்கும், தி.மு. கழக ஆட்சிக்கும் பேரிழப்பாகும். அவர் பரப்பி வந்த பகுத்தறிவு நெறியை அறிவியலின் துணைகொண்டு தொடர்ந்து பரப்புவதில் ஈடுபடுவது தான் நாம் அவருக்குக் காட்டக்கூடிய நன்றிக் கடனாகும். வளம் மிகுந்த தமிழ்நாட்டை வளரவொட்டாமல் தடுத்து வருகிற மூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும்-அவர் கூறிய அறிவுரைகளின் வழி நின்று ஒழித்து-சிறந்த தமிழகத்தைக் காண நாம் அனைவரும் ஈடுபடுவோமாக! வாழ்க தந்தை பெரியார் புகழ்! வெல்க அவரது பகுத்தறிவு நெறி!

—டாக்டர் நாவலர்

நமது நாட்டில் லட்சோபலட்சம் பேரால் இராமசாமிப் பெரியார் என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. ஈ. வே. ரா. அவர்கள் மறைந்துவிட்டார்கள். அவரது மறைவு பொது வாழ்வுக்கு மகத்தான நஷ்டமாகும். தான் இதய பூர்வமாக நம்பிய லட்சியங்களுக்காக அவர் அரை நூற்றாண்டுக்கு மேல் அர்ப்பண உணர்வுடன் பாடுபட்டார். நமது நாட்டில்-மெத்தக் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சமூக எழுச்சிக்காக இராமசாமிப்பெரியார் பெரும் பாடு பட்டிருக்கிறார். அவர் மகத்தான தேசபக்தர். ஆரம்பத்தில் அவர் இந்திய தேசியக் காங்கிரசின் தீவிர உறுப்பினராக இருந்தார், காந்தியடிகள் துவக்கிய பல இயக்கங்களில் அவர் பங்கு கொண்டிருக்கிறார். பல நேரங்களில் அவர் அதற்காகச் சிறைப்பட்டிருக்கிறார். பின்னர் தீவிர சமூகச் சீர்திருத்தத்தைப் பிரச்சாரம் செய்யும் பணியைத் தானே மேற்கொண்டார். அவரது பணிகளெல்லாம் இப்போது சரித்திரத்தின் அத்தியாயங்களாக ஆகிவிட்டன. பெரியார் அவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய தொண்டு, நம்மால் நெடுங்காலம் நினைவுகூரப்படும். கடைசிவரை அவர் ஓயாது உழைத்தார். அவரது குடும்பத்தார்க்கு எனது மரியாதை மிகு இரங்கல் உரித்தாகுக.

—காமராசர்

பெரியார் அவர்கள் உலகில் தோன்றிய சமுதாய சீர்திருத்தப் புரட்சியாளர்களில் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார். அவர் தனக்கெனப் புதிய புரட்சிகரமான சரித்திரம் படைத்து உலக சரித்திர நாயகர்கள் வரிசையிலேயே சிறப்பிடம் பெற்றுவிட்டார். உயிர்விடும் வரை தம் குறிக்கோள்களிலே அவர் காட்டிய உறுதியும், எதிர்ப்புகளுக்கு ஈடுகொடுத்த தீவிரமும் இன்னொருவரை இணை சொல்லமுடியாது. தமிழ்நாட்டு அரசியலில் அவரோடு ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது. இராஜாஜி மறைந்து சரியாக ஒரே ஆண்டில் அவருடைய அருமை நண்பர் பெரியார் அவர்களும் மறைந்தது தமிழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழபபாகும். எனக்குள்ள தெய்வப்பற்று, சமயப்பறறு காரணமாகப் பெரியாரோடு சேர்ந்து பணியாற்றும் பேற்றினைப்பெற இயலவில்லை. ஆயினும் அவருடைய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றில் எனக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் உடன்பாடு உண்டு. தங்கள் வழிகாட்டியை இழந்து தவிக்கும் தி. மு. க.—தி.க. தலைவர்களுக்கும் இலட்சக்கணக்கான ஊழியர்களுக்கும் எனது அனுதாபங்கள்! மறைந்த பெரியாருக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—'சிலம்புச் செல்வர்' ம. பொ. சிவஞானம்

தமிழகத்தின் காவலர், புரட்சிகரமான சிந்தனையாளர், தலைவர் பெரியார் அவர்கள் மறைந்தது இன்றைய தமிழகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும். வாழ்நாளில் பெரும் பகுதியைத் தலைவர் பெரியாரைப்போல் பொதுப் பணியில் ஈடுபடுத்தியவர்கள் அருமையிலும் அருமை. தமிழகத்தில் கடந்த அரை நூற்றாண்டுக்குரிய வரலாற்றில் அவரது முத்திரைபதியாத துறையே இல்லை எனலாம். கள்ளமில்லாத கருத்துப் பிடிப்பு - கடுமையான உழைப்பு ஆகியவை அவரது உடைமைகள். தமிழர் என்ற இன உணர்வை முன்னிலைப்படுத்த அயராது உழைத்த பெரியார், பழக்கத்திற்கு இனிய பண்பாளர். கடுமையான கருத்து வேற்றுமை உடையவர்கள் எதிர்த்தும்கூட, அவர் காட்டிய கண்ணியம் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்போர்க்கு எடுத்துக்காட்டாகும். அவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். ஆயிரம் கருத்து வேற்றுமை இருப்பினும், அவர் மனித குலத்தின் மீது தன்னிகரற்ற அன்புடையவர் என்பதை யாராலும் மறுக்க முடியாது. சாதி மத வேறுபாடற்ற சமுதாய அமைப்பு தமிழகத்

தின் முன்னேற்றம் ஆகியவை அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் பணிகள். அவற்றைச் செய்து நிறைவேற்றுவது தலைவர் பெரியாருக்கு நாம் செய்யும் கடமையாகும்.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இசைகுடி மானம் கெட்டே
இயற்றமிழ் நாட்டின் மக்கள்
வசைபட வாழ்ந்த காலை
வான்விடி வெள்ளி யன்ன
இசைபெறும் குலத்தில் தோன்றி
எழுப்பிய தலைவர் ! நாட்டோர்,
அசைவுறத் திசைகள் தோறும்
அறிவொளி வளர்த்த வேந்தர் ! (1)

கண்ணெலாம் சமுதா யத்தைக்
காணவே படைத்த தென்றும்,
மண்ணெலாம் விளங்கு தற்கே
மனமெனல் பிறந்த தென்றும்,
எண்ணெலாம் தெளிவு தோன்ற
இசைத்ததோர் ஞானி ! நாட்டில்
கண்ணிலார் கதியி லார்க்குக்
காவலாய் விளைந்த வேலி ! (2)

தாழ்ந்துவீழ்ந் திருந்த கூட்டம்
தனையுணர்ந் தெழுவ தற்கும்,
பாழ்படக் கிடந்த நாடு
பகுத்தறி வடைவ தற்கும்,
ஆழ்ந்ததோர் எண்ணம் தந்த
ஆண்டகை ! பன்னா ருண்டு
வாழ்விலா திருந்தார் தம்மை
வாழ்விக்க வந்த வள்ளல் ! (3)

—கவிஞர் கண்ணதாசன்.

இந்தியநல் விடுதலைக்கா
இனிதுமிகப் பாடுபட்டார் !
அந்தமில்சீர் உயர்காந்தி
அடிகளுமே போற்றநின்றார் !
முந்தமிகத் தீண்டாமை
ஒழிப்பதற்கு முனைந்துழைத்தார் !
செந்தமிழ்நாட் டரசியலில்
சிறந்தொளிர்ந்தார் நற்பெரியார் ! (1)

தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டோர்
தம்மை உயர்த்தப் பாடுபட்டார் !
பாழ்த்த பலவாம் கொடுமூடப்
பழக்க வழக்கம் தமைஎதிர்த்து,
வீழ்த்த மிகப்போ ராடிவந்தார் !
வீரர் தீரர் எனத்திகழ்ந்தார் !
சூழ்த்த பலவாம் சமுதாயத்
துரிசு களையும் துடைத்தொழித்தார் ! (2)

‘இந்தி மொழிதான் தமிழ்நாட்டில்
எவ்வா றேனும் புகுந்திடுமேல்,
நந்தம் தமிழர் வாழ்வனைத்தும்
நலிந்து மெலிந்து தேயும்’என
முந்த எதிர்த்துப் போரிட்ட
முதன்மை சான்ற பெருவீரர் !
தந்தை பெரியார் ஈவேரா
சால்பின் மாட்சிக் கிணையுண்டோ ? (3)

உலகினிற்பல் வேறிடத்தும்
உதித்துநின்ற உயர்சமயத்
தலைவரெலாம், சீர்திருத்தச்
சான்றாண்மை நெறிகளையே
நலமமையப் பரப்பிச்சென்றார் !
சீர்திருத்த நல்லார், நம்
தலைவர்பெரி யார்தாமும்,
அனையபெருஞ் சான்றோரே ! (4)

நோக்கியலும் சமுதாயத்
துறையில்எலாம் நுழைந்துமிக,
யார்க்கியலும் எனவியப்ப,
அளவில்பணி ஆற்றிநன்றே,
சாக்கியநா யனார்போலச்
சமயநெறி போற்றிநின்ற
மாக்கிழவர் நம்பெரியார்
ஈவேரா மாட்சிஎன்னே ! (5)

‘செயற்கரிய செய்பவர்தாம்
பெரியர்’ எனத் திருக்குறள்தான்
நயத்தகுமா றுரைத்தருளும்
நன்மொழிக்கோர் இலக்கியமாய்த்
தலத்திலகும் சாதிமதச்
சழக்குகளைச் சாடிமிக,
வியத்தகுமாப் பணிபுரிந்தார் !
வியன்பெரியார் ஈவேரா ! (6)

‘நயனுடனே நலஞ்சிறந்த
நன்றிமிகப் புரிந்தருளும்
பயனுடையார் பண்புயர்த்துப்
பாராட்டும் உலகம்’ எனும்
மயலறுசீர்த் திருக்குறள்தன்
வாய்மொழிக்கோர் சான்றாக,
இயல்பினில்நம் இணையில்தந்தை
பெரியார்தாம் இலங்குகின்றார் ! (7)

நல்லபெரும் பகுத்தறிவு
ஞாயிறன்னார்! நலந்திகழும்
மல்லல்வளப் புரட்சிநெறி
மாவீரர் ! சீர்திருத்தச்
செல்வர்என இணையற்றுத்
திகழ்ந்தொளிர்ந்தோர் ! உலகுவக்கும்
எல்லையிலாச் சீர்ப்பெரியார்
ஈவேரா வாழ்க ! வெல்க ! (8)

—ந. ரா. முருகவேள்

"நிறைந்துயர்சீர்த் திரு. வி. க."

எல்லார்க்கும் பொதுமையராய், இலங்குதிரு வள்ளுவர்போல்,
சொல்லார்க்கும் தமிழ்ப்பெரியார் கலியாண சுந்தரனார்,
பல்லார்க்கும் உரியர்எனப், பலகட்சி களும்போற்ற
நல்லார்க்குள் நல்லாராய் வாழ்ந்திருந்தார் ! நவில்தல்என்னே ! (1)

நிறைபெருஞ்சீர்ப் புலமைநலம் நிகரின்றிப் பெற்றுயர்ந்து,
செறிவுமிகத் தமிழ்வானில் சிறந்ததொரு திங்கள்எனக்
கறையில்புகழ்க் கலியாண சுந்தரனார், பல்வேறு
துறைகளினில், மன்பதைநற் றொண்டுகள்தாம் செய்தொளிர்ந்தார் ! (2)

மாற்றாரும் மதித்துவக்கும் மாட்சிமிகு பெருந்தகையார் !
காற்றோடு பெருமழையும் கலந்ததுபோல் விரிவுரைகள்
ஆற்றவல்ல அரியபெரு நாவலவர் ! அளவின்றிந்
நூற்றாண்டில் தமிழ்க்கிவர்தாம் விளைத்தநலம் நுவலரிதால் ! (3)

எழுத்தினிலும் பேச்சினிலும் இனியதொரு புதியநடை,
அழுத்தம்மிக, அழகுமிக, ஆற்றல்மிக, அருமைமிகப்
பழுத்துயர்தம் பெரும்புலமைப் பயனாகப் படைத்தளித்துச்
செழித்துயரத் தமிழ்நாட்டைச் செய்வித்தார் திரு. வி. க. (4)

தொழிலாளர் பெருந்தலைவர், தூய்மைமிகு காந்திய
வழியாளர், சமரசசன் மார்க்கநெறித் திருத்தொண்டர் !
எழிலாளும் பேச்சாளர், எழுத்தாளர், இதழாளர்,
முழுதாகத் தம்வாழ்வை மன்பதைக்கே முற்றுவித்தார் ! (5)

'தென்னாடே திரு. வி. க. திரு. வி. க. வேதென்னாடு'
என்னும்உண்மை, மற்றுஅவர்தாம் இனிமைமிக வரைந்தளித்த
பொன்னனதம் வரலாற்றுப் புத்தகத்தாற் புலனாகும் ;
நன்மைமிகும் அதன்சிறப்பும் நலம்பலவும் அளப்பரிதால் ! (6)

துணிவுடைய சீர்திருத்தப் புரட்சிநெறிப் பெருந்தலைவர்
இணையில்தந்தை நற்பெரியார் ஈ. வே. ரா. அவர்கள்தாம்,
நணுகிமிக மிகப்பழகி நனிசிறந்த நண்பர், உயிர்த்
துணைவர்எனக் கொண்ட திரு. வி.க.சீர் சொலற்கெளிதோ ? (7)

---

* திருவாரூரில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், 2-12-73 அன்று நிகழ்த்தி வைத்த திரு. வி. க. சிலை திறப்புச் சிறப்புவிழா மலருக்காக எழுதப்பெற்ற கவிதை.

—ஆசிரியர்

தேசிய கவிஞர்உயர் பாரதியார், சிதம்பரனர்,
மாசில் அன்னை வசந்தையார், வ. வே. சு. ஐயர், மற்றும்
ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை, அருட் குமாரகுரு
தாசர்முதற் சான்றோர்கள் தகப்புகழ்வோர் திரு. வி. க. (8)

எனைப்பலவாம் சூழல்களில் எத்துணையோ மக்களொடு
நினைப்பதற்கும் அரியவகை நெருங்கிமிகப் பழகிநின்றும்,
முனைத்துமிக இறையுணர்வு முதிர்ந்தொளிரத் தம்வாழ்க்கை
அனைத்தினுமே கடைப்பிடித்த அருமையினர் திரு. வி. க. (9)

பொய்யில்திரு வள்ளுவர்தாம் பல்சமயப் பொதுமையராம்
மெய்எனினும், சிவநெறிக்கே மிகவுரியர் எனலும்ஒல்லும்;
துய்யதமிழ்த் திருவாளர் கலியாண சுந்தரனர்
வையமிசை வாழ்ந்தநலம், மற்றிதனை நன்குணர்த்தும். (10)

தென்றமிழ்நாட் டுக்காந்தி, சிறந்தஇரா யப்பேட்டை
மன்பெருமா மறைமுனிவர், மணவழகர், தமிழ்த்தென்றல்,
நன்றெளிய சாதுநல்லார், 'நவசக்தி' ஆசிரியர்
என்றெல்லாம் இலங்கிநின்ருர், இனியநல்ல திரு. வி. க. (11)

அறவாழி அந்தணனே ! ஆயிரம்பல் பாயிரமாம்
திறவியநல் மேடைகண்ட செய்யதமிழ் நாவலனே !
துறவினை வாழ்ந்திருந்த தோன்ருல் ! நின் தூய்மைமிகு
நிறைபெருஞ்சீர் நலங்களெலாம் நினைந்துணர்ந்து நிகழ்த்தலெங்ஙன் ? (12)

அரியதிருக் குறள்விளக்கம், முருகன் அல்லது அழகெனும் நூல்,
பெரியபுரா ணப்பதிப்பு, பெண்பெருமை, இளமைவிருந்து,
உரியபுகழ்த் தமிழ்த்தென்றல், தமிழ்ச்சோலை, உள்ளொளியும்,
வருமனித வாழ்க்கையும் போல் நூல், வரைவோர் இனி எவரோ ? (13)

அரைசியலே இந்நாளில் ஆற்றல்மிகவளர்ந்துவரும்
விரைசுமிக என்ருலும், மிகஅதன்கண் அறிவாற்றல்,
பரசும்உயர் அநுபவம்,நற் பண்பாடு,என் றிவற்றில் எலாம்
உரைசெயின் நம் திரு. வி. க. ஒப்ப,இனி உளர்யாரோ ? (14)

ஏதிலர்க்கும் நலம்புரியும் இரக்கம் மிக்கார் ! யாவர்க்கும்
ஊதியமாம் பெருந்தகையார் ! ஒப்புரவிற்கு ஒல்காதார் !
தீதில்புகழ்த் திரு வி. க. சிறந்துயர்ந்த பண்பனைத்தும்
ஓதுதற்கிங் கெளிதேயோ ! உயர்ந்த அவர் புகழ் வாழ்க ! (15)

அறங்கரையும் நாவினராம் அந்தண்மைப் பெருஞ்சான்ருேர் !
சிறந்துயர்ந்த பேரறிஞர் ! சிவநெறிநற் றிருவாளர் !
மறந்தெனினும் தமக்கெனத்தாம் வாழாத பிறர்க்குரியார் !
நிறைந்துயர்சீர்த் திரு. வி. க. நிகராவார் இனிஎவரோ ? (16)

—ந. ரா. முருகவேள்

இறையருள் பெறும்நெறி

திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., ph. D.,
தமிழ்ப் பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

இவ்வுலகில் வாழும் மக்கள் கருத்தாலும் செயலாலும் பல திறப்பட்டவர்களாய் இருத்தலைக் காணலாம். சிலர் பொருள் திரட்டுவதனையே குறிக்கோளாகக் கொண்டிருப்பர். சிலர் இவ்வுலக இன்பத்திலேயே ஆழங்கால் பட்டிருப்பார், சிலர் கல்வி அறிவைப் பெருக்குவதிலேயே நாட்டம் கொண்டிருப்பர். ஆனால், ஒரு சிலருக்கு இறைவன் அருளால் நிலையில்லாததும், அடிக்கடி மாறும் தன்மையுடையதும், துன்பம் நிறைந்ததுமான இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பும், நிலையுள்ளதும் இன்பம் நிறைந்ததுமான வீடு பேற்றில்—மோட்சத்தில் விருப்பும் உண்டாகின்றன. இங்ஙனம் இறையருட் பேறு ஆகிய வீடு பேற்றின்பத்தினை அவாவி நிற்பவர்களைச் சமய நூலார் 'முமுட்சுக்கள்' என்று குறிப்பிடுவர். துன்பம் கலவாத இன்பம் எதுவோ அதுவே வீடுபேறு அல்லது 'முத்தி நிலை' என்று வழங்கப் பெறும்.

முத்தி என்பது, உரவு நீராகிய கடலில் தோன்றும் ஒரு பெரும் முத்துப்போன்ற சிறப்பினையுடையதென்னும் பொருளில் 'முத்தி' என வந்தது. முத்து நீருள் தோன்றுவது போன்று, முத்தியும் திருவருளாகிய நீருள் தோன்றுவது. முத்து குளிர்ந்து இன்பம் தருவதுபோல் முத்தியும் அருள் இன்பம் பயப்பதாகும். இந்த இன்பம் 'ஆன்மாநுபவம்' 'ஈசுவரானுபவம்' ஆகிய இரண்டிலும் உண்டாகின்றது. இந்த இரண்டனுள் ஆன்மாநுபவத்தில் நாட்டம் உள்ளவர்களைக் 'கைவல்யார்த்திகள்' என்றும், ஈசுவரானுபவத்தில் இச்சையுள்ளவர்களைப் 'பகவத் பிராப்தி காமர்கள்' என்றும், மெய்யறிவு நூல்கள் குறிப்பிடும். இவ்விரு திறத்தினரும் முமுட்சுக்கள் என்றே வழங்கப் பெறுவர். ஈண்டு நாம் கூறப்போவது ஈசுவரானுபவத்தில் இச்சையுள்ள முமுட்சுக்களைப் பற்றியேயாகும்.

இறைவனைக் கிட்டப்பெற்று அவனுக்குப் பல்வேறு அநுபவக் கைங்கரியங்களைச் செய்து, அவனது முகமலர்ச்சியைக் கண்டு மகிழவேண்டும் என்னும் இச்சையால், சமுசாரத்தில் (இவ்வுலக வாழ்வில்) வெறுப்புக் கொண்டவர்களே இவர்கள். இவர்கட்கு ஆன்ம சொரூபம் இன்னது என்றும், அவ்வான்மா உய்வதற்கு வழி (உபாயம்) இன்னது என்றும் தெரிந்திருத்தல் வேண்டும். இந்த முமுட்சுக்கள் முத்தி நிலையை எய்துவதற்குரிய நெறிகளை கண்டு விளக்குவோம்.

வைணவ சமயத்தில் சித்தோபாயம், சாத்தியோபயம் என்ற இரு நெறிகள் பேசப் பெறுகின்றன, சித்தோபாயம் என்பது நம்மால் செய்யப்பெற வேண்டியதாயுன்றி முன்பேயுள்ள நெறி; சர்வேசுவரன். இதனை வேதாந்த தேசிகர்,

> "மன்னும் அனைத்துற வாய்மருள்
> மாற்றருள் ஆழியுமாய்த்
> தன்னினை வால்அனைத் துந்தரித்(து)
> ஓங்கும் தனிஇறையாய்
> இன்னமு தத்தமு தாய்இரங்
> குந்திரு நாரணனே
> மன்னிய வன்சரண் மற்றோர்பற்
> றின்றி வரிப்பவர்க்கே"

என்று குறிப்பிடுவர். சாத்யோபாயம் என்பது நம்மால் செய்யப்பெறும் உபாயம். இது 'பக்தி' என்றும் 'பிரபத்தி' என்றும் சாத்திரங்களில் இருவகையாகப் பேசப்பெறும். சேதநன் இந்த இருநெறிகளுள் ஒன்றை அனுட்டித்த பின்பே, சர்வேசுவரன் அவனை ஏற்றுக் கொண்டு பலன் தருகின்றான் என்று உபநிடதமும் கூறுகின்றது. வினையிலே கிடந்துழலும் சேதநனைப் பகவான் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம், அவன் மேற்கொள்ளும் நெறியேயாகும். பக்தி, பிரபத்தி ஆகிய

இரண்டு நெறிகளில் ஒன்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சேதநனின் முக்தி நெறியாகும்.

பத்தி நெறி:

பேரன்பின் முதிர்ச்சியே பத்தி எனப்படும். இப் பத்தியினை மேற்கொண்டார் பத்தரெனப்படுவர். பத்தரெனினும் பித்தரெனினும் ஒன்றேயாகும். உலகில் நோயால் கொள்ளும் பித்தும், மருளால் கொள்ளும் பித்தும் துன்பம் தருவன. அருளால் கொள்ளும் பித்து அளவிலா இன்பம் தருவது. "பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்னும் சுந்தரமூர்த்தி அடிகளின் திருவாக்காலும், பக்தர்களின் மேம்பாட்டினை உணரலாகும். குலசேகரப் பெருமாளும், "பேதைமா மணவாளன்தன் பித்தனே", "எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே", "பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" என்று அவர் தம் வாக்கால் தன்னைப் பித்தன் என்றும், பேயன் என்றும் கூறிக் கொள்வதனால், இதனை மேலும் தெளிவு பெறலாம். இந்தப் பக்தி நிலையை மெய்ப்பொருளியலார் 'பக்தியோகம்' என்று பண்படுத்தி, அதனை எட்டு அங்கங்களாக முறைப்படுத்தி வகுத்துக் காட்டுவர். இதனை,

"எமநியம ஆசனங்கள்
இயல்ஆவி புலனடக்கம்
தமதறியுந் தாரணைகள்
தாரையரு நினைவொழுக்கம்
சமமுடைய சமாதிநலம்
சாதிப்பார்க்(கு) இலக்குஆகும்
அமரர்தொழும் அத்திகிரி
அம்புயத்தாள் ஆரமுதே".

இந்த எட்டு அங்கங்களையுடைய பக்திநெறி வழியொழுகுவார்க்குப் பிராட்டிக்கு ஆரா அமுதமாக இருக்கும் எம்பெருமான் குறிப்பொருளாகி வீடுபேற்றை அளிப்பான்.

இந்தப் பக்திநெறி ஆழ்வார் பாடல்களில் ஆங்காங்குக் குறிப்பிடப்பெற்றுள்ளது. நாலாயிரத்தை ஓதுவார் இதனை நன்கு அறிவர்.

"அறிந்துஐந்தும் உள்அடக்கி
ஆய்மலர்கொண்(டு) ஆர்வம்
செறிந்த மனத்தினராய்
செவ்வே அறிந்துஅவன்தன்
பேர்ஓதி ஏத்தும்
பெருந்தவத்தோர் காண்பரே
கார்ஓத வண்ணன் கழல்"

என்ற பூதத்தாழ்வாரின் பாசுரத்தில் இதனைக் காணலாம். விஷ்ணுவை என்றும் தன் சித்தத்துள் வைத்துள்ள விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வாரின்,

"மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூஇட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே"

என்ற பாசுரப் பகுதியில் பக்தியின் நிலையைக் காண்க.

"பூசும் சாந்தும் என்நெஞ்சமே;
புனையும் கண்ணி எனதுடைய
வாசகம்செய் மாலையே;
வான்பட் டாடையும் அஃதே;
தேசம் ஆன அணிகலனும்
என்கை கூப்புச் செய்கையே"

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் அவருடைய பத்திநிலையைக் கண்டு அநுபவிக்கலாம்.

மெய்யறிவினர் இப்பத்திநெறி கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற மூன்று நிலைகளில் பயிற்சியடைய வேண்டிய நெறி என்றும் கூறுவர். சாத்திரங்களைப் பயின்ற அறிவினால் சில சடங்குகளையும் கடமைகளையும் தவறாது செய்தல் வேண்டும். இறைவனை ஏத்தல், திவ்விய தேசயாத்திரை மேற்கொள்ளல், அறம் புரிதல் போன்றவை யாவும் கர்மயோகத்தில் அடங்கும். இக்கர்ம யோகத்தினால் தன்னை மறத்தல், மனத்தைக் கட்டுப்படுத்தல், ஆன்மாநுபவம் பெறல் போன்ற நிலைகள் ஏற்பட்டு, உலகவாழ்வில் மயங்கி ஆழ்ந்திருக்கும், ஆன்மா தூய்மையுறுகின்றது. அடுத்தநிலை, ஞானயோகம் என்பது. கர்மயோகத்தில் தூய்மையடைந்த ஆன்மா, இந்நிலையில் தியானத்தில் ஆழங்கால்படுகின்றது. இயமம், நியமம் போன்ற செயல்களால் ஆன்மா அமைதி நிலையை நாடுகின்றது. அலைந்து திரியும் மனத்தை அங்ஙனம் அலையவிடாமல் நிலை நிறுத்தும் நிலை ஏற்படுகின்றது. அஃதாவது, மெய்யறிவினர் குறிப்பிடும் கைவல்யநிலை உண்டாகின்றது. ஞானயோகத்தினால் தன் ஆன்மா இன்னது என்று தனக்குப் புலனாவதுபோல, எல்லாச் சீவர்களிடமும் ஆன்மா என்று ஒன்று இருப்பது தட்டுப்படுகின்றது. இதற்கு அடுத்த

உயர்நிலையில் எல்லா உயிர்களிலேயும் ஊடுருவி நிற்கும் பரமான்மாவின் சாயல், திடீரென்று தோன்றி மறையும் நிலை, தோன்றுகின்றது. இதற்கு அடுத்த நிலையே பக்தியோகம் என்பது. இந்த நிலையில் முமுட்சுக்கள் முனைப்பை அகற்றி, இறைவனுடைய சங்கற்பத்துக்கு அடி பணிந்து, இறைவனுடன் நிரந்தரத் தொடர்பு கொள்வதற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்கின்றனர். தமக்கும் இறைவனுக்கும் அறுபடாத தைலதாரை போன்ற தொடர்பு ஏற்படுகின்றது. வானநூல் அறிஞர் பூமியின் சிறுமையையும் அதனைக் கவர்ந்து நிற்கும் கதிரவனின் பெருமையையும் உணர்வதுபோல், பக்தர்களும் உலகியல் வாழ்விற் சுழலும் ஆன்மாவின் சிறுமையையும், எல்லாவுயிர்களையும் புரக்கும் இறைவனின் பேராற்றலையும் உணர்கின்றனர். இந்நிலையில் சீவான்மா பரமான்மாவுடன் கலக்கின்றது. கடலில் கிடக்கும் கடற்பஞ்சு போன்ற நிலையினை அடைகின்றது. இந்நிலையையும் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்று வேறுபடுத்திக் காட்டும் மரபு உண்டு. இந்நிலைகளையெல்லாம் ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங்காங்குக் காணலாம். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார் பெருமக்கள், இந்த மூன்று நிலைகட்கும் எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றனர்.

பிரபத்திநெறி:

மேற்கூறிய பக்தி நெறியை அநுட்டிப்பது எல்லோராலும் முடியாது. ஆகவே உயர்ந்தோர் தாழ்ந்தோர் கற்றவர் கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி எல்லோராலும் மேற்கொள்ளக் கூடிய நெறியொன்றினைக் கண்டனர் மெய்யறிவு பெற்ற மேலோர். அதுவே பிரபத்தி நெறியாகும். இதனை வேதாந்த தேசிகர்,

“ அந்தணர் அந்தியர் எல்லையில்
நின்ற அனைத்துலகும்
நொந்தவ ரேமுத லாக
நுடங்கி அனன்னியராய்
வந்தடை யும்வகை ”

என்று சிறப்பித்துப் பேசுவர். இந்நெறி ‘சரணுகதி நெறி’ என்ற பெயராலும் வழங்கப்பெறும். எல்லோருக்கும் எளிதாகக் கடைப் பிடிக்க வல்ல இந்நெறியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றுர் அந்த ஆசாரியர்.

“ எல்லார்க்கும் எளிதான ஏற்றத் தாலும்
இனி உரைக்கைமிகையான இரக்கத்தாலும்
சொல்லார்க்கும் அளவாலும் அமைத லாலும்
துணிவரிதாய்த் துணைதுறக்குஞ்
சுகரத்தாலும்
கல்லார்க்குங் கற்ருர்சொல் கவர்த லானும்
கண்ணன்உரை முடிசூடி முடித்த லானும்
நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்ரும்
நாரணற்கே அடைக்கலமாய் நணுகு
வீரே ”

என்ற பாசுரத்தில் அவருடைய பரிந்துரையைக் காணலாம். ‘துணிவரிதாய்த் துணைதுறக்கும் சுகரம்’ என்பது மகாவிசுவாசம் என்னும் பிரபத்தியின் அங்கம் கடினமாயினும், அதிலும் கடினமான கர்மயோகம் ஞானயோகம் முதலிய அங்கங்களை விட்டு விடுகையாகிய சௌகர்யத்தைக் குறிக்கின்றது. மனநிலை மாறி எம்பெருமானின் கருணையின் மீது பெரு நம்பிக்கை கொள்வதே இந்நெறியைக் கடைப்பிடிப்போரிடம் வேண்டப் பெறுவது. ஆழ்வார் பெருமக்களின் இறையநுபவம் பிரபந்நர்களின் தலைவரான நம்மாழ்வார் கண்ட சரணுகதித் தத்துவத்தில் அடங்குகின்றது. பகவத்கீதை குறிப்பிடும் தத்துவமும் இதுவேயாகும். மணிவாசகப் பெருமானும் இத் தத்துவத்தைக் குறிப்பிடுகின்றுர். இது அடிகள்ரின் அநுபவமாக வெளிப்படுகிறது.

இந்தப் பிரபத்தி நெறியிலும், ஐந்து அங்கங்கள் இருப்பதைக் காட்டுவர் ஆசாரியப் பெருமக்கள். அவை. 1. ஆநுகூல்ய சங்கற்பம் என்பது, எம்பெருமானின் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்வதாய் உறுதி கொள்ளலாகும். 2. பிராதி கூல்ய வர்ஜநம் என்பது, அவன் திருவுள்ளத்திற்குப் பொருந்தாதவற்றைச் செய்யாதிருக்க உறுதி கொள்ளல், அல்லது அவற்றைச் செய்யாது விடுதல். 3. மகா விசுவாசம் என்பது, அவன் நம்மைக் காக்க வல்லவன் என்று தேறி, தவருது காப்பான் என்று உறுதியாக நம்புதலாகும். 4. கோப்த்ருத்வ வரணம் என்பது, பக்தி யோகம் முதலிய உபாயங்களை அநுட்டிக்க ஆற்றலற்ற தம்மிடம் அருள்புரிந்து அவ்வுபாயங்களின் இடத்தில் நின்று பலம் தருமாறு அவனை வேண்டுகையாகும் ; 5. கார்ப்பண்யம் என்பது, பக்தியோகம் முதலிய உபாயங்களில் தமக்கு அதிகாரமில்லாமையையும், எம்பெருமா

னைத் தவிர வேறு தெய்வத்தினிடமோ, வீடு பேற்றினைத் தவிர வேறு பலனில் பற்றிலாமை யையும் கருதுதல் அல்லது இக்கருத்தால் முன் தம்மிடருந்து முனைப்பு ஒழியப்பெறுதல், அல்லது எம்பெருமான் கருணை தம்மீது வளர்ந்தோங்கும்படி தாழ்ந்து நின்று அஞ்சலி முதலியவற்றைச் செய்தல் ஆகும்.

ஆழ்வார்களால் தெளிந்து அறியப்பெறுவது, இந்தப் பிரபத்தி நெறியேயாகும். பொய்கை யாழ்வார் பாசுரம் ஒன்றில் இந்நெறி குறிப்பிடப் பெறுகின்றது.

"அடைந்த அருவினையோடு
அல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய
வேண்டில்-நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான்
முரணழிய முன்னொருநாள்
தன்னிலங்கை வைத்தான் சரண்"

வினை, நோய், பாவம் ஆகியவை வாசனையோடு நீங்க வேண்டுமாயின், சக்கரவர்த்தித் திரு மகனைச் சரணம் புகுதலே வழியாகும் என்ற குறிப்பினை இப்பாசுரத்தில் காணலாம்.

"வீடாக்கும் பெற்றி
யறியாது மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு
கொண்டுழல்வீர்; வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத
முதற்பொருள்தான் விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன்"

என்ற பாசுரத்தில் திருமழிசையாழ்வார் எம் பெருமானைச் சித்தோபாயமாகக் காட்டுவதைக் காணலாம். பரமபத நாதனையே சரணமடைந்து உய்ந்து போகலாம் என்று குறிப்பிடுவதையும் உணரலாம். இதோ ஆழ்வார் பிறிதோர் இடத்தில்,

"அடைக்கலம் புகுந்த என்னை
அஞ்சல் என்ன வேண்டுமே"

என்று அருளிச்செய்துள்ளதையும் உணரலாம். திருமங்கையாழ்வாரும்,

"கூறு ஐவர் வந்துகுமைக்கக்
குடிவிட் டவரைத்
தேறு துணைஅடைந் தேன்திரு
விண்ணகர் மேயவனே"

என்று திருவிண்ணகரில் சேவை சாதிக்கும் ஒப்பிலியப்பனைச் சரண் அடைந்து முறையிடு கின்றார். படைப்புக் காலத்தில் என் நன்மைக் காக நீ என்னிடத்தில் குடியேற்றின ஐம்புலன் களும் என்னை இம்சிக்கின்றன; அவற்றை நம் பாமல் உன்னிடம் சரண் புகுகின்றேன்; காத்த ருள்க என்று வேண்டுவதைப் பாசுரத்தில் காண்க. இதோ ஆழ்வார்,

"கல்தேன் பாய்ந்தொழுகும்
கமலச்சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன்
அடியேனை யாட்கொண்டருளே"

என்று திருவேங்கடமுடையானையும் சரணம் அடைதலைக் காணலாம். இவர் திருக்கண்ண புரத்து எம்பெருமானிடமும் சரணம் அடைந்த மையை, "அம்மானை அடியேன் அடைந்து உய்ந்து பிழைத்தேனே" என்ற பாசுர அடி யால் அறியலாகும்.

சரணாகதி தத்துவத்தின் தந்தை போன்றவர், பிரபந்நர்களின் தலைவராக விளங்கும் நம்மாழ் வார். அவர் தம்முடைய திருவாய்மொழியில் "நம்பெருமான் அடிமேல் சேமங்கொள்தென் குருகூர்ச் சடகோபன்" என்றும் "கழல்கள் அவையே சரணாகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்" என்றும் தம்மை அறிமுகப்படுத் திக் கொள்கின்றார். "எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று, எம்பெரு மான் தனக்குச் சரணாக அமைந்தமையையும் "உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று தான் எம்பெருமான் கழலிணைகளில் சரணாகப் புகுந்தமையையும் புலப்படுத்து கின்றார்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார் கள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித் துவம், அர்ச்சை என்னும் இறைவனுடைய ஐந்து நிலைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று கண்டவர்கள். இந்த ஐந்து நிலைகளி லும் காக்கும் இயல்பினதும் அடையத்தக்கதும் எல்லாத் திருக்குணங்களுள் நிறைந்துள்ளது மான இடம் அர்ச்சாவதாரமே என்று தெளிந்த வர்கள். இவர்கள் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னிவழுவிலா அடிமை செய்வதற் குப் பதறிப் பலகாலும் பிரபத்தி பண்ணுகின்ற அளவில், பல இடங்களிலும் திருவுருவநிலையில் தான் பிரபத்தி செய்தனர்.

இறைவனை உயிர்கள் உபாயமாகப் பற்றுமிடத்திலே இறைவன்பால் இயல்பாக உள்ள குணங்கள் வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம் ஆகியவை. இவற்றுள் வாத்சல்யம் என்பது, கன்றினிடத்தில் பசு இருக்கும் இருப்பு. சுவாமித்துவம் என்பது, உடையவனாயிருக்கும் இருப்பு. சௌசீல்யம் என்பது, உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கை. சௌலப்பியம் என்பது, எளியனாயிருக்கும் இருப்பு. இந்தத் திருக்குணங்கள் "இருட்டறையில் விளக்குப்போலே ஒளிவிடுகின்றன இங்கே" என்று பெரியோர்கள் கூறுவர். இதனால்தான் பிரபந்நர்களின் தலைவரான நம்மாழ்வார், அர்ச்சாவதாரங்களில் இன்று மிகப்பெரும் புகழுடன் திகழும் திருவேங்கட முடையானிடம் சரண் புகுந்தார்,

"அகல கில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய்! உலகம் மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"

மேற்குறிப்பிட்ட நான்கு திருக்குணங்களும் இறைவனைப் பற்றுகைக்குத் துணைசெய்த நிலையின் விளக்கத்தை இப்பாசுரத்தில் காணலாம். நிகரில் புகழாய்' என்பதனால், 'வாத்சல்யம்', என்ற திருக்குணமும், 'உலகம் மூன்றுடையாய்' என்பதனால் 'சுவாமித்துவம்' என்ற பெருங்குணமும், 'திருவேங்கடத்தானே' என்பதனால் சேதநன் தன் கண்களால் கண்டு பற்றுகைக்கு எளியனாக இருக்கும் 'சௌலப்பியம்' என்ற உயர்ந்த குணமும் விளக்கப்பெறுவதாக ஆன்றோர்கள் அருளிச் செய்துள்ளனர். இங்ஙனம் பிரபத்தி நெறியினைத் தெளிவாக எடுத்துரைத்து வற்புறுத்துவன ஆழ்வாரின் பாசுரங்கள்; அவற்றைப் படித்துப் பயன் பெற்றுய்வது நம்மனோர் கடன்.

"செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே".

—வேதாந்ததேசிகர்

மதிப்புரை

திருக்குற்றாலத் தலபுராணம்: சுமார் 270 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த மகாகவி மேலகரம் திரிகூடரசப்பக் கவிராயர் அவர்கள் இயற்றியது. தலபுராணங்களுள் தலைசிறந்த தொன்றாகிய இந்நூல், கவிதை நயமும் இலக்கியச் சிறப்பும் மிக்கது. உவமை, உருவகம் திரிபு யமகம் மடக்கு சிலேடை முரண் முதலிய பலதிற அணிநலன்கள் அமைந்தது. திருவாவடுதுறை ஆதீனம் 22 ஆவது குருமகாசந்நிதானம் திருவார் திரு. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணையின்படி, இந்நூல் அண்மையில் வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூலுக்குச் 'சித்தாந்தக் கலைச்செல்வர்' திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A.,L.T. அவர்கள், சிறந்த முறையிற் பொழிப்புரை எழுதிப் பதிப்பித்திருக்கின்றார்கள். திருத்தம் மிக்க அழகிய பதிப்பு, தமிழிலக்கிய அன்பர்களுக்கும், சமய ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

சிவஞான சித்தியார் (சுபக்கம்) மூலம்: சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்" எனப் புகழப் பெற்ற சிறப்பினையுடையது, சிவஞான சித்தியார்! அது பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பகுதிகளையுடையது. அவற்றுள் பெரிதும் அறிஞர்களாற் போற்றிப் பயிலப்படும் சுபக்கத்தின் மூலச் செய்யுட்களைச் சீர்பிரித்தும், சந்தி பி த்தும், நிறுத்தக் குறிகள் இட்டும், பொருளடைவு பாட்டு முதற்குறிப்பு முதலியன தொகுத்தளித்தும், " தமிழ்ச் சைவத் தாளாளர் " திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் திருத்தமாகப் பதிப்பித்துள்ளார்கள். செய்யுட்களை மனப்பாடம் செய்ய விரும்புபவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்க, கையடக்கமான நல்ல பதிப்பு.

கிடைக்குமிடம்; 2. சீதாராமநகர், கடலூர்—1 (607001). விலை, ரூ. 2.

—ஆசிரியர்

காமனைக் காய்ந்த கண்ணுதல்

''காமன்எரிப் பிழம்பாக நோக்கிக்
காம்பன தோளியொடும் கலந்து,
பூமரு நான்முகன் போல்வர் ஏத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே''

—சம்பந்தர்

முன்னுரை :

சிவபெருமான் 'பலபல வேடமாகும் பரன்' எனவும், 'நானாவித உருவாய் நமை ஆள்வான்' எனவும், தேவார ஆசிரியர்களால் போற்றப் பெற்றுள்ளார். அதன்படி அருட்பெருங் கடலாகிய சிவபெருமான், அவ்வப்போது மேற்கொண்டருளிய திருவுருவங்கள் பலப்பலவாகும். அத்தகைய திருவுருவங்கள் பலவற்றுள் 'காமதகனமூர்த்தம்' என்பதும் ஒன்றாகும். சிவபெருமான் செய்தருளியனவாகச் சமயதத்துவ நூல்கள் கூறும் வீரச் செயல்கள் எட்டு. அவைகளுள் காமதகனம் புரிந்த செயலும் சிறப்பானதொன்றாகும். சிவபெருமான் திருக்குறுக்கை என்னும் சிவதலத்தில் காமதகனம் செய்தருளினர் எனப் பெரியோர்கள் கூறுவர்.

வரலாறு :

சிவபெருமான் தக்கன் வேள்வி தகர்த்தருளிய பின்னர், இறைவியுடன் திருக்கயிலையில் எழுந்தருளி வீற்றிருந்தார். அப்போது இறைவி இறைவனைத் தொழுது ''யான் முன்பு தக்கனுக்கு மகளாகப் பிறந்து, தாட்சாயணி என்னும் பெயர் பெற்றிருந்தேன். தங்களை இகழ்ந்து தீங்குற்ற அக்கொடியவனின் தொடர்புடைய என் பெயரையும் உடலையும் இனி யான் விரும்புகின்றிலேன். இவைகள் நீங்குமாறு எனக்கு அருள் புரிதல் வேண்டும்'' என வேண்டிக் கொண்டாள். அதுகேட்ட சிவபெருமான், ''இமவான் என்னும் மலையரசன், உன்னை மகளாகப் பெற விரும்பித் தவம் புரிகின்றான். அவனுக்கு நீ மகளாகச் சென்று, அவனது வேண்டுகோளை நிறைவேற்றி அருள்க'' என்று பணித்தருளினர்.

அதன்படியே அம்பிகை மலையரசன் காணும்படி, ஒரு பொய்கையில் தாமரை மலரில், ஒரு சிறு மழ இளங் குளவியாகத் தோன்றியருளினாள். அழகிய அம்மழவிளம் பெண் குழந்தையைக் கண்ட மலையரசன் மகிழ்ந்து எடுத்துச் சென்று, தன் மனைவி மேனையிடம் கொடுத்து, அக்குழந்தையைப் பொன்னினும் மணியினும் போற்றி, மிகுந்த அன்புடன் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தான். அதனால் அம்பிகைக்கு மலைமகள் எனவும், பார்வதி எனவும் பெயர்கள் அமைந்தன. ஐந்து வயது நிரம்பியதும், அக்குழந்தை சிவபெருமானை மணக்க விரும்பியது. தாய் தந்தையர் ஆகிய மேனையும் இமவானும் பலவாறு தடுத்தும் கேளாமல், இமயமலையிற் கடுந் தவம் புரிய முற்பட்டது. வேறு வழியின்றி மலையரசன் தன்மகள் தவம் புரிதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்தளித்தான்.

இந்நிலையில், சிவபெருமான் அம்பிகையைப் பிரிந்து தனித்திருந்தார். அப்போது சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் முனிவர்கள் நால்வரும், இறைவனைத் திருக்கயிலையில் சென்றுகண்டனர். ''வேதங்கள் தம்முள் மாறுபட்டு வெவ்வேறு பொருள்களை உணர்த்துகின்றன. அதனால் நாங்கள் உண்மைப் பொருள் யாதென்று தெளிய முடியாமல் மயங்கிக் கலங்கி மறுகுகின்றோம். எங்கள் ஐயங்கள் தீர்ந்து, யாங்கள் மெய்யுணர்வு பெறும் வண்ணம், எங்களுக்கு ஞான உபதேசம் புரிதல் வேண்டும்'' என்று சிவபெருமானைப் பணிந்து வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமான், 'ஞானம் என்பது நூலிலும் சொல்லிலும் அடங்குவதன்று' என்று கூறித், தம் வலக்கையை மார்பின்கண் வைத்து, சுட்டுவிரலைக் கட்டைவிரலின் அடியிற் சார்த்தி ஏனைய மூன்று விரல்களை ஒருங்கே நிறுத்தி, மோன (சின்) முத்திரை காட்டி, ஒரு கணப்போது செயல் ஒன்றுமின்றி யோக பாவனையில்,

தட்சிணாமூர்த்தம் என்னும் நிலையில் வீற்றிருந்தார்.

சிவபெருமானுக்குரிய ஒருகணநேரம், ஏனைய உயிர்களுக்கெல்லாம் எத்தனையோ பல ஊழிகளாக நீண்டு நின்றது. இறைவன் இறைவியைப் பிரிந்து யோகநிலையில், தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருந்ததனால், உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியற்றுச் செயலிழந்து கிடந்தன. நெற்பயிர்கள் வளரத் தொடங்கும்போது, நீர் வற்றிப்போயின், அவைகள் வாடி வதங்கிக் கதிர்கள் தோற்ற இயலாமல் சாய்வு அடைந்து அழிதல் போல, உயிர்களெல்லாம் புணர்ச்சியும் போகமும் அற்றுச் செயலிழந்து வருந்தத் தலைப்பட்டன.

இந்நிலையில் சூரபதுமனால் பெரும் கொடுந் துன்பங்கள் அடைந்த தேவர்களும் முனிவர்களும், சூரபதுமனிடமிருந்து தம்மைக் காத்தருளும்படி சிவபெருமானிடம் சென்று வேண்டிக் கொண்டனர். அப்போது சிவபெருமான், ''எம்மிடமிருந்து எம்மைப்போல் ஒரு மைந்தன் தோன்றுவான். அவன் சூரபதுமனைத் தடிந்து உங்கள் துயரங்களைப் போக்கிக் காத்தருள்வான்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி சிவபெருமானிடமிருந்து அவருக்கு நிகரான ஒரு புதல்வன் தோன்றுதலைத், தேவர்களும் முனிவர்களும் மிக்க பேரார்வத்துடன் விரும்பி எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். சிவபிரான் ஒருகண நேரம் யோக நிலையில் அமர்ந்து இருந்தது, அவர்களுக்குப் பல ஊழிகளாகத் தோன்றியது. அதனால் அவர்கள் பெரிதும் துன்பமுற்றார்கள்.

செய்வகை யறியாது திகைத்த தேவர்கள், பிரமனிடம் சென்று முறையிட்டனர். பிரமன் காமதேவனை அழைத்து, ''நீ திருக்கயிலைக்குச் சென்று யோக நிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது, நின் மலரம்புகளை ஏவி மயக்கி, அவரை எங்ஙனமேனும் யோக நிலையினர் நீங்குமாறு செய்து வருக'' எனப் பணித்தார். அது கேட்ட காமதேவன்,

> ''கையும், நகையும், கதிரார் விழியும்,
> மெய்யும் தழலாம் விமலன் தனையான்
> எய்யும் படிசென் றிடின், இவ் வுயிர் கொண்டு
> உய்யும் திறமும் உளதோ? உரையாய்''

எனப் பலகூறி மறுத்தான். அதற்குப் பிரமன் சினந்து, ''நீ என் கட்டளையை மறுத்தால். நின்னைச் சாபமிடுவேன்'' என அச்சுறுத்தினன், காமன், 'பிரமனின் சாபமுற்று வருந்துதலினும், சிவபிரான்மீது மலர்க்கணை ஏவி மாளுதலே நலம் பயக்கும்' என ஒருவாறு துணிந்தான். கிளியைக் குதிரையாகக் கொண்டு, தென்றல் தேர் ஏறிக், கரும்பு வில் ஏந்தி, மீனக் கொடி பிடித்து, மதிக்குடை நிழற்ற, குயிலும் கடலும் காகளமும் முரசுகளாய் ஆர்ப்பத், தன் துணைவியாகிய இரதி தேவியுடன், காமதேவன் திருக் கயிலை நோக்கிப் புறப்பட்டான்.

புலியைத் துயில் எழுப்பும் எளிய மான்போல, அச்சமும் நடுக்கமும் கொண்டு, காமதேவன் சிவபிரான் திருமுன்சென்று தன் மலர்க்கணைகளை ஏவினான். சிவபிரான் தனது நெற்றிக்கண் திறந்து, சிறிதே காமனை உற்றுநோக்கினார். அவ்விளவில் காமதேவன் எரிந்து கரிந்து பொடியாய் வீழ்ந்து இறந்தான். தன் கணவன் இறந்தது கண்ட இரதிதேவி பெரிதும் துடித்து அலறிக் கதறி வருந்திப் புலம்பினாள். இறைவன் அவள்பால் இரக்கம்கொண்டு அருள்புரிந்தான். அதன்படி, இறைவன் இறைவியைத் திருக் கயிலையில் திருமணம் புணர்ந்த ஞான்று, காமதேவன், அனங்கன் (உருவமற்றவன்) என்னும் நிலையில், இரதிதேவி மகிழும்படி உயிர்பெற்று எழுந்து, இறையருளைப் பெற்றான் என்பது காமதகனம் பற்றிய வரலாறு.

தத்துவ நுண்பொருள்:

காமதகனம் நிகழ்த்திய பின்னரே, சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் புணர்ந்தார். அதன் பின்னரே குமாரசம்பவம் (முருகனின் தோற்றம்) நிகழ்ந்தது என்பது கந்த புராணம். இது வெறும் கதைபோலத் தோன்றினும் இதன்கண் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள்கள் பல பொதிந்து உள்ளன. கருத்தை விளக்கவே கதை வந்தது. கதை உடல், கருத்து உயிர். இறைவனும் இறைவியும் பிரிந்திருந்த நிலையில் உலகுயிர்கள் செயலிழந்து கிடந்தன என்பது, 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மையைத் தெளிவிக்கின்றது. இறைவி மலைமகளாகத் தவம் புரிந்தாள். இறைவன் தட்சிணாமூர்த்தியாய் யோகநிலை மேற்கொண்டான். ஒரு சிறந்த கணவனை அடையப்

பெண்மகளும், ஒரு சிறந்த மணவியை அடைய ஆண்மகனும், முறைப்படி அருந்தவம் புரிதல் வேண்டும். கணவனுக்குத் தகுந்த மனைவி வாய்ப்பதும், மனைவிக்குத் தகுந்த கணவன் வாய்ப்பதும், தவத்தினாலேயே அமையும் என்பது இதன் நுண்பொருள். தத்தம் தவத்தின் பயனாகக் கணவனும் மனைவியுமாகிய இருவர் கூடி நின்ற வழியும், அவர்கள் காம வயப்பட்டு வெறும் விலங்குணர்ச்சிகளினால் தம்மிற்கூடி மக்களைப் பெற்றெடுத்தல் ஆகாது. புலன்களை அடக்கி வெற்றி கொண்டு, கீழ்த் தரமான காம உணர்ச்சிகளைச் சுட்டெரித்து, ஆன்மீக வாழ்வில் தம்மை மேன்மேல் உயர்த்திக் கொள்ளும் சிறந்த தவவொழுக்கத்தின் பயனாகவே, மக்கட்பேறு எய்துதல் வேண்டும். அந்நிலையில் பெறும் மக்களே, தந்தையினும் சிறந்த மைந்தராய், உலகுக்கு நலம் விளைக்கும் தன்மையில் சிறந்து விளங்குவர்.

பிள்ளைகளைச் சையோகத்தால் (உடற் சேர்க்கையால்) பெறுவதிலும், தவயோகத்தால் பெறுதலே முறையாகும். சிவபாத இருதயரும் பகவதியாரும், இங்ஙனமே திருஞான சம்பந்தரை மைந்தராகத் தவம் கிடந்து பெற்றெடுத்தனர் என்பது எண்ணியுணர்தற்குரியது. காந்தியடிகள் 'தமது மூத்த புதல்வனின் விரும்பத்தகாத செயல்களுக்கும் குணங்களுக்கும், தம்முடைய பண்பாடு எய்தாத இளமைக் காலத்து முறைகேடான வாழ்க்கையே காரணமாகும்' என்று குறிப்பிட்டிருத்தலும், இங்கு நாம் சிந்தித்துணரத் தகுவதாகும்* இச்சிறந்த அரும்பெறல் உண்மையே, காமதகனம் நடைபெற்ற பின்னர் நிகழ்ந்த குமாரசம்பவ நிகழ்ச்சி, நமக்குத் தெள்ளிதின் உணர்த்துகின்றது.

மனிதன் தன் உயிராற்றலை (விந்துவை)க் கீழ் நோக்கிச் செலுத்தாமல், உயர்ந்த குறிக்கோள்களுக்கு மேலான நிலையில் பயன் படுத்துதல் வேண்டும். சிவபெருமான் புலன்களை அடக்கி வென்ற அருந்தவப் பெருந்தகையாகத் திகழ்ந்தார். அவரது ஆற்றல் (ஊர்த்துவ ரேதசு), மேல்நோக்கிச் சென்று, நெற்றிக்கண் வழியே தவக்கனலாகத் தீப்பொறியாக வெளிப்போந்தது. ஐந்துமுகங்களையுடைய சிவபெருமானுக்கு ஆறு முகங்களையுடைய முருகப் பெருமான் தோன்றினான். "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது" என்றபடி, முருகப்பெருமான் உலகுயிர்களுக்கெல்லாம் நலம் செய்யும் கருணைப் பெருங்கடலாகக், கலியுகத்திற் கண் கண்ட தெய்வமாக விளங்கி வருகின்றான்.

உலகத்தில் ஒவ்வொரு தாயும் பார்வதி தேவியைப் போலவும், ஒவ்வொரு தந்தையும் மங்கையோடு இருந்தே யோகுசெய்யும் சிவ பெருமானைப் போலவும், ஒவ்வொரு மைந்தனும் அறிவாற்றல்களில் சிறந்து உலகுக்கு நலம் புரிதற்கு அழகும் இளமையும் அருளும்மிக்க முருகனைப் போலவும் விளங்க முயலுதல் வேண்டும். உலகில் ஒவ்வொரு குடும்பமும் இத்தகைய சிவகுடும்பமாகத் திகழ்தல் வேண்டும்; "காமவெகுளி மயக்கம் இவைமூன்றன் நாமம் கெடக் கெடும் நோய்" என்பதுதான், காமதகனம் பற்றிய கதையின் அழகிய இனிய சிறந்த நுண்பொருளாகும்.

முடிவுரை :

காமதகனம் நிகழ்த்திய பின்னரே குமார சம்பவம் நிகழ்ந்த திறம், எண்ணியெண்ணி நுண்ணிதின் உணர்தற்பாலதாகும். "உள்ளதன் தன்மை, சத்தி. நல்லதன் தன்மை, சிவம். இவை இரண்டும் பிரிந்திருந்த நிலையில் தீமைகள் குதூகலித்துக் குதித்தன; சுவர்க்கம் இழக்கப்பெற்றது. உண்மையும் நன்மையும் (சத்தியும் சிவமும்) மணந்து, ஒன்றுபடுதல் வேண்டும். அப்போதுதான் உலகை உய்விக்கும் தனிப் பெருந்தலைமகன் (முருகன்) தோன்றுவான். உண்மையையும் நன்மையையும் ஒன்றுசேர்ப்பதற்குக் காம உணர்ச்சியின் மூலம் முயற்சி நிகழ்ந்தது. அது கண்டு இறைவனுக்குச் சீற்றம் எழுந்தது. அதன் விளைவு ஏமாற்றமாய்ப் பெரும் துன்பத்தில் முடிந்தது. இறுதியில் தவத்தினால் பெற்ற தூய்மையின் வாயிலாக, உண்மையும் நன்மையும் இணைந்து மணந்தன. தனிப்பெரும்

---

* "I have always felt that the undesirable traits I see today in my eldest son are an echo of my own undisciplined and unformulated early life. I regard that time as a period of half-baked knowledge and indulgence. It co-incided with the most impressionable years of my eldest son......"

—M. K. Gandhji,
My Experiments with Truth

தலைமகன் தோன்றியருளினன். தீமைகளை எதிர்த்து அழித்தான். சுவர்க்கம் மீண்டும் கிடைக்கப்பெற்றது'' * என்று இரவீந்திரநாத தாகூர் அவர்கள், தாம் எழுதிய 'மனிதனின் சமயம்' என்னும் நூலிற் குறிப்பிடுவது, இங்கு நாம் அனைவரும் குறிக்கொண்டு நம் வாழ்க்கையிற் போற்றத்தக்கதாகும். —ஆசிரியர்

"ஐவணமாம் பகழியுடை
அடல்மதனன் பொடியாகச்
செவ்வணமாம் திருநயனம்
விழிசெய்த சிவமூர்த்தி...''

—சுந்தரர்

"பூதப்படையுடைப் புண்ணியரே!
புறஞ்சொற்கள் நும்மேல்
ஏதப் படஎழு கின்றனவால்!
இளையாளொடு உம்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட
காமனைக் கண்மலராற்
சேதப் படுத்திட்ட காரணம்,
நீர் இறை செப்புமினே''

—சேரமான் பெருமாள்

* "This is the eternal problem of man. The evil spirit is exultant and paradise is lost. when Sati the spirit of Sat (Reality) is disunited from Siva, the spirit of Goodness. The Real and the Good must meet in wedlock if the hero is to take his brith in order to save all that is true and beautiful. When the union was attempted through the agency of passion, the anger of God was aroused and the result was tragedy of disappointment. At last, by purification through penance the wedding was effected, hero was born, who fought against the forces of evil and paradise was regained."

—RABINDRANATH TAGORE,
The Religion of Man.

மதிப்புரை

திருவாசகமும் சிவராஜ யோகமும் : திருவாசகம், அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழிக்கண் உள்ள இலக்கியங்களுள் தலைசிறந்த தொன்று. சமயம் தத்துவம் ஞானம் பக்தி முதலிய பற்பல துறைகளில், திருவாசகம் தனக்கு ஈடும் எடுப்பும் அற்றுச் சிறந்த பேரிலக்கியமாகத் திகழந்து வருகின்றது. அதனைப் பாடி யருளிய மாணிக்கவாசகரை " அறிவாற் சிவமே யாயவர் '' என நம் சான்றோர்கள் தொன்று தொட்டுப் போற்றி வருகின்றனர்.

இத்தகைய சிறந்த திருவாசகத் தென்றமிழ் மாமறைக்குச் செந்தமிழ்ச் சிவநெறிப் பெருஞ் சான்றோர், திருவாரூர்—சிவயோகி. திரு. மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள், " திருவாசகமும் சிவராஜ யோகமும் '' என்னும் தலைப்பில், அதன் முதல் நான்கு அகவல்களின் யோக அநுபவப் பொருள் நலங்கள் பொதுளும்படி, இச் சிறந்த விளக்க உரையினை எழுதியுள்ளார்.

இதன்கண் பெருந்துறை (சகஸ்ரதளம்), தில்லை (இருதயம்), ஆரூர் (மூலாதாரம்), உத்தரகோசமங்கை (இடக்கண்) ஏகம்பம் (வீணாதண்டம்), பனையூர் (சுழுமுனை), கழுக்குன்று (பிரணவ சிகரம், நாதாந்தம்), குற்றாலம் (நெற்றி நடுவின் நீலஒளி,) முதலிய பற்பல தலங்களைப்பற்றிய விளக்கங்கள் ஞானயோக நெறியில் நன்கினிது விளக்கப்பெறுகின்றன. நடராசர் தியாகராசர் இடபாரூடர் கலியாணசுந்தரர் தட்சிணாமூர்த்தி முதலிய தெய்வத் திருவுருவங்களின் இயல்புகள், ஆங்காங்கு அழகுறவும் நுட்பமாகவும் விளக்கப்பெற்றிருக்கின்றன. பல புகழ்மிக்க சமய இலக்கியங்களினின்று பொருத்தமான மேற்கோள்கள் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன. திருவாசகத்தின் அநுபவ ஞானப் பொருட் கருவூலத்தை வெளிப்படுத்திக் காட்டும் திறவுகோலாக, ஏராளமான திருமந்திரப் பாடல்களும், அவற்றின் பொருள் விளக்கங்களும், இதன்கண் தரப்பெற்றுள்ளன. இதனால் இவ்வுரைநூல், பொன்மலர் நாற்றம் பெற்றதுபோல், மேலும் சிறப்பும் மேன்மையும் பெறுகின்றது. எனவே இந்நூலைக் கற்பவர்கள் திருமந்திர நூலினையும் சிறப்புறக் கற்றுத் தெளிய வல்லவராவர் என்பது திண்ணம். மாட்சிமிகு நீதிபதி எஸ. மகராஜன், திருமுருக கிருபானந்தவாரியார் முதலிய பெருமக்கள் இந்நூலுக்கு அணிந்துரையளித்துப் புகழ்ந்துள்ளனர்.

கிடைக்குமிடம் :

திரு. கு. பழனிவேலர், வாணிபார்மசி, 147, மேலவீதி, சிதம்பரம்-1, தென்னாற்காடுமாவட்டம்.

விலை ரூ. 10/-. —ஆசிரியர்

திருவிடைமருதூர்த்

திருமுறைக் கருத்தரங்கம்

(வரவேற்பும் ஆசியுரையும்)

திருவார் திரு. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம்.

அருள்திரு மகாலிங்கப்பெருமான் திருக் கோயிலின் சார்பில் நடைபெறும் மூன்ருவது திருமுறைக்கருத்தரங்கமாகிய இப்பேரவையைத் தொடங்குவிக்க, நம் அழைப்பினுக்கிணங்கி இவண் போந்திருக்கும் ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்களை, நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்ரேம்.

பன்னிரு திருமுறைகள் என்பன, மூன்ரும் நூற்ருண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்ருண்டு வரை, தற்போதைய கேரள நாட்டையும் அது போது தன்னகத்தே கொண்டிருந்த இத் தமிழகத்தே அவதரித்து, இறைநிலை எய்திய பெருமக்கள்தம் அருள்வாக்குகளாகும். இத் திருமுறைகள் பண்சுமந்த பாடல்களின் கரு வூலங்களாம். அப்பாடல்கள் உயர்ந்த இலக்கியச் செறிவும், தமக்கே உரிய எழில் நலன்களும் கொண்டவை. பரம்பொருளைச் சிவமாக வழிபட்டு, மெய்ந்நெறி நின்று, அவ னேடு உறவாடிக் கலந்து வாழ்ந்த அவ்வனு பூதிச் செல்வர்கள் அருளிய உண்மை விளக்கங்களாகத் திகழ்வன இத்திருமுறைகள். இவை கற்போரை அன்புநெறிப்படுத்தி, இறை வனைப் புகழ்ந்து வழிபட ஊக்குவிப்பன. நெறி பிறழாத தூய வாழ்க்கையை மேற்கொண்டு, மன அமைதியும், இன ஒருமையும் பூண்டு வாழத்தூண்டும் தகைமையன. சைவத்தையும், அதன் தத்துவங்களையும் ஐயந்திரிபறக் கூறும் இத்திருமுறைகள், இப்பாரத நாட்டிலும், இலங்கையிலும் உள்ள சிவனுறை கோயில் களைப் பற்றியன.

இவ்வாண்டின் கருத்தரங்கத்தில் ஆராய்ந்து சிந்திக்க மேற்கொண்டவை, திருநாவுக்கரசரது திருப்பதிகங்கள் அடங்கிய, 4, 5, 6-ஆம் திரு முறைகளாகும். தம்சொல்லும் செயலும் இயைந்து, சைவத்துக்கு மறுமலர்ச்சியும், ஆக்கமும், ஏற்றமும்தந்த நான்கு சமயகுரவர் களுள் ஒருவர் திருநாவுக்கரசர். ஏழாம் நூற்ருண்டில் அவதரித்த அப்பெருமானும், அவரோடு சமகாலத்தவராகிய ஞானசம்பந்தப் பெருமானும் ஒருங்கிணைந்து, இத்தமிழ்நாட்டில் மூன்ரும் நூற்ருண்டு தொட்டு நிலவிய மருள் கலந்த இருள்நிலையைப் போக்கியருளினர்கள். திருநாவுக்கரசரை அப்பர் எனவும் அழைக்கின் ரேம். அப்பரை அப்பெயரிட்டு அன்போடு அழைத்தவர், அப்பெருமானைச் சைவ உலகின் தந்தையாகக் கருதிய ஞானசம்பந்தப் பெருமானு வர். பிற்காலத்து, இராசராச சோழனது விருப்பத்திற்கிணங்கி, பன்னிரு திருமுறைகளில் பதினென்றைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள், அப்பர் பெருமானை "மகாகவியோகி" எனப் போற்றியுள்ளார்.

அப்பர் அருளிய திருப்பதிகங்கள் அன்பர்க்கும் மெய்ந்நூல் அறிஞர்க்கும் மட்டுமன்றிப் புல வர்க்கும், அரசியல் வல்லுநர்க்கும் உள்ளுணர் வூட்டுவனவாம். பின்வருவன பெரிதும் எடுத் தாளப்படும் அப்பர் அருள்மொழிகளில் சிலவாம்.

1. "தன்கடன் அடியேனையும் தாங்குதல்
   என் கடன் பணிசெய்து கிடப்பதே"
2. "நாமார்க்குங் குடியல்லோம்"
3. "......தயாமூல தன்ம மென்னும் தத்துவத்
   தின் வழி நின்று
   தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும்
   நம்பி..."
4. "என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை
   என்னிலும் இனியான் ஒருவன் உளன்"

அன்பரையும் கற்றறிந்தோரையும் ஈர்க்கும் திருப்பாடல் ஒன்றினை இங்கு நினைவிற் கொள்ள லாம். அதை, இடைமருதன் என்று திருமுறைப் பெயருடைய அருள்திரு மகாலிங்கப்பெருமான் மீது அப்பர் அருளினர்.

"கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு
இடைமருதனே"

மேதகு ஆளுநர் அவர்களே! தாங்கள் தோய்ந்த மனிதாபிமானமும், அரசியற் றெளிவு முடைய அறிஞரென்பதும், வாழ்வின் உயர் குணங்களை மதிக்கும் பண்புடையீர் என்பதும், நாம் அறிவோம். ஆகவே, இத்தகைய தாங்கள் உயர்தனி மறைகளாகிய திருமுறை களைச் சிந்திக்கும் கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைப்பது, அவ்வமைப்பின் இன்றி யமையா முதன்மையினைப் பலரும் அறிய உதவும்.

மகிழ்வூட்டும் இச்சீரிய விழாவில், பரம் பொருளாகிய அருள்திரு மகாலிங்கப்பெருமானை யும், நமது பூசை மூர்த்தியாகிய அருள்திரு ஞானமா நடராசப் பெருமான் செம்பொற்கழல் களையும் சிந்தித்துத்தாங்கள் குடும்பத்தினருடன் எல்லா நலன்களும் எய்தி நீடினிது வாழுமாறு ஆசீர்வதிக்கின்ரேம். இக்கருத்தரங்கத்தில் பங்குபெறும் அன்பர்கள் யாவர்க்கும் சிவபரம் பொருள் திருவருள் பாலித்தருள்க. ★

திருவாய்மொழிப் பிள்ளை

திரு. இரா. அரங்கராசன், M.A., B.T.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், மதுரைக்கல்லூரி, மதுரை.

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அவதரித்த திருத்தலங்களைப் பேணிக் காப்பது நம் கடமையாகும். ஆசாரியர்கள் அவதரித்த மண்ணுக்குத் தனிச் சிறப்பு உண்டு. மன்னுபுகழ் மணவாள மாமுனிகள் காலட்சேபகூடம் கட்டத் தொடங்குமுன், பிள்ளைலோகாசாரியர் திருமாளிகையிலிருந்து கையளவு மண் எடுத்து வந்து அதனைக் கொண்டு அடிக்கல் நாட்டினார். 'மறைபொருள் விளைந்த மண்' என்று பிள்ளைலோகாசாரியரின் திருமாளிகையைப் போரக் கொண்டாடினார் மாமுனிகள். அத்தகைய ஆசார்ய சார்வ பௌமரான மணவாள முனிகளின் ஆசாரியராக விளங்கியவர், திருவாய்மொழிப் பிள்ளை, அவர் திருவவதரித்த திருத்தலம் யாண்டுளது? திருவாய்மொழிப் பிள்ளை, குந்திநகரத்தில் திருவவதரித்தனர் என்று அவருடைய தனியனால் அறிகிறோம். அவ் வடமொழித் தனியனை, நாள்தோறும் திவ்வியப்பிரபந்தச் சாற்றுமுறைத் திரளில் ஓதுவதை இன்றும் கேட்கலாம். அதன் பொருள்: "குந்தி என்னும் நகரில் பிறந்தவரும் பிள்ளைலோகாசாரியரது திருவருளால் அடைந்த பெரும் பேறான கைங்கரியத்தினால் விளங்கினவருமான, திருவாய்மொழிப் பிள்ளையை வணங்குகின்றேன்" என்பது. ஈண்டுக் குறிப்பிடப்படும் குந்தி நகரத்தின் தொன்மையினையும் அங்கே அவதரித்த ஆசாரியரான திருவாய்மொழிப்பிள்ளையின் மேன்மையினையும் இனிக் காண்போம்.

குந்தி நகரம்:

குந்திநகரம் மதுரைமாநகருக்குக் கிழக்கே பத்துக் கல் தொலைவில் ஒரு சிற்றூராகக் காட்சி தருகிறது. பச்சைப்பசேல் என்று வளங் கொழிக்கும் விளை நிலங்களுக்கு இடையே இச் சிற்றூர் தன் பழம் பெருமைகளை எல்லாம் மண்ணிலே மறைத்துக் கொண்டு மௌனமாகி நிற்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டிய நாட்டின் பெரு நகரங்களில் ஒன்றாகக் குந்தி நகர் திகழ்ந்தது. இன்று அதனுடைய பெயரே 'கொந்தகை' என்று மருவிவிட்டது. இக் கொந்தகையின் தொன்மையினை ஆராய்ந்தால் அது புராண இதிகாசங்களிலும் பேசப்பட்ட பெருமைமிக்கது என்று அறியமுடிகிறது.

பாரதம் கூறும் பழம்பெருமை:

கொந்தகைக்கு மிக அருகில் மணலூர் என்ற சிற்றூர் உள்ளது. அது ஒரு காலத்தில் பாண்டியர்களுடைய தலைநகரமாகத் திகழ்ந்தது என்று மகாபாரதம் அறிவிக்கிறது. தீர்த்த யாத்திரையாகத் தென்னாடு வந்த அருச்சுனன் மணலூரில் தங்கி, அங்கிருந்து அரசோச்சிய பாண்டியனின் மகள் சித்திராங்கதையைத் திருமணம் செய்து கொண்டதாக மகாபாரதம் கூறுகிறது. விஷ்ணுபுராணத்திலும் பாகவதத்திலும் இவ்வரலாறு சொல்லப்படுகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் 54-ஆம் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் காட்டும் ஒரு தமிழ்ச் செய்யுளும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறது. இத் திருமணத்தையே பிற்காலத் தெழுந்த அல்லி அரசாணிமாலை போன்ற கிராமியக் கதைப் பாடல்கள் அழகான கற்பனைகளுடன் விவரித்தன.

அருச்சுனன் சித்திராங்கதையுடனும், தன் பரிவாரங்களுடனும், சில காலம் தனித்து வாழ்வதற்கான ஒரு நகரத்தையே பாண்டியமன்னன் பப்புருவாகனன் படைத்துவிட்டான். அந்த நகரத்திற்கு அருச்சுனன் தன்னுடைய தாய் குந்தி தேவியின் நினைவாகக் குந்தி நகர் என்று பெயரிட்டு அழைத்தான். அதுவே இன்று மிகவும் உருமாறிக் கொந்தகை என்று வழங்குகிறது. அருச்சுனன் வணங்கி வழிபாடு இயற்றுவதற்காகக் குந்தி மாநகரில் கோயில் ஒன்றும் அக்காலத்திலேயே எழுப்பப்பட்டது. அக் கோயிலில் அருளாட்சி செய்யும் இறைவன்

'தெய்வ நாயகன்'. அவரே மூலத்தானத்து முதல்வர். அவர் திருமகள், மண்மகள் ஆகிய இரு நாச்சிமார்களுடன் காட்சிக்கு அழகராய் நின்ற திருக்கோலத்தில் சேவை தருகிருர். தாயாரை வரந்தரும் வரமங்கை என்று அழைக்கின்றனர். விமானம் நந்தனவர்த்தன விமானம். இங்கு எழுந்தருளியிருக்கும் திருவுலா எம்பெருமான் பூத்த புன்முறுவலோடு அழகே உருவாக அமைந்தனர்.

திருவாய்மொழிப்பிள்ளை திருவவதாரம் :

குந்தி மாநகரில் கி. பி. 1307ல் திருவாய்மொழிப்பிள்ளை என்ற பெரியார் அவதரித்தார். அவருக்குப் பெற்றோர்கள் இட்ட திருநாமம் திருமலையாழ்வார். இவர் பூர்வசிகை வைஷ்ணவர் குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய திருத்தாயார் பிள்ளை உலகாசிரியரிடம் ஆசிரயித்து ஞானோபதேசங்களைப் பெற்று இருந்தார். திருமலையாழ்வார் உலகியல் கல்விகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றுப் பாண்டிய நாட்டுப் பேரமைச்சராகப் பொறுப் பேற்ருர். அரசியல் காரியங்களை நிர்வகிப்பதில் மிகவும் நிகரற்று விளங்கினர்.

இவர் காலத்தில் பாண்டிய நாட்டை முகம் மதியப் படைகள் கொடூரமாகத் தாக்கின. குதுப்புதீனின் தளகர்த்தன் குசுருகான் மதுரையைத் தாக்கினன். சுந்தரபாண்டியன் இறந்து போனன். மதுரை மாநகர் சூறையாடப் பட்டது. சிறுவனுக இருந்த பராக்கிரம பாண்டியன் அரியணை ஏறினன். அவன் வயது எய்தும்வரை திருமலையாழ்வாரே அரச காரியங்களை முழுப்பொறுப்புடன் நிர்வாகம் செய்தார்.

நம்மாழ்வார் விக்கிரகத்திற்கு ஆபத்து :

துருக்கர் படையெடுப்புக்கு அஞ்சிய அடியார்கள், ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வரை எழுந்தருளப் பண்ணிக் காடு சூழ்ந்த ஒரு மலைக்குகையில் ஒளித்து வைத்தனர். தோழப்பர் மூலம் இச்செய்தி திருமலையாழ்வாருக்கு எட்டியது. அவரும் மலையான மன்னருக்குத் திருமுகம் கொடுத்துப் படைவீரர்களையும் தோழப்பரோடு காவலாக அனுப்பி வைத்தார். அவர்களும் திருவனந்தபுரம் சென்று சேர மன்னன் துணையுடன் நம்மாழ்வாரைக் கண்டெடுத்துத் திருக்கணம்பியில் எழுந்தருளப் பண்ணி உற்சவங்களையும் நடத்தினர்கள். இந்நிலையில் திருமலையாழ்வாரின் திருத்தாயாராய் பரம சாத்விகையாய் இருந்த அம்மையாரும் திருநாட்டுக்கு எழுந்தருளினர். திருமலையாழ்வார் தம்முடைய சிறிய தாயாரின் அரவணைப்பிலே தாயைப் பிரிந்த துயரத்தை மறந்திருந்தார். அமைச்சர் பதவியில் இருந்த அவர், தமிழ் இலக்கியங்களைக் கற்று அவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழ்ச் சுவையன்றி அவிழ்ச் சுவையறியாத பெருங் கலைஞராக விளங்கிய அவரைத் திருத்தி வைணவ சம்பிரதாயத் தலைவராக ஆக்க வேண்டும் என்று பிள்ளை உலகாசிரியர் பெரிதும் விரும்பினர். ஆனல் அவ்வெண்ணம் அவர் வாழ்நாளில் முற்றுப்பெறவில்லை. துருக்கர் படை திருவரங்கத்தை முற்றுகையிட்டபொழுது நம்பெருமானைத் தூக்கிக் கொண்டு தள்ளாத வயதில் காடும்மேடும் சுற்றித் திரிந்த உலகாசிரியர் சோதிடக் குடியில் ஆசாரியன் திருவடி அடைந்தார். அப்போது தம்முடைய இறுதி விருப்பத்தை நிறைவேற்றுமாறு, கூரகுலோத்தம தாசரைக் கேட்டுக் கொண்டே உயிர் துறந்தார். கூரகுலோத்தம தாசர், மதுரையை அடைந்து அங்கு அமைச்சர் திருமலையாழ்வாரைச் சந்திக்கத் தக்க தருணத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தார்.

சந்திப்பு:

ஒருநாள் திருமலையாழ்வார் திருப்பல்லக்கில் திருவீதி வலம் வருவதைக் கண்ட கூரகுலோத்தமர், நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தத்தை இசையில் ஏற்றிப் பாடினர். பல்லக்கு நின்றது. அருளிச் செயல் அமைச்சரை ஈர்த்தது. திருவிருத்தத்தின் பொருளை அறிய விரும்பினர். ஆனல் அரச காரியத் தடை நின்றது. அமைச்சரின் ஆசை நிறைவேறவில்லை. கூரகுலோத்தமரும் மற்ருெரு கால் முயற்சி செய்வோம் என்று திரும்பி விட்டார். அமைச்சரின் இதயத்தில் ஆழ்வார் அருளிச் செயல் ஒலி எழுப்பிக் கொண்டேயிருந்தது. தமது சிறியதாயார் மூலம் பிள்ளை உலகாசிரியரின் பெருமையைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

மற்ருெரு நாள் கூரகுலோத்தமர் மதுரைக் கோட்டை வாசலில் காத்திருந்தார். திருமலையாழ்வார் யானைமீது ஏறிப் புறப்படத் தாம் மேட்டு நிலத்திலேயே நின்று தம்மைக் காண்பித்துக் கொள்ள, அவரைக் கண்ட அமைச்சர் சடக்கென யானையிலிருந்து இறங்கி அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி

னார். அவருடைய முடிபிடித்தெடுத்துக் கூரகுலோத்தமர், அன்புடன் அணைத்துக்கொண்டு தமக்குப் பிள்ளை உலகாசிரியர் சாதித்த அரும் பொருளை உபதேசித்தார்.

ஆட்கொள்ளுதல்

கூரகுலோத்தமர் தங்குவதற்காக வைகை ஆற்றின் கரையிலே சந்தியா மடத்தருகே ஒரு திருவீதியில் திருமாளிகையைச் சமைத்துத் தளிகைக்குத் தேவையானசகல பதார்த்தங்களையும் அரண்மனையிலிருந்தே அனுப்பினார் அமைச்சர் திருமலையாழ்வார். கூரகுலோத்தமர் தினமும் அமைச்சரின் மாளிகைக்குத் தாமே எழுந்தருளி அவர் திருமண்காப்பு அணியும் வேளையில் அருகிலிருந்து இரகஸ்யார்த்தங்களை உணர்த்தி வந்தார். ஒரு நாள் அரசியல் பணியின் அவசரத்தினால் ஆசிரியரின் உபதேச மொழிகளைக்கேளாமல் வாளாஇருந்துவிட்டார். மறுநாள் ஆசிரியர் வராதது கண்டு மனங் கலங்கித் தவறுணர்ந்து ஆசிரியரின் இல்லத்தை அடைந்து அணுகி அவருடைய திருவடிகளில் வேரற்ற மரம் போல் விழுந்து "பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் திருத்திப் பணிகொண்மின்" என்று பணிவுடன் வேண்டினார்.

கூரகுலோத்தமர் மனமிரங்கி அவருக்குத் திருவடித்தீர்த்தம் பிரசாதித்து அருளினார். அந்தக் கணமே அமைச்சர் திருமலையாழ்வாருக்குத் தீதற்ற ஞானம் பிறந்தது. கூரகுலோத்தமதாச நாயனார் திருவடிகளே சரணம் என்ற தாரக மந்திரத்தைப் பலகாலும் அனுசந்திக்கத் தொடங்கினார். அவரைப் பித்தர் என்று நினைத்துப் பலரும் அரசியாரிடம் குறை கூறினர். அரசியார் மனம் வருந்த, அமைச்சரும் ஆறுதல் கூறினார். பராக்கிரம பாண்டியன் அரியணை ஏறும்வரை அரச காரியங்களை அடிக்கடி விசாரித்துக் கொண்டும், கூரகுலோத்தமரிடம் சகல அர்த்தங்களையும் அருளிச் செய்யக் கேட்டும் பரம விரக்தர் ஆனார். பின்னர் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்து தம் ஆசாரியருடன் திருப்புல்லாணிக்கு அருகில் சிக்கில் கிடாரம் என்ற சிற்றூரில் தங்கிப் பிள்ளைஉலகாசிரியரின் கொள்கைகளை ஒன்று விடாமற் கேட்டு உளம் பூரித்தார்.

கூரகுலோத்தமர் தம்முடைய இறுதிக் காலத்திலே திருமலையாழ்வாரை அழைத்தருளி விளாஞ்சோலைப் பிள்ளையிடத்தில் திருவாய் மொழியையும் கேட்குமாறு ஆணையிட்டுப் பிள்ளை உலகாசிரியர் திருவடிகளைத் தியானித்துக் கொண்டே திருநாட்டுக் கெழுந்தருளினார்.

திருவாய் மொழிப்பொருள் கேட்டல்:

திருமலையாழ்வார் திருக்கண்ணங்குடிப் பிள்ளையிடம் திருவாய்மொழி கேட்டும் ஆராத பெருவிருப்பத்தோடு சென்று சேர்ந்தார். அவரும் திருமலையாழ்வாருக்குத் திருவாய் மொழியின் தாத்பர்யார்த்தங்களை எல்லாம் அடைவாக அருளிச் செய்தார். திருவாய் மொழியைச் சொற்சுவை பொருட்சுவையோடு விரிவாக ஓதியுணரத் திருமலையாழ்வாருக்கு வேட்கை மீதூர்ந்தது. திருவாய்மொழி வல்லுநரான திருப்புட்குழிச் சீயரைக் காண விரைந்தார். ஆனால் அந்தோ! சீயர் பரமபதித்துப் பன்னிரண்டு நாட்கள் ஆயின. மனம் நொந்த திருமலையாழ்வார் தமது அறிவுப் பசியைத் தீர்க்க ஆசாரியனைக் காட்டித்தரவேணுமென்று கச்சிப்பதிக்கு எழுந்தருளிப் பேரருளாளனை வேண்டி நின்றார். அப்போது காஞ்சிவாழ் மக்கள் திருமலை யாழ்வாரைப் பூரணப் பொற்குடத்துடன் வரவேற்றுத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று தீர்த்தம், சடகோபன், சாத்துப்படி, திருத்துழாய், திருமாலை முதலான வரிசைகள்பிரசாதித்துத் 'தரிசனத் தலைவராகுக' என்று வாழ்த்தினர். அப்போது அப்பெருந் திரளில் நாலூர்ப்பிள்ளையும், அவர் குமாரரான நாலூர் ஆச்சான்பிள்ளையும் எழுந்தருளியிருந்தனர். பேரருளாளனான எம்பெருமான் நாலூர்ப் பிள்ளையை அழைத்துத் திருமலையாழ்வாருக்குத் திருவாய்மொழிப் பொருளை அருளிச்செய்யுமாறு 'ஆணையிட்டான். நாலூர்ப் பிள்ளை வயது முதிர்ந்து தளர்வெய்தியிருந்தார். ஆகவே தம் மகனான ஆச்சான்பிள்ளையை அழைத்துத் திருமலையாழ்வாருக்குத் திருவாய்மொழியின் பொருளை அருளிச் செய்யுமாறு ஆணையிட்டார்.

நாலூராச்சான்பிள்ளையிடம் திருவாய் மொழியின் விரிவுரையான ஈடு முப்பத்தாறாயிரப் படியை வரியடைவே கேட்டுணர்ந்தார் திருமலையாழ்வார். திருமலையாழ்வாரின் மேதாவிலாசத்தைக் கேள்விப்பட்டு அவரைக் காண விரும்பினர் ஆய் என்ற பேரறிஞரும் நாலூர்ப் பிள்ளையும். அவர்களும் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளுமாறு எம்பெருமானுடைய திருமுகமாக அனுப்பியருள அதனைக்கண்ட ஆச்சான்பிள்ளை திருமலையாழ்வாரைக் கூட்டிக் கொண்டு திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளினர்.

—தொடரும்

"சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்கல்"

(கவிதைப் பொருட்சுவை நுகர்வு)

"பண்டை நாளாலே நின்திரு வருளும்,
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டு, நின் கோயில் சீய்த்துப்பல்
படிகால்
குடிகுடி வழிவந்து ஆட்செய்யும்
தொண்டரொர்க்கு அருளிச் சோதிவாய்
திறந்து, உன்
தாமரைக் கண்களால் நோக்காய்
தெண்டிரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த
திருப்புளிங் குடிக்கிடந் தானே"

—நம்மாழ்வார்

பாடலின் பொருள் :

"தெளிந்த அலைகளையுடைய தாமிரபரணி யாறு பாய்கின்ற, குளிர்ந்த நீர்வளம் மிக்க வயல்களால் சூழப்பெற்ற திருப்புளிங்குடி என்கின்ற திருத்தலத்தில் பள்ளிகொண்டருள்பவனே! உன்னுடைய திருவருளையும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாருடைய திருவருளையும், பண்டைநாள் முதலாகவே அடைந்து, நின்னுடைய திருக்கோயிலில், திருவலகிடுதல் மெழுகுதல் முதலிய தொண்டுகளைச் செய்து, தொன்று தொட்டு வழிவழியாக அடிமை செய்து வருகின்ற தொண்டர்களாகிய எங்கள்பால் இரக்கம் கொண்டு, ஒளிமிக்கு அழகிய நின் திருவாயைத் திறந்து இனிய நல்லுரைகள் பலவற்றைக் கூறி, உன்னுடைய தாமரைமலர் போன்ற திருக்கண்களால் நோக்கியருள்வாயாக "! என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

உம்மைத் தவிர வேறு புகல் அற்ற அடியேன்பால் இரக்கம் கொண்டு, ஏதேனும் ஓர் ஈர நற்சொல் அருளிச் செய்யவும், என் பிறவித் துயர் வெப்பம் தீரும்படி குளிர நோக்கியருளவும் வேண்டும் என்பது, இப்பாடலின் கருத்து.

பாடற்பொருள் நலங்கள் :

(1) முதல் இரண்டு வரிகளாலும், ஆழ்வார் தொன்றுதொட்டு நெடுங்காலமாக வழிவழியே தொண்டு பூண்டொழுகும் தம்முடைய இயல்பினைக் குறிப்பிடுகின்றார். திவ்விய தம்பதிகள் எனப்படும் திருமகளும் திருமாலும் ஆகிய இருவரின் திருவருளையே துணையாகக் கொண்டு, நித்தலும் கோயில் தொண்டு புரிந்துவரும் நற்குடிப் பிறப்பில் தோன்றப் பெற்ற தமது பெருமையை, விதந்து பேசுகின்றார்.

(2) "எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால் எனக்கேல் எம்மான் திரிவிக்கிரமனையே" என்று அருளிச் செய்தவர் ஆகையாலே, "பண்டை நாளாலே நின் திருவருள் கொண்டு" என்று அருளிச் செய்தார். பெரிய பிராட்டியின் முயற்சியும் பரிந்துரையும் காரணமாகவே, பெருமாளின் திருவருள் வாய்த்தமையால் "பங்கயத்தாள் திருவருளும் கொண்டு" என்று மொழிந்தருளினர்.

(3) முற்சொலற் பாலதை முன்னும், பிற்சொலற் பாலதைப் பின்னும் சொல்ல வேண்டுவதே முறை. அம்முறையில் பங்கயத்தாள் திருவருளை முன்னரும், பெருமாளின் திருவருளைப் பின்னரும், குறிப்பிட்டிருத்தல் வேண்டுமாயினும், காரியத்தை முன்னே சொல்லி, காரணத்தைப் பின்னர்க் கூறுவதும் ஒருவகை முறையாதலின், "நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு" என்று அருளிச் செய்தார்.

(4) குடிகுடி வழிவந்து ஆட்செய்யும் தம் தொண்டின் திறம் கூறுவார். "நின் கோயில் சீய்த்து" என்றார். இறைவன் எழுந்தருளியிருக்

கும் திவ்விய தேசங்களில் திருவலகிடுதல் மெழுகிடுதல் கோலமிடுதல் முதலியன பலவும், சிறந்த தொண்டுகளாக இத்தொடரால் குறிக்கப் பெற்றன.

(5) இறைவனுக்குத் தொண்டுபூண்டு ஒழுகுதல் சிறப்புடைத்தேயாயினும், அவ் இறைவனுக்கு வழிவழியே, பரம்பரை பரம்பரையாகக் குடிகுடி ஆட்செய்யும் சூழலிற் பிறந்து, தொண்டு புரிந்து ஒழுகல் மிக்க பெரும் சிறப்புடையதாதலின், "பல்படி கால் குடிகுடி வழி வந்து ஆட்செய்யும் தொண்டர்" என்று சிறப்பித்து விதந்தோதினார்.

(6) "தொண்டனேற்கு" என்று ஒருமையாகக் கூறாமல், 'தொண்டரோர்க்கு' என்று பன்மையாகக் கூறியது, தம்மோடொத்த பிறரையும் சேர்த்துக் கொள்ளும் பரந்து விரிந்த மனப்பான்மையால்.

(7) தமக்கு ஏதேனும் இனிய நல்ல சொற் கூறியருளுதல் வேண்டுமென்பார் 'சோதிவாய் திறந்து' என்றார். பூ அலருமாபோலே வாய் திறக்கவும், அப்போது திருமுகத்தில் மலர்ச்சியும் செவ்வியும் மிளிரவும் வேண்டும் என்பார் "சோதிவாய்" என்றார்.

(8) இங்ஙனம் சோதிவாய் திறந்து கூறும் நல்ல இனிய சொற்களில் தோற்றாத பாசமும் பரிவும், பார்வையிலே நன்கினிது புலப்படும்படி குளிர நோக்கிக் கடைக்கணித் தருளல் வேண்டும் என்பார், "உன் தாமரைக் கண்களால் நோக்காய்" என்றார். இறைவனின் திருவருட் கடைக்கண்நோக்கம் படுதலால், எல்லா நலன்களும் இனிது விளையும் என்னும் உண்மை இதனால் வலியுறுத்தப் பெற்றது.

கவிதைச் சுவைத்திறன் :

இங்ஙனம் மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்துள்ள இச்சிறந்த பாடல், கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு களிதுளும்பச் செய்வதாகும். காணுந் திறனற்ற குருடரும், கேட்கும் திறன் இழந்த செவிடரும், பேசும் நலம்பெறாத ஊமையரும், நடக்க மாட்டாத முடவரும், உலகிற் பலர் உளராதல் போலவே, கவிதைத்திறத்தையும், இலக்கியக் கலை நலத்தையும் சுவைத்து உணரமாட்டாத மனப்புலக் குறையரும், உலகில் மிகப் பலர் உண்டு. என்றி டேவிட் தோரே என்னும் பேரறிஞர் ஒருவர் கூறுவதுபோல, ஒருகோடி மக்களில் யாரேனும் ஓரிருவர் மட்டுமே கவிதையின்பம் நுகர வல்லவராக விளங்குவர் (1). திருவள்ளுவப் பெருந்தகையார் மொழிந்ததனை அடியொற்றி, "மலரினும் மெல்லிது செய்யுள்; சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்" என நாமும் குறிப்பிடலாம். 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' என்று தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம் கூறுவதற்கேற்ப, கலைநலப் பொருளியல்புகளைச் சுவைத்துணரும் திறம் பெற்ற ஒருசில அறிஞர் பெருமக்களுக்கே, சிறந்த கவிதையின் சொற்பொருட் சுவைத்திறங்கள் புலனாகும். சிறந்த பெருமக்கள் இருவர் இப்பாடலின் பொருள் நலனை எங்ஙனம் நோக்கிச் சுவைத்து அநுபவித்தனர் என்பது இங்கு அறிந்து மகிழற்பாலது.

அரையர் பெருமக்கள் :

திருவரங்கம் பெரியகோயிலில் பிள்ளைதேவப் பெருமாள் அரையர் என்பவர் ஒருவர் இருந்தார். அரையர் என்பவர்கள், திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் பெருமாள் திருமுன்பு இசையுடன்பாடி அபிநயம் பிடித்துப் பொருள் விளக்கம் புரிபவராவர். அத்தொண்டு புரிந்துவந்த பிள்ளைதேவப் பெருமாள் அரையர், ஒருநாள் பெருமாள் திருமுன்பு இத் திருப்பாசுரத்தைச் சேவிக்க நேர்ந்தது. அங்ஙனம் சேவிக்கையில் 'உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்னும் தொடரை ஒருமுறை சொல்லி நிறுத்தாமல், எம்பெருமான் தம்பால் இரக்கம் கொண்டு கடைக்கணித்துத் தம் குறைகளையெல்லாம் போக்கி உய்வித்தருளல் வேண்டும் என்னும் வேண்டுகோள் புலப்பட, 'நோக்காய்-நோக்காய்' என்று பலகாலும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, 'மேல்வரிக்குப் போக மாட்டாமல், தம்வயம் இழந்து நின்றார்.

---

(1) "The millions are awake enough for physical labour; but only one in a million is awake enough for effective intellectual exertion, only one in a hundred millions to a poetic rapture or divine life."

—HENRY DAVID THOREAU,
Where I Lived and What I Lived For.

அப்போது அத்திரளில் வீற்றிருந்த அவர்தம் திருத் தந்தையாரான ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர் எழுந்திருந்து, ‘ பிள்ளாய் ! நீ செய்வது என் ? எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி, இங்ஙனே ‘ நோக்காய் நோக்காய் ’ என்று பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ ? அழகிய மடற்றைத் தந்து, நல்ல பாடலைத்தந்து, மற்றும் பொருட் செல்வம் மக்கட்செல்வம் முதலிய செல்வங்களை எல்லாம் எம்பெருமாள் நினக்குத் தந்தருளி யிருக்க, அவர் ஒன்றும் செய்யாதவர்போல் நினைத்து, இன்னமும் நோக்காய், நோக்காய் என்றால், இஃது என்னே ? நன்றி கொன்ற அபசாரமாம் அன்றோ ? மேலே பாடுக ! என்று பணித்தருளினார் ” என்பது வரலாறு.

முடிவுரை :

இவ்விரு பெருமக்களின் திருவுளப் பாங்கு இருந்தபடியையும், இவ்விருவரும் வெவ்வேறு வகையில் இப்பாடற் பொருளில் தோய்ந்து ஈடுபட்ட திறத்தினையும், இவ்வரலாற்றுச் சுவை நிகழ்ச்சி உணர்த்துதல் காணலாம். அருளிச் செயற் பாசுரங்களில் நாம் எங்ஙன மெல்லாம் அன்பு கொண்டு ஈடுபட்டு அநுப வித்தல் வேண்டும் என்பது, இதனுற் புலனு கும். “ சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்காதார் மனத்திருளை வாங்காதான் இறை வன் ” என்று குறிப்பிடுகின்றுர் திருநாவுக்கரசர். சொற்களைச் சிறந்த வரிசையில் அமைப்பது உரைநடை ; சிறந்த சொற்களைச் சிறந்த முறை யில் அமைப்பது நல்ல இனிய கவிதை (2). சிறந்த கவிதைகளில், சிறந்த சொற்கள் நிறைந்த பொருள் நலங்களுடன் அமைந்து விளங்கும்.

“ எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக் களையுணர்த்திக் கொண்டு செல்ல வல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்ருகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டிருக்கும். கவிஞன், கருதியதும் கூறியதும் ஒரு கருத்தே யாயினும், அக்கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய கருத்துக்களையும், தன்பாற் பொலியத் தோற்று வித்துக் கொண்டு இனிது திகழும். ” (3). ஆத லின், நாம் கவிதையின் சொற்களுக்கு மேல் நோக்காகப் புலப்படும் பொருளை உணர்ந்தால் மட்டும் போதாது. சொற்களின் புறத்தும் அகத்தும் பரவி விரவிக்கிடக்கும் சிறப்புப் பொருள்களையும், குறிப்புப் பொருள்களையும் கூட, ஒருசேர நாம் நுனித்து நோக்கியுணர்ந்து சுவைத்தல் வேண்டும். இவ்வுண்மையே “ சொற்பாவும் பொருள் ” (பாவுதல்-பரவுதல்) என்பதனுல் வலியுறுத்தப் பெற்றது. அங்ஙனம் சொற்பாவும் பொருள் தெரிந்து சுவைத்தால், அது நம்மையும் நாம் மறந்து எல்லையற்ற இன்பவுணர்வு வெள்ளத்தில் மிதந்தும் ஆழ்ந் தும் திளைத்து மகிழச் செய்விக்கும். இத்தகைய இணையற்ற இன்பவுணர்வு எய்தித் திளைத்தலே “ தூங்கல் ” எனச் சுட்டப்பெற்றது. எனவே, “ சொற்பாவும் பொருள் தெரிந்து தூங்கல் ” என்னும் கவிதையநுபவம் இணையதென்பதனை, இதனுல் நாம் இனிதுணர்ந்து, அதனை நாம் பெற முயல்வோமாக !

—ஆசிரியர்

(2) “ Words in the best order is prose ;
The best words in the best order is poetry”.

—S. T. COLERIDGE,
Table Talk

(3) “ The proof of the purest poetry is that its meaning is inexhaustible, and, not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself. or rather to expand into something boundless which is only focussed in it.”

—Prof. A. C. BRADLEY,
Oxford Lectures on Poetry.



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்திரு தாயுமானவர் திருக்கோயிலில்
நிகழ்ந்த திருமண மண்டபக் கால்கோள் விழாவில், உள்ளாட்சித்துறை
அமைச்சர் மாண்புமிகு அன்பில் பெ. தர்மலிங்கம் அவர்களும்,
அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பர் அவர்களும்
பிற பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்

கோவைமாவட்டம், அவிநாசி, அருள்திரு அவிநாசி லிங்கேசுவரர் திருக்கோயில்
இராசகோபுரத் திருப்பணிக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு
திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டு விழா நிகழ்த்துதல்.

திருவாரூரில் நடைபெற்ற திரு. வி. க. சிலைத் திறப்புவிழாவில், தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C. அவர்கள் தலைமையில், பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரையார், M A. L.T. அவர்களும், திருமதி. கா. அப்பாதுரை அலமேலு அம்மையார் அவர்களும், உரை நிகழ்த்துதல்2—12—73)

சங்கரநயினார்கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் சார்பில், 5—12—73 அன்று மதுரைத் துணை ஆணையர் திரு. எம். ஏ. முருகேசன், பி. ஏ., பி. எல்., அவர்கள் சித்த மருத்துவமனை திறந்துவைக்க, விழாத் தலைவர் அறங்காவலர் திரு வை. பழனிசாமி நாயக்கர் பேசுதல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Super Power Press, Madras-1. Editor. N. R. Murugavell, M.A.,M.O.L.